
கல்கி
அவசர யுகத்தின்
ஆடைகள்
KALKI 4.3.90
ரூ. 2.50

இப்போது, விம் ஏறக்குறைய பாதிவிலையிலே...



பேரச் சலுகை அளிக்கும் (கேரிபேக்) தூக்குப் பை.



இப்போது ஏறக்குறைய பாதி விலையில் கிடைக்கிறது நீங்கள் விரும்பும் விம்... பணமிச்சம் தரும் (கேரி பேக்) தூக்குப் பைகளிலே!

ஒப்பிட்டுப் பாருங்களேன்

பேக்	100 கிராம் விலை
500 கிராம் கேனிஸ்டர்	135 பைசா
2.5 கிலோ கேரிபேக் பை	75 பைசா

உபயோகிப்பிலேயோ மேலும் சிக்கன லாபம் கிடைக்கிறது இதில் உங்களுக்கு. ஒரு துளியளவு விம் உபயோகமானாலும் நுரை கொழித்து பிசுக்குகளை விலக்க என வெளியேறுகிறது கறைகளாக... அதிகப் பாத்திரங்களைத் துலக்குகிறது ஒளிமினுக்க.

விரைந்தோடி, இன்றே வாங்குவீர் புதிய விம் கேரிபேக் உங்கள் தேவைக்குகந்த அளவிலே (தேர்ந்தெடுக்கக் கிடைப்பவை 500 கிராம், 1 கிலோ, அல்லது 2.5 கிலோ பேக்குகள்)

ஒரு துளி விம் தரும் துலக்கம் அதிகப் பாத்திரங்கள் ஒளிமினுக்கும்



டைப்பிஸ்ட் ஒரு தீவு அல்ல!

''எல்லா நிறுவனங்களிலும் பத்து முதல் பதினைந்து சதவிகித வேலை வாய்ப்புக்கள் டைப்பிஸ்ட் மற்றும் ஸ்டெனோக்களுக்குத்தான். ஆனால், எங்களை அணுகும் பல நிறுவனங்களுக்கு நாங்கள் — இத்துறையில் சிறந்த ஊழியர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பி உதவ முடிவதில்லை. இதற்குக் காரணம், அனேகம் பேர் ஷார்ட்ஹாண்ட், டைப்பிங் பரீட்சைகளில் தேர்வு பெற்றாலும் நடைமுறையில் தங்கள் அறிவைச் சரியாகப் பயன்படுத்தாமல் இருப்பதுதான்'' — என்கிறார் சபரி காலேஜின் டைரக்டர் மகாதேவன். இத்துறையில் வெற்றிகரமாகப் பணிபுரிய அவர் தரும் சில நடைமுறை யோசனைகள் இதோ....

●● காலையில் அலுவலகம் வந்ததுமே மேஜையை ஒழுங்காக்கிக் கொள்ளுங்கள். முந்தைய தினம் முடித்த வேலைகளைத் தனியே பிரித்து இன்று செய்ய வேண்டியவற்றைத் தனியே எடுத்து வைத்துக் கொள்ளுங்கள்.

●● டிக்டேஷனுக்குத் தேவையான காகிதம், பாட் முதலியவற்றைத் தயாராய் வைத்துக் கொள்ளுங்கள். பென்சில்களைச் சீவி வைத்துக் கொள்ளுங்கள். மேலதிகாரியை விட ஐந்து நிமிடங்கள் முன்னதாக அலுவலகம் வந்தால் சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டு இந்தச் சின்னப் பணிகளைச் செய்து கொள்ளலாம்.

●● டைப் செய்து முடித்த கடிதங்களின் மீது 'X' குறியிட்டுத் தனியாக வைத்து விடுங்கள்.

●● மேலதிகாரி எந்த விஷயம் தொடர்பாக அழைக்கிறாரோ அது சம்பந்தமான விவரங்களைச் சேகரித்து உடன் எடுத்துச் செல்லுங்கள். உங்களுக்குத் தொடர்பு இல்லாத வேறு இலாகா விஷயம் என்பதால் அதைப் பற்றிய அடிப்படை அறிவு கூட இல்லாமல் நீங்கள் டிக்டேஷன் எடுத்துக் கொள்ளச் சென்றால் தவறுகள் நிறைய வரும். ஒரு பெரிய அலுவலகத்தில் நீங்கள் தீவு போல் ஒதுங்கி உங்கள் வேலையைச் செய்ய முடியாது. மாறாக, தேவையான தகவல்களுடன் நீங்கள் ஆயத்தமாய் இருந்தால் மேலதிகாரி கேட்கும் குறிப்புகளை, நேரத்தை வீணாக்காமல் 'டக்'கென்று எடுத்துக் கொடுக்கலாம்.

●● டிக்டேஷன் எடுத்துக் கொண்டிருக்கும் போது மேலதிகாரிக்கு போன் வந்தாலோ அல்லது வேறு தடங்கல் ஏற்பட்டாலோ, உங்கள் எண்ணங்களைச் சிதற விடாமல், இதுவரை எடுத்துக் கொண்ட சுருக்கெழுத்துக் குறிப்பை ஒருமுறை படித்துப் பார்த்துக் கொள்ளுங்கள். ஏதேனும் புரியாவிட்டால் உடனே மேலதிகாரியிடம் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள். சிலருக்கு டிக்டேஷன் இடையே குறுக்கே பேசுவது பிடிக்

காது. இதைத் தெரிந்து வைத்துக் கொண் டால் சந்தேகங்களை இறுதியில் கேட்டுத் தெளிவு பெறலாம். சந்தேகம் கேட்கத் தயங்கி, தப்பாக டைப் அடித்தால் நேரம் வீண்; கோபத்தைக் கிளறுவீர்கள். தேவைப் பட்டால் அகராதியைப் பார்த்துப் பயன் பெறலாம்.

●● டைப் அடித்த கடிதங்களைப் படித்துப் பார்த்த பிறகே கையெழுத்துக்குக் கொண்டு போங்கள். பெயர், விலாசம் ஆகியவற்றை ஒரு முறைக்கு இருமுறை சரிபார்க்கவும்.

●● எல்லாக் கடிதங்களுக்கும் பொதுவாக ஒரு 'செக் லிஸ்ட்' வைத்துக் கொள்ளவும். தேதி, பெறுநர் — விடுநர் விலாசங்கள், பொருள் அல்லது சப்ஜெக்ட், கையெழுத்து, நகல், இணைப்புக்கள் என்று பட்டியலிட்டு ஒவ்வொரு கடிதம் டைப் அடிக்கும் போதும் இந்தப் பட்டியல்படி சரிபார்க்கலாம்.


●● தவிர, அவ்வப்போது எழும் வேலை களைக் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். அரைமணி அல்லது ஒரு மணிக்கு ஒரு முறை இந்தப் பட்டியலை எடுத்துப் பார்த்து, முடிந்த வேலைகளை 'டிக்' அடித்து விடுங் கள். 'எதையாவது மறந்து விடுவோமோ' என்ற பயம் அறவே இருக்காது.

சாந்தோம் கல்கரல் அகாடமியில் தட்டெழுத்து, சுருக்கெழுத்துப் பயிற்சி யாளர்களாகப் பணிபுரியும் ஷோபா நிச்சானியும் ஏ. எம். சுப்பிரமணியமும் மேலும் சில கருத்துக்களைச் சொன் னார்கள்:

●● டைப்பிஸ்டுகள் பாதங்களைச் சேர்த்து வைத்து, நிமிர்ந்து உட்கார வேண் டும். டைப்ரைட்டர் சற்று உயரமான மேஜை யில் இருப்பது நல்லது. டைப் அடிக்கும் போது கண்கள் பக்கத்தில் உள்ள குறிப்புக் களைத்தான் பார்க்க வேண்டும். டைப் ரைட்டரையோ டைப் ஆகும் காகிதத் தையோ பார்க்கக் கூடாது. ஷார்ட் ஹாண்ட் குறிப்புகளை அரை அங்குல அளவுக்குள் இலேசாக எழுத வேண்டும். அடித்தாள் வரை அச்சு விழும்படி அழுத்தி எழுதக் கூடாது.

●● **Prominent, Permonent, Pre eminent** போன்ற சொற்களின் குறியீடுகள் சுருக்கெழுத்தில் ஒன்றையொன்று ஒத்திருக்கும். ஏமாந்து விடக் கூடாது. ''ஸ்பெல்லிங்'' கவனித்தால் போதாது. கடிதம் அர்த்தமாகிறதா, அபத்த மாகிறதா என்றும் பார்க்க வேண்டும்.

— என். வி.



மண்டேலா சென்னையில் சிறை வைக்கப்பட்டிருந்தால்...

தென் ஆப்பிரிக்காவில் எப்படியோ? தெரியாது... ஒரு வேளை நெல்சன் மண்டேலா நம் சென்னையிலேயே இருபத்தெட்டு ஆண்டுகளைச் சிறையில் கழித்து விட்டு வெளியே வந்திருந்தால் எப்படியிருந்திருக்கும்...? ஒரு சின்னத்தனமான கற்பனையின் பலன்:

காலை ஐந்து மணி:

வின்னி மண்டேலா: மணி அஞ்சாச்சு... இன்னும் தூங்கிட்டிருந்தா எப்படி? எழுந்து போய்ப் பால் வாங்கிட்டு வாங்க...

மண்டேலா: என்ன, பால் வாங்கிட்டு வர்றதா? பால்காரன் வர மாட்டானா?

வின்னி: அதெல்லாம் இருபத்தெட்டு வருஷத்துக்கு முந்தின கதை. இப்பல்லாம் குறைஞ்சது ஒரு மணி நேரமாவது க்யூவிலே நின்னு பால் பாக்கெட் வாங்கிக்கிட்டு வந்தாத்தான் காப்பி! நல்ல வேளை, இப்பவாவது உங்களை ரிலீஸ் பண்ணாங்களே, மசமசன்னு நிக்காம போய் வாங்கிட்டு வாங்க...

காலை எட்டு மணி:

மண்டேலா: அப்பாடி...! இருபத்தெட்டு வருஷத்துக்கப்புறமா நல்லா எண்ணெய் தேய்ச்சுண்டேன்.... சீக்கிரம் தண்ணி எடுத்து வை, குளிக்கணும்.

வின்னி: என்னைக் கேட்காம உங்களை யார் எண்ணெய் தேய்ச்சுட்டு நிக்கச் சொன்னது? இன்னிக்குத் தண்ணி லாரி வராது. நாளை வரைக்கும் அப்படியே ஊறிண்டு நில்லுங்க...!

பகல் பத்து மணி:

வின்னி: எங்கே கிளம்பிட்டீங்க?

மண்டேலா: சும்மா ஊரைச் சுத்திப் பார்க்கலாம்னுதான்...

வின்னி: என் துணையில்லாம எங்கேயும் போக வேண்டாம். டவுன் பஸ்ஸைப் பத்தி உங்களுக்கு ஒண்ணும் தெரியாது.

மண்டேலா: என்னடி பெரிய டவுன் பஸ்...? என் சர்வீஸிலே நான் எத்தனை டவுன் பஸ் பார்த்திருப்பேன்?

வின்னி: அந்த சர்வீஸையெல்லாம் குப்பையிலே போடுங்க. ஏ சர்வீஸ், பி சர்வீஸ் கிட்டேயெல்லாம் உங்க பாச்சா பலிக்காது.

பிற்பகல் மூன்று மணி:

(எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில்)

மண்டேலா: எனக்கின்னும் இண்டர்வியூ கார்டே வரலையே...?

ஆபீஸ் கிளார்க்: சர்தான் போய்யா...! பதிவு பண்ணி இருபத்தெட்டு வருஷம்தான் ஆகியிருக்கு. அதுக்குள்ளே உனக்கு இண்டர்வியூ கார்ட் அனுப்புவாங்களா...?

இரவு எட்டு மணி:

வின்னி: என்னாச்சு...?

மண்டேலா: பேரக் குழந்தை அழுகுது...

வின்னி: கொசு கடிச்சிருக்கும்... நம்ம பொண்ணு குழந்தையா இருக்கும்போதும் அதுதானே கடிச்சுது...!

மண்டேலா: அப்பாடி... இருபத்தெட்டு வருஷத்திலே இதுமட்டுமாவது மாறாமல் இருக்கே...!

அகிலா கார்த்திகேயன்

‘உரிமைகளுக்குப் போராட உதவுவோம்!’



சலீமா என்ற பெண்மணி ஒரு பிரபல சீட்டுக் கம்பெனியில் 250 ரூபாய் பிரிவில் சேர்ந்து பணம் கட்ட ஆரம்பித்தார். நூறு மாதங்கள் தொடர்ந்து கட்ட வேண்டும்; ஆனால் இடையே சில மாதங்களுக்கு அவரால் தொகையைச் செலுத்த முடியாமல் போயிற்று. பிறகு பத்து மாதச் சீட்டுத் தொகையை மொத்தமாகச் செலுத்தி ரசீது பெற்றார் சலீமா. சீட்டு முடிய ஐந்தே மாதங்கள் மீதியிருந்தபோது சீட்டுக் கம்பெனி அவருக்குக் கடிதம் எழுதியது:

‘உரிய காலத்தில் பணம் கட்டாததால் உங்கள் பெயர் நீக்கப்பட்டுள்ளது’ என்று தெரிவித்த அக்கடிதத்தைக் கண்டு அதிர்ந்தார் சலீமா. நேரில் சென்று விசாரித்ததில், தாம் மொத்தமாகச் செலுத்திய தொகை சீட்டு நிறுவனக் கணக்கில் வரவு வைக்கப் படவில்லை என்பது சலீமாவுக்குத் தெரிய வந்தது. மதுரையில் வசிக்கும் சலீமா, சென்னையில் உள்ள ‘கன்ஸ்யூமர் ஆக்ஷன் க்ரூப்’ உதவியை நாடினார்.

இந்த நுகர்வோர் அமைப்பு சலீமா சார்பில் சீட்டுக் கம்பெனியுடன் வாதாடியது. ‘கணக்கில் வரவு வைக்கப்படாத தொகை, தாமதமாகப் பணம் செலுத்தியதற்கான அபராதத் தொகையாகக் கொள்ளப்பட்டது’ என்று சீட்டுக் கம்பெனி வாதிட்டது. 15, 783 ரூபாய் செலுத்திய சலீமாவுக்கு 11,142.25 ரூபாய் மட்டுமே திருப்பித் தர முடியும் என்றது.

சீட்டுக் கம்பெனி விதிகளின்படி தவணை தவறிய தேதியிலிருந்து ஒரு மாதம் அவகாசம் அளித்து உறுப்பினரை நீக்கிவிட வேண்டும். ஆனால் இந்த நிறுவனமோ தவணை தவறி ஆறு மாதங்களுக்குப் பிறகு உறுப்பினரிடம் மொத்த தொகையைப் பெற்றுக்கொண்டுள்ளது. பெற்றுக்கொண்ட தொகைக்கு ரசீது கொடுக்கப்பட்டாலும் கணக்கில் வரவு வைக்காதது சட்ட விரோதமாகும். எனவே, ஐந்து சதவிகித வட்டித் தொகையைக் கழித்துக் கொண்டு மீதிப் பணத்தைச் சலீமாவுக்குத் திருப்பித் தர வேண்டும் என்று கன்ஸ்யூமர் ஆக்ஷன் க்ரூப் வாதிட்டது. தவறினால் வழக்குத் தொடரப்படும் என்றும் கூறியது. உடனே அந்தச் சீட்டு நிறுவனம் 1250 ரூபாய் வட்டித் தொகையை மட்டும் கழித்துக் கொண்டு 14,533 ரூபாயைச் சலீமாவிடம் திருப்பிக் கொடுத்தது.

உலக வனவிலங்குகள் பாதுகாப்பு அமைப்பான **World Wildlife Fund** நிறுவனம் சில வனவிலங்குகளை அவற்றின் இயற்கை நிலைக் களன்களுக்குச் சென்று படமெடுத்தது. ஃபிலிம் சுருளை டெவலப் செய்வதற்காக ஒரு பிரபல போட்டோ நிறுவனத்





● அலுவலகத்தில் சுறுசுறுப்பாய் வேலை நடக்கிறது.

இடம் கொடுத்தது. அந் நிறுவனத்தின் அஜாக்கிரதை காரணமாகப் படச் சுருள் காணாமல் போனபோது, படச் சுருளின் மதிப்புக்கு மட்டும் நஷ்ட ஈடு வழங்க முன் வந்தது போட்டோ நிறுவனம். ஆனால் **WWF** ஒப்புக்கொள்ளவில்லை. **கன்ஸ்யூமர் ஆக்ஷன் க்ரூப்** இடம் உதவி கோரியது. வனவிலங்குகளைப் படம் எடுக்க கானகத்துக்குள் பிரயாணம் செய்ய வேண்டும். பல நாட்கள் தங்கி, பொறுமையாகக் காத்திருக்க வேண்டும். சிரமங்களுடன் செலவும் அதிகம். அதனால் தொலைந்துபோன படச் சுருளில் இருந்த படங்களை எடுப்பதற்காக ஆன பிரயாணச் செலவு மற்றும் விடுதிச் செலவு போன்றவற்றைப் புகைப்பட நிறுவனம் நஷ்ட ஈடாகத் தர வேண்டும் என்று நுகர்வோர் குழு ஆதாரங்களுடன் எடுத்துச் சொன்னது. அதன்படி குறிப்பிட்ட தொகையை போட்டோ நிறுவனம் **WWF** க்கு அளித்தது.

கடந்த நவம்பர்—டிசம்பரில் சர்க்கரை விலை கிடு கிடுவென்று உயர்ந்தபோது 'மாஜிக் சக்கர்' 'மாஜிக் கிங்' என்ற தயாரிப்புகளைக் குறைந்த விலைக்கு வாங்கி உபயோகித்தனர் சில ஐஸ்க்ரீம் மற்றும் பன்னீர் சோடா தயாரிப்பாளர்கள். சர்க்கரைக்குப் பதிலாக உபயோகிக்கப்பட்ட இந்த ரசாயனப் பொருட்கள் **electroplating** தொழிலுக்கு மட்டுமே உகந்தவை என்பது அவற்றின் பாக்கிங் மீதே குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும் இதனை உணவுப் பொருட்களுடன் கலந்து வியாபாரம் செய்து வந்தனர் சிலர். விழிப்புணர்ச்சியுடைய ஒரு நபர் இதைக் குறிப்பிட்டு ஒரு தினசரியில் ஆசிரியருக்குக் கடிதம் எழுதியிருந்தார். அக் கடிதத்தை நகல் எடுத்துப் பொது சுகாதாரத் துறை இயக்குனருக்கு அனுப்பி வைத்தனர் **கன்ஸ்யூமர் ஆக்ஷன் க்ரூப்** உறுப்பினர்கள். உடனடியாகச் சுகாதாரத் துறைத் துணை இயக்குனர்கள், பல்வேறு உணவுத் தயாரிப்புகளைத் திடீர் சோதனைக்கு உள்ளாக்கினர்.

சென்னையில் இயங்கி வரும் கன்ஸ்யூமர் ஆக்ஷன் க்ரூப் என்ற நுகர்வோர் அமைப்பின் சிறப்பு, தனி நபர் மற்றும் ஸ்தாபனங்களுக்கு உதவுவதோடு பொதுப் பிரச்னைகளுக்காகவும் போராடுவதுதான்.

'ப்ரெஷர் குக்கர் வெடித்தது,' 'தெருவில் குப்பை கூட்டுவதில்லை,' 'புதிதாக வாங்கிய கலர் டீ.வி.யில் கோளாறு,' என்பன போன்ற தனி நபர் குறைகளைச் சம்பந்தப்பட்டவர்களிடம் எடுத்துச் சொல்லி வாதாடுகிறது ஒருபுறம். மறுபுறம், அன்றாட வாழ்வில் எல்லோரையும் பாதிக்கும் பொதுப் பிரச்னைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு போராடுகிறது.

●● சென்னை நகரின் குடிநீர்ப் பிரச்னையை அலசி ஆராய்ந்து அதிகாரிகளுக்கு ஆலோசனைகள் தெரிவித்துள்ளது.

●● ரத்த வங்கிகளுக்கு உரிமைகள் வழங்கும் முறைகள், அந்த வங்கிகளில் நடக்கும் கோல்மால்கள், அவற்றில் வைப்பில் உள்ள ரத்தத்தின் தரம் மற்றும் சுகாதாரம் என்று ஆராய்ச்சியில் ஈடுபட்டு முடிவுகளைத் தெரிவித்துள்ளது.

●● தமிழ்நாடு மின்வாரியம் இன்னும் சிறப்பாகச் செயல்பட பல ஆலோசனைகளை, ஆய்வுகளின் அடிப்படையில் தெரிவித்துள்ளது.

●● ஒத்த குறிக்கோள் உள்ள வேறு சில நிறுவனங்களுடன் இணைந்து, சென்னை நகரின் மையத்தில் இருந்த பதினெட்டு ஏக்கர் திறந்தவெளி நிலம், ஐந்து நட்சத்திர ஹோட்டல் கட்டுவதற்கென தனியாருக்கு விற்கப்படுவதை எதிர்த்துப் போராடியது.

●● **Town and Country Planning Act** என்ற

மாதம் ஒரு தொகுதி

வீரப்பாண்டித் தொகுதியை அலசப்போகிறோம்!

கல்கி 'மாதம் ஒரு தொகுதி' திட்டத்தின் கீழ் நடந்த முதல் குலுக்கலில் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதி, சேலம் மாவட்டத்திலுள்ள வீரபாண்டித் தொகுதி.

தி. மு. க. எம். எல். ஏ.வான பி. வெங்கடாசலம், தமக்கு அடுத்தபடியாக வாக்குகள் பெற்ற ஜெ. அணி வேட்பாளரைவிட 4,141 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றிருப்பவர்.

தம்மை வெற்றிபெறச் செய்த வீரபாண்டித் தொகுதி மக்களுக்கு ஆளுங் கட்சி எம். எல். ஏ வான பி. வெங்கடாசலம் என்ன செய்திருக்கிறார்? கொடுத்த வாக்குறுதிகளை எந்த அளவுக்கு நிறைவேற்றி வருகிறார்? இவற்றையெல்லாம் நாங்கள் ஆராயப் போகிறோம். உங்கள் சார்பாக அவரிடம் கேள்விகள் கேட்கப் போகிறோம்!

எனவே, வீரபாண்டித் தொகுதியிலுள்ள அனைவரும் தங்கள் தொகுதி எம். எல். ஏ.யிடம் தாங்கள் கேட்க விரும்பும் கேள்விகளை எங்களுக்கு எழுதி அனுப்பலாம். அத்துடன் அவர் செய்து வரும் சிறப்புப் பணிகள் ஏதேனும் இருந்தால் குறிப்பிட்டு எழுதலாம். தொகுதியின் அபிவிருத்திக்கு உங்கள் ஆலோசனைகளையும் வழங்கலாம்.

நீங்கள் எழுதும் அத்தனை விஷயங்களையும் அவரிடம் எடுத்துச் சொல்வோம்; பேசுவோம்; கேள்விகள் கேட்போம். பிறகு தொகுதிக்கு நேரடியாக வந்து நிலைமைகளை ஆராய்வோம்.

இறுதியில், எங்கள் அனுபவங்களை ஏப்ரல் 15 — ஆம் தேதி கல்கி சித்திரைச் சிறப்பிதழில் வெளியிடுவோம்.

வீரபாண்டித் தொகுதி கல்கி வாசகர்களின் கடிதங்கள் கல்கி அலுவலகத்துக்கு வந்து சேர வேண்டிய கடைசி தேதி: மார்ச் 14

உறையின் மேல் 'மாதம் ஒரு தொகுதி' என்று மறக்காமல் குறிப்பிடுங்கள். உடனே எழுதுங்கள். கல்கி ஏற்கும் இந்த சமுதாயப் பணி வெற்றி பெற ஒத்துழைப்புக் கொடுங்கள்.

— ஆசிரியர்



கட்டட விதிகள் சட்டத்தின் 113 வது பிரிவின் கீழ், அச் சட்டத்தின் எந்த விதியையும் மீறும் உரிமை சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு இருந்தது. இதனால் பல சட்ட விரோத நடவடிக்கைகள் நடைபெற்றன. 113 வது பிரிவை எதிர்த்து உச்ச நீதி மன்றத்துக்கு மனு செய்தது நுகர்வோர் குழு. உடனே உச்ச நீதி மன்றம், தமிழக அரசு, எம்.எம்.டி.ஏ, சென்னை மாநகராட்சி ஆகியவற்றுக்கும் சட்ட மீறலுக்கு அனுமதி பெற்ற 64 நபர்களுக்கும் நோட்டீஸ் விடுத்தது.

●● சென்னையில், கூவம், அடையாறு நதிகளில் கழிவு நீரும் ஆலைக் கழிவுகளும் நேரடியாகக் கலந்து சுற்றுப்புறச் சூழலுக்கு ஆபத்து விளைவிப்பதைக் குறித்து ஒரு கருத்தரங்கத்தில் பங்கேற்று, பல ஆலோசனைகளைத் தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டின் அட்வகேட் ஜெனரலாக விளங்கிய கோவிந்த் சுவாமிநாதனின் தலைமையில் அக்டோபர் 1985 இல் நிறுவப்பட்டது நுகர்வோர் குழுவுக்கான அறக்கட்டளை. இதன் நிர்வாகப் பொறுப்பை வகிப்பவர் அனுராதா வாசுதேவ். அவரும், அவரது அலுவலக ஊழியர்களும் அன்றாட அலுவல்களைக் கவனிக்கின்றனர். அறங்காவலர்களும் உதவுகின்றனர். தவிர, குடும்பத் தலைவிகள், வக்கீல்கள், மாணவர்கள் என்று பல்துறை வல்லுனர்கள் தேவை ஏற்படும் சமயங்களில் உதவி வருகின்றனர்.

அனுராதா வாசுதேவை, சென்னை, மந்தைவெளி, 144, வெங்கடகிருஷ்ணா சாலையில் உள்ள **Consumer Action Group** அலுவலகத்தில் சந்தித்தோம்.

"எங்கள் உதவியைக் கோரும் எவருக்கும் கட்டணம் விதிக்காமல் உதவுவோம். ஆனால் பிரச்னைகளுடன் வருவோர் தங்கள் அளவில் முயற்சி செய்து பார்த்துவிட்டுப் பிறகு எங்களிடம் வந்தால் நல்லது. பொறுப்பை எங்கள் தலையில் கட்டிவிட்டுச் சாய்ந்து உட்காரலாம் என்று நினைப்பவர்களை நாங்கள் ஊக்குவிப்பதில்லை. சிலர் 'இது சொத்தை, அது சொள்ளை' என்று ஆயிரம் குறை சொல்வார்கள். ஆனால் குறிப்பிட்ட நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிட்ட புகார் இருந்தாலன்றி நாங்கள் உதவ முடியாது.

'எங்களைப் போன்ற பல அமைப்புக்கள் பெருக வேண்டும். நாடெங்கும் விழிப்புணர்ச்சி வர வேண்டும். நுகர்வோர் அமைப்புக்களைத் துவங்க விரும்புவோருக்கு வழிகாட்டி உதவவும் நாங்கள் தயாராய் இருக்கிறோம்' என்று கூறினார் அனுராதா வாசுதேவ்.

— எஸ். ஆர்.

படம்: ஸ்ரீஹரி

ஆயுத அரசியலின் கொடுமைக்குச் சோகச் சாட்சியங்கள்!

"இலங்கை மட்டக்களப்புப் பகுதியில் வசித்தவன் நான். சொந்தமாகக் கார் வைத்திருந்தேன். அதை வாடகைக்கு விட்டு, மாதம் ஆயிரத்தைந்நூறு ரூபாய் வரை சம்பாதித்துப் பிழைப்பு நடத்தி வந்தேன். ஒருமுறை, வாடகைக்குக் கொடுத்த 'கார்' உரிய தேதியில் திரும்பி வந்து சேரவில்லை. நண்பர்களிடம் விசாரித்தேன்; பல இடங்களில் தேடினேன். ஊருக்கு வெளியே ஒரு கார் எரிந்து கிடப்பதாகச் சிலர் கூறினார்கள். சந்தேகப்பட்டுப் போய்ப் பார்த்தேன்; அது என் கார்தான்! முக்கால்வாசி எரிந்த நிலையில் பரிதாபமாகக் காட்சியளித்தது.

"இந்தக் காரியத்தை யார் செய்திருப்பார்கள் என்று அனுமானிக்க முடியவில்லை. அந்த அதிர்ச்சியிலிருந்து 'மீள்வதற்கு முன்னரே எங்கள் குடும்பத்தை மற்றொரு சோகம் தாக்கியது. எங்களுடன் கலகலப்பாகப் பேசி விட்டுக் கிளம்பி வெளியே போன எனது மைத்துனர் சுட்டுக் கொல்லப்பட்டார். இனி தொடர்ந்து இலங்கையில் இருந்தால் உயிருக்கு ஆபத்து என்றுதான் மனைவியுடன் கிளம்பி இந்தியா வந்து சேர்ந்தேன். நாங்கள் வந்த படகில் எங்களைத் தவிர 44 பேர் வந்தனர். பயணத்துக்குக் கட்டணம் ஏதும் செலுத்தாமல், நண்பரின் உதவியுடன் வந்து சேர்ந்தோம்..."

— இவ்வாறு கூறுபவர் 24 வயது இளைஞர் ஸ்ரீ. நடந்தவற்றைக் குறித்துச் சோகமும் தற்போதைய பாதுகாப்பான நிலையைக் குறித்து [illegible] கலங்க[illegible] தொனியில் பேசினார்.

திருச்சி – புதுக்கோட்டை சாலையில் உள்ள கொட்டப்பட்டு அகதி முகாமுக்கு வந்துள்ள 234 இலங்கை அகதிகளுள் ஒருவர் ஸ்ரீ. முகாமைச் சுற்றி வந்த போது வேறு சிலரிடமும் பேசினோம்.

யாழ்ப்பாணத்தில் வசித்த இருபத்தைந்து வயது இளைஞர் செல்வன் கூறினார்: "இலங்கை ராணுவத்தாலும் போராளிக் குழுக்களாலும் எங்களுக்கு அடிக்கடி தொல்லைகள் ஏற்படும். வீடுகள் தீ வைக்கப்படுவதும் கடைகள் சூறையாடப்படுவதும் ஏறக்குறைய அன்றாட நிகழ்ச்சிகளாகவே ஆகி விட்டன. நள்ளிரவிலும் துப்பாக்கி வெடிக்கும் சப்தம் கேட்கும்... ஒரே பீதிதான். அப்படியும் பல்லைக் கடித்துக் கொண்டு வாழ்க்கை நடத்த முயன்றோம். ஆனால், திடீரென்று என் தம்பி காணாமல் போனான். அவன் எந்த இயக்கத்திலும் சேர்ந்திருக்க மாட்டான் என்பது எனக்கு உறுதியாகத் தெரியும். அவன் அப்படிப்பட்டவன் அல்ல; ஆகையால் தீவிரவாதிகளால் அவன் கடத்தப்பட்டிருக்க வேண்டும் என்ற முடிவுக்குத்தான் வர வேண்டியிருந்தது. அவன் உயிரோடு இருக்கிறானா என்பது கூட தெரியவில்லை.

"இந்தச் சமயத்தில் எங்கள் பகுதியில் இருந்த அமைதிப்படையினர் என் பேரில் சந்தேகப்பட்டு, என்னைக் கூப்பிட்டு விசாரிக்கலா். இதைக் கவனித்த தீவிரவாதி



* திலீபன்: "படிப்பதற்காகத் தான் வந்தேன்."



* செல்வன்: "போனைத் தொடர்ந்து கொலைதான்..."



* ஸ்ரீ: "எனது கார் எரிந்து விட்டது..."

ஒருவர் என்னிடம் வந்து "நீ யார்? எதற்காக அமைதிப்படையினரிடம் பேசினாய்? எங்களைப் பற்றிய விவரங்கள் கூறினாயா?" என்று மிரட்டினார். "நான் யார் பற்றியும் துப்பு கொடுக்கவில்லை" என்று அவருக்கு உறுதியளித்தேன்.

"இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து எனக்குத் தீவிரவாதிக் கூட்டத்திலிருந்து ஃபோன் வந்தது. இரண்டு, மூன்று முறை தீவிரவாதிகளிடமிருந்து ஃபோன் வருவதும் அதைத் தொடர்ந்து ஃபோன் பேசிய அப்பாவி கொலை செய்யப்படுவதும் இலங்கையில் இப்போது ஒரு pattern ஆகவே ஆகி விட்டது. அதனால் ஃபோன் வந்ததுமே நான் கலவரப்பட்டு மனைவி குழந்தையுடன் இந்தியாவுக்கு வந்து விட்டேன்.

"அகதி முகாமில் பாதுகாப்பும் உணவும் கிடைக்கிறது. ஆனால் இப்படியே வாழ என் தன்மானம் இடம் கொடுக்கவில்லை. வேலை தேடிக் கொண்டிருக்கிறேன்."

செல்வனின் சுயகௌரவ உணர்வு நெஞ்சைத் தொட, சற்று தூரம் நடந்து சென்று திலீபனைச் சந்தித்தோம். தனது மாமாவுடன் தோணியேறி வேதாரண்யத்தில் வந்திறங்கியவன் இந்தப் பதின்மூன்று வயதுச் சிறுவன்.

"நான் ஐந்தாம் வகுப்பு படிக்கிறேன். அப்பா, அம்மாவைப் பிரிய மனமில்லாவிட்டாலும் படிப்பைத் தொடர்வதற்காகக் கிளம்பி வந்து விட்டேன். யாழ்ப்பாணச் சூழ்நிலையில் பள்ளிகள் எப்படிச் சரியாக இயங்க முடியும்....?" என்றான் திலீபன்.

அவன் பிஞ்சு முகத்தின் சோகத்தை மிஞ்சி விட்டது பத்தொன்பது வயதுப் புது மணப்பெண்ணின் தோற்றம். தமது பெயரை' வெளியிடவோ, புகைப்படம் எடுக்க அனுமதிக்கவோ விரும்பாத இந்தப் பெண்மணி நமது கேள்விக்குக் கலங்கிய கண்களுடன் பதில் கூறினார்.

"என் சொந்த ஊர் மெல்லா. ஆறாம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். என் கணவர் ஒரு துணிக்கடையில் பணியாற்றி வந்தார். அங்கு பயந்து பயந்துதான் வாழ வேண்டியுள்ளது. அதனால்தான் அகதிகளாக இங்கே வந்து சேர்ந்தோம்..."

இதற்கு மேல் பேச முடியாமல் அவர் தொண்டையில் துக்கம் அடைத்தது...

அவரை மேலும் கேள்விகள் கேட்டுப் புண்படுத்த விரும்பாமல் நகர்ந்தோம். சிறு சிறு குழுக்களாக இருந்த அகதிகளிடம் பொதுவாகப் பேசிக் கொண்டிருந்த போது கிடைத்த தகவல் நெஞ்சை உலுக்கியது:

அகதிகளை இந்தியாவுக்குக் கொண்டு சேர்ப்பது ஒரு வியாபாரமாகவே ஆகி விட்டதாம்! ஒரு நபருக்கு 250 ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதை விடக் குறைந்த கட்டணம் செலுத்தி வேறு படகில் செல்ல முற்படுவோர் ஈவு இரக்கமின்றிச் சுட்டுக் கொல்லப்படுகின்றனராம்!

உயிர்த் தப்பி ஓடி வரும் அப்பாவி மக்களை அச்சுறுத்திக் கொல்வது எப்படிப்பட்ட மிருகத்தனமான கொடுமை! ஆயுதப் பெருக்கத்தால் ஏற்படும் விபரீதங்களுக்கு, இலங்கையில் இன்று நடக்கும் சம்பவங்கள் சோகச் சாட்சியங்கள்.

— வி. சௌரிராஜன்

படங்கள்: உமா ஸ்டுடியோ.

டைரக்டர்

ஆரம்பமும் கேள்வி, முடிவும் கேள்வி

கே. பாலசந்தரின் இயக்கத்தில் உருவான டி.வி. தொடர் ஒன்று விரைவில் ஒளிபரப்பாகவிருக்கிறது. பெயர் — ரயில் ஸ்நேகம். வாஸந்தி எழுதிய 'ஒப்பந்தம்' என்கிற சிறுகதையே இதன் மூலக் கதை.

நிழல்கள் ரவி, கவிதா, ரகுநாத ரெட்டி, நரசிம்மன், வைரமுத்து, ஜேசுதாஸ், சித்ரா என்று பெரிய தலைகளையே போட்டிருக்கிறார், கே. பி. டி.வி.க்குத்தானே என்று காம்ப்ரமைஸ் செய்து கொள்ளவில்லை.



"ஒரு எபிஸோடின் துவக்கத்தில் எழுப்பப்படும் வினாவுக்கு, அதிலேயே விடையும் தர வேண்டும். அதே சமயம், அதன் முடிவில் இன்னொரு கேள்வியையும் எழுப்ப வேண்டும். இதுதான் டி.வி. தொடரின் அடிப்படை டெக்னிக்" என்று சொல்லும் கே.பி. "ரயில் சினேகம் என ஏன் டைட்டில்?" என்ற கேள்விக்கு "ரயில் சினேகத்துக்கு என்ன அர்த்தமோ, அதற்கு ஜஸ்ட் எதிரானதுதான் கதை" என்கிறார்.

— சந்துரு


நறுமணம் நிலவட்டும்...
வியர்க்குரு விலகட்டும்.
nycil
PRICKLY HEAT
POWDER
வியர்க்குருவை எதிர்த்திடும்.
லாவெண்டர், கோலோனின் நறுமணம் பரப்பிடும்.

புத்துணர்ச்சியும் பொலிவும் வழங்கும் ஹமாம்!




கண்டுகொள்வீர் ஹமாம் புரியும் ஜாலத்தை,
இதுவரை காணாத கூடுதல் புத்துணர்ச்சியும்
பொலிவும் உமக்கு. புதுமை குன்றாமல்
நீடித்துக் கமழும் நறுமணம். சொகுசான
நுரைவளம்—வழங்கும் என்றும் புதுமையான
ஹமாம். புத்துணர்ச்சியையும்
பொலிவையும் உணருவீர்.

ஹமாம்
குடும்ப சோப்



டாட்டா தயாரிப்பு

CLARION/B/T/23/203 TAM


ஏழாவது இரவு
19
கதை:
அபர்ணா நாயுடு
சித்திரம்:
எடுக்கிற ஒவ்வொரு முயற்சிக்கும் தடங்கல். கண்ணுக்குத் தெரியாமப் பின்னணியில ஒருவன்.. கண்ணுக்குத் தெரிஞ்சு இந்தப் போலீஸ் இன்ஸ்பெக்டர்...
அதனாலதான் நான் திட்டத்தை மாத்திட்டேன். அவுங்க மாதிரியே கண்ணுக்குத் தெரிஞ்சு ஒண்ணு... கண்ணுக்குத் தெரியாம ஒண்ணு.
புரியலையே!
சொல்றேன்... அந்த இன்ஸ்பெக்டரோட நோக்கமே நீ ஊரைவிட்டுப் போயிடணுங்கறது தான். இல்லையா?
ஆமாம். அதை ரொம்பத் தெளிவாகவே சொல்லிட்டார்.
அதனால, நீ இன்னிக்கு ராத்திரியே ஊருக்குப் புறப்பட்டுப் போயிடறே.
கதையையே மாத்தறியே! நான் போகிறதாக இல்லை. இந்த விவகாரத்துக்கு ஒரு முடிவு தெரியாமப் போகிறதாக இல்லை.









திட்டத்தை மேலும் விவரித்தாள். அவள் சொன்ன ஏற்பாடுகள் ரஞ்சனாவின் மனத்தினுள் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தின.

இம்முறை அவர்களுடைய நடவடிக்கைகளை யாரும் கண்டு கொள்ள முடியாது. நாலு நாட்களாக மேற்கொண்ட முயற்சிகள் வியர்த்தமாகிப் போனதைப் போல இம்முறை நடைபெறாது. ஆமாம், வசுமதியின் மரணத்துக்குக் காரணமானவனைக் கண்டுபிடித்துவிட முடியும்...

மிகுந்த நம்பிக்கையோடு அவள் ரயில் நிலையத்துக்கு வந்து சேர்ந்தாள். இறங்கி உள்ளே போனாள்.

பார்த்துக் கொண்டிருந்த ஒருவன் அவசரமாகப் பொதுத் தொலைபேசியை நோக்கிப் போனான்.

→ தொடரும்

சிறுசேமிப்புத்துறை

சேமிப்பின் மூலம் பிரமிக்கத்தக்க பரிசுகள்!

சிறுசேமிப்பில் முதலீடு–
வருமானவரியிலிருந்து
பாதுகாப்பு!


பரிசுப் பொருட்களின் விவரம்:

1 சூப்பர் பம்பர் பரிசு	- காண்டஸா கார்
1 முதல் பரிசு	- மாருதி கார்
5 இரண்டாவது பரிசுகள்	- ஹீரோ ஹோண்டா மோட்டார் சைக்கிள்
10 மூன்றாவது பரிசுகள்	- கலர் டிவி
20 நான்காவது பரிசுகள்	- 165 லிட்டர் ரெப்ரிஜிரேட்டர்
100 ஐந்தாவது பரிசுகள்	- 7½ லிட்டர் பிரஷர் குக்கர்
500 ஆறுதல் பரிசுகள்	- குவார்ட்ஸ் கலர் கடிகாரம்

- தேசிய சேமிப்பு பத்திரம் 8வது வெளியீடு
- தேசிய சேமிப்பு திட்டக் கணக்கு-1987
- பொது சேமநலநிதி
- இந்திரா சேமிப்பு பத்திரம்
- விவசாயிகள் சேமிப்பு பத்திரம்
- மாதாந்திர வருமானத் திட்டம்
- அஞ்சலக குறித்தகால முதலீடு

மேற்கண்ட சிறுசேமிப்புத் திட்டங்களில் ரூ.1000/- முதலீடு செய்வதன் மூலம் கிடைக்கும் வட்டியுடன் இலவச பரிசுக் கூப்பனை பெற்றிடுங்கள். இத்திட்டத்தில் எல்லா தனிநபர்களும் முதலீடு செய்யலாம்.

தேசிய சேமிப்பு திட்டக்கணக்கு-87ல் ரூ.30,000/- வரை முதலீடு செய்து




வருமான வரி விலக்கு பெறலாம்.

வருமான வரிச்சட்டம் 80CCA பிரிவின் கீழ் முதலீட்டிற்கு 100% வரிச்சலுகை. இந்த வரிச்சலுகை 80C பிரிவின் கீழ் கிடைக்கும் வரிச்சலுகையுடன் சேர்த்தும் பெறலாம்.

இயக்குநர், சிறுசேமிப்புத்துறை
143, அண்ணா சாலை, சென்னை-600 002.
தொலைபேசி: 840223/846209/840003.

அணுகவும்:
- அனைத்து அஞ்சலகங்கள்
- ஆட்சியர் அலுவலகங்கள்
- வட்டாட்சியர் அலுவலகங்கள்
- ஊரக வளர்ச்சித்துறை அலுவலகங்கள்.

DIPR/MS/90/ARIES


உயிரிழந்த போலீஸ்காரர்
போராளிகள்
கருணாநிதி
நான் போட்டோ எடுத்தேன்னா யாரோ எதுக்கோ செய்த சதி மாதிரிதய இருக்கும்!
மதுவிலக்கு போலீஸ்
கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்
கப்பம் செலுத்த வந்திருக்காங்க!
அரசியல் பெரும்புள்ளி
மதுவிலக்கு போலீஸ்
கப்பம் செலுத்த வந்திருக்காங்க!
அய்யா மகா ஜனங்களே! போபர்சுக்காக மன்னிச்சுருங்க... நீர் மூழ்கிக்காக மன்னிச்சுருங்க... ஹெலிகாப்டருக்காக மன்னிச்சுருங்க... ஏர் பஸ்ஸுக்காக மன்னிச்சுருங்க....
உன்னை நாங்க மன்னிச்சிட்டா எங்களுக்கு ஏதுய்யா மன்னிப்பு?



ஓம்
கல்கி

1990 மார்ச் 4
மலர் 48 இதழ் 31
சுக்ல மாசி 20



போராளிகளுக்கு இடம் தராதீர்கள்!

தமிழீழப் போராளிகளுடன் தமிழக முதல்வர் நடத்தும் பேச்சு வார்த்தைகள் வெற்றி பெற வேண்டுமானால் அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. ஜனநாயகப் பாதைக்குத் திரும்பி விட்டதாகக் கூறிக் கொள்ளும் விடுதலைப் புலிகள், ஆயுதங்களைத் துறந்து விட வேண்டும். வன்முறையை விட்டொழித்து, வாதப் பிரதிவாதங்களை மட்டுமே கையாண்டு உரிமைப் போராட்டம் தொடரத் தீர்மானிக்க வேண்டும். ஆயுதங்களை வைத்துக் கொண்டே, 'ஜனநாயகப் பாதைக்குத் திரும்பி விட்டோம்' என்று கூறுவது, 'நரகத்திலேயே சொர்க்க சுகத்தைக் காணலாம்' என்பது போல் அபத்தமானது. விடுதலைப் புலிகள் ஆயுதங்களை விட்டொழித்தால் எல்லாத் தரப்புப் போராளிகளும் விட்டு விடுவார்கள். பிறகு தேர்தலும் அச்சமின்றி நடந்து, ஒரு சாரார் ஆட்சிக்கு வரலாம். பின்னர், ஆள்பவர், அவர்களை எதிர்ப்பவர், ஆகிய இருதரப்பினரும் இணைந்து, வடக்கு கிழக்கு மாநிலத்துக்கு அதிக உரிமைகளைப் பெற, அமைதியான முறையில் கொழும்பு அரசுடன் போராடலாம். அப்போது அவர்கள் சார்பில் பேசவும், உதவவும் இந்தியாவும் தார்மிக பலம் பெற்று விளங்கும்.

இப்போது தமிழக முதல்வர் நடத்தும் பேச்சு வார்த்தைகளும், அதையொட்டிய விடுதலைப் புலிகளின் போக்கும் போகாத ஊருக்கு டிக்கெட் எடுக்கிற காரியமாகவே உள்ளது. ராஜீவ் காந்தி ஆழம் தெரியாமல் காலை விடப் போக, சேற்றில் சிக்கிய அமைதிப்படை, வாபஸ் பெறுவது உறுதி. அதன் பின்விளைவாக வரதராஜப் பெருமாள் ஆட்சி விழ்ந்து விடலாம். ஆனால் மறுபடி தேர்தல் நடக்குமா? நடந்தாலும் விடுதலைப் புலிகளுக்கு அஞ்சாமல் மக்கள் சுதந்திரமாக வாக்களிப்பார்களா? நம்பிக்கை தரும் பதில்கள் இல்லை.

அமைதிப்படை வாபஸ் ஆகும் பகுதிகளிலெல்லாம் விடுதலைப் புலிகள் ஆதிக்கம் செலுத்தி, வரி வசூலிக்கவே தொடங்கி விட்டனர். கொழும்புவும் அமைதி குலையாதிருக்கத் தன் பங்குக்குச் சிங்கள ராணுவத்தை அனுப்பி வைத்துக் கொண்டிருக்கிறது. இப்போது கொழும்பு அரசுடன் கொஞ்சிக் குலவும் விடுதலைப் புலிகள், நாளை இச் சிங்கள வீரர்களிடம் எப்படி நடந்து கொள்ளப் போகிறார்கள்? தேர்தல் நடந்து விடுதலைப் புலிகளின் ஆட்சியே அமைந்தாலும் அது நாம் பெருமைப்படக்கூடிய சுதந்திர ஜனநாயகமாக இருக்குமா? மகிழ்ச்சி தரும் பதில்களைக் காணோம்!

இத்தகைய சூழலில், ராமநாதபுரத்தில் மண்டபம் சாலைப் பகுதியில், ஈழப் போராளிகள் தமிழக போலீஸ் மீது சுட்டது, அதிர்ச்சி அளிப்பதுடன் மன்னிக்க முடியாத குற்றமாகவும் விளங்குகிறது. இது இந்தியா மீது படையெடுப்பதற்கு இணையான ஓர் அத்து மீறல். 'ஈழப் போராளிகள் யாராயினும் சரி, அவர்களுடைய அடாவடித்தனத்துக்கு இங்கே இடம் தரமாட்டோம்' என்று கண்டிப்பாகக் கூறுவதற்குப் பதில், தாம் நடத்தும் பேச்சு வார்த்தைகள் வெற்றி பெறுவதை விரும்பாத சிலர், இப்படி ஒரு பதற்ற நிலையைத் தோற்றுவித்துக் குழப்பம் விளைவிக்கப் பார்க்கிறார்கள் என்ற முதல்வரின் விளக்கம், ஏற்கத்தக்கதாக இல்லாததுடன், நிலைமையின் தீவிரத்தை உணராது அலட்சியப்படுத்துகிற பேச்சாகவும் இருக்கிறது. போதாக்குறைக்கு வீரமணி வேறு, 'இது இந்திய அரசின் உளவுப் படை (RAW) செய்கிற வேலை' என்பதாக ஓர் அறிக்கை விட்டுத் தம் பங்குக்குக் கயிறு திரிக்கிறார்.

முதல்வர், போராளிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தக் கூடாது என்று நாம் கூறவில்லை. அது எந்த அளவுக்கு வெற்றி பெறும் என்பதில் நமக்குச் சந்தேகம் இருப்பினும், பேச்சு வார்த்தைகள் மூலம் பிரச்னைகளுக்கு முடிவு காண்பது என்ற அடிப்படை, வரவேற்கப்பட வேண்டியதே. ஆனால் அதுவே நமது பலவீனமாகப் போராளிகளால் கருதப்பட்டு விடக் கூடாது; அதற்கு அனுமதிக்கவும் கூடாது. சில காலம் முன், கடற்கரை மணற்பரப்பில் மிகப் பெரிய அளவில் நவீன ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டதும், தற்போது தமிழக போலீஸ் மீது போராளிகள் நடத்தியுள்ள தாக்குதலும் மிகவும் கவலை தரும் விஷயங்கள். முதல்வர் இவ் விஷயத்தில் கெடுபிடி காட்டாது போனால், மத்திய அரசேனும் விழித்துக் கொள்வது நல்லது.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.



"ஒவ்வொரு ஸ்பூனிலும் ஒப்பற்ற சக்தி"

உங்களது கடுமையான உழைப்புக்கும், மூளையின் வேலைக்கும் செறிவான ஊட்டமும் வலிமையுமே அடிப்படை. வெறும் நெல்லிக்காய் லேகியங்களும், சாதாரண டானிக்குகளும் இவற்றை நிறைவாகத் தரமுடியாது.

ஒப்பற்ற சக்தியைத் தினந்தோறும் உங்களுக்கு அளிக்கக் கூடிய அரிய மூலிகை டானிக் கிரௌன் காய கல்பம். இது பல்லாண்டு ஆராய்ச்சிக்குப் பின், சித்த வைத்திய முறையில் தயாரிக்கப்படும் சிறந்த மூலிகை டானிக்.

கிரௌன் காயகல்பம் ரெகுலர்:
கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கல்ப மூலிகைகளான வல்லாரை, தூதுவளை, கரிசலாங்கண்ணி, பொற்சீந்தில், கடுக்காய், தான்றிக்காய், அஸ்வகந்தா, நெல்லிக்கனி ஆகியவற்றுடன் சுத்தமான தேன் மற்றும் முறையாகப் பாடம் செய்யப்பட்ட செந்தூரம், துத்தநாக பஸ்பங்களும் சேர்த்து இயற்கை முறையில் விசேஷமாகத் தயாரிக்கப் படுகிறது.

இது இரத்தத்தைச் சுத்தமாக்கி, உணவு எளிதில் ஜீரணம் ஆகவும், ஊட்டச் சத்துக்கள் இரத்தத்தில் சேரவும் உதவுகிறது. குடலைச் சுத்தம் செய்து வாயுக்கோளாறுகளை நிவர்த்தி செய்கிறது.

பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் நிறைய சக்தியும் ஊட்டமும் அளிக்க இரும்புச்சத்து நிறைந்தது.

கிரௌன் காயகல்பம் ஸ்பெஷல்:
கல்ப மூலிகைகள், தேன் ஆகியவற்றுடன் விசேஷ முறையில் பாடம் செய்யப்பட்ட தங்க பஸ்பம், வெள்ளி பஸ்பம், செந்தூரம், துத்த நாகம் உட்பட நவலோக பஸ்பங்கள் யாவும் சேர்க்கப்பட்டுள்ளன.

இதில் பல இயற்கை வைட்டமின்களும், தாது உப்புகளும் நிறைந்திருப்பதால் அதிகப்படியான வலிமையும் சுறுசுறுப்பும் எப்போதும் உங்களிடம் நிறைந்திருக்கும்.

ரெகுலர்	ஸ்பெஷல்
இரும்புச்சத்து நிறைந்தது	தங்க பஸ்பம் அடங்கியது
160 கி: ரூ. 18	150 கி: ரூ. 35
500 கி: ரூ. 54	500 கி: ரூ. 105
(வரிகள் உட்பட)	(வரிகள் உட்பட)



கிரௌன் காயகல்பம்

ஓயாமல் உழைத்திட ஒப்பற்ற சக்தி.

தயாரிப்பாளர்:
கிரௌன் ஹெர்பல் ப்ராடக்ட்ஸ், சென்னை-2.

Insight 739

பம்பாய் விற்பனையாளர்: லக்ஷ்மி ஸ்டோர்ஸ், தாராவி மெயின் ரோடு, தாராவி, பம்பாய் — 17.
பெங்களூர் விற்பனையாளர்: ஜெயின் பிரதர்ஸ், 146, O. K. ரோடு, தம்பார்பேட், பெங்களூர் — 2.

வல்லமை தாராயோ?

19

உதவி என்று ஏதாவது செய்தால், அதைப் பெற்றவர் நியாயமாக நன்றி தெரிவிப்பது வழக்கம். இவர் எதற்காக மன்னிக்கச் சொல்கிறார் என்று வந்தனாவுக்குப் புரியவில்லை.

கட்டு போடப்பட்டக் கையைத் தூக்கி அதனடியில் ஒரு தலையணையை எடுத்து வைத்துக் கொண்டு ஈஸிசேரில் சாய்ந்து அமர்ந்து கொண்டார் பாபு.

''ரொம்ப வலிக்குதாப்பா?'' என்று கேட்ட சசிகலா அருகில் இருந்த சிறிய ஸ்டூலைத் தூக்க முடியாமல் தூக்கிச் சென்று சுவரோரமாகப் போட்டு, அதன் மேல் ஏறி மின் விசிறியின் சுவிட்சைப் போட்டாள்.

''சொன்னா நான் போட மாட்டேனாம்மா?'' என்ற வந்தனா அவளைத் தூக்கித் தரையில் இறக்கி விட்டு விட்டு வந்து தன் நாற்காலியில் அமர்ந்து, ''எதுக்காக என்னை மன்னிக்கச் சொன்னீங்க சார்?'' என்றாள்.

''உங்களைப் பத்தி தப்பான அபிப்ராயம் நான் வச்சிருந்தேன். அதை நீங்க உடைச்சிட்டீங்க. நான் எதையும் மனசுல வச்சிக்கிறதில்லைங்க. உங்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ.. ரேடியோ ஸ்டேஷன்ல உங்களைப் பத்தி பல பேர் பலவிதமா பேசறாங்க. திமிர் பிடிச்சவன்னும், ராங்கிக்காரின்னும், அலட்டல் திலகம்னும், கொழுப்பு ஏறிப் போனவன்னும் பேசறாங்க. பேப்பர்ல தொழிலதிபர் அரவிந்த் மேல நீங்க புகார் கொடுத்து வழக்கு நடக்கிற சமாசாரத்தைப் படிச்சதும் இன்னும் அதிகமாப் பேசறாங்க. நாலு பேர் சொல்றதை வச்சி நானும் உங்களை அதே மாதிரியே எடை போட்டுட்டேன். நமக்கென்னன்னு போகாம சட்டுன்னு வந்து உதவி செஞ்சீங்களே. அதுவும் இல்லாம நியாயத்துக்காகப் போராடணும்ங்கிற உணர்வோட என்னை வற்புறுத்தி போலீஸ் ஸ்டேஷன் கூட்டிட்டுப் போனீங்களே.. உங்களைப் போய் நான் தப்பா நினைச்சு, தப்பா பேசவும் ஆரம்பிச்சுட்டேன். அதுக்குத்தான் மன்னிப்பு கேட்டேன்'' என்ற பாபுவுக்குக் கண்கள் கலங்கின.

வந்தனா சற்றே ஆச்சரியத்துடன் அவர் முகத்தைப் பார்த்தாள்.

அணிந்திருக்கும் ஷெல் ஃபிரேம் போட்ட கண்ணாடியும், லேசான தாடியும் வயதைக் கூட்டிக் காட்டினாலும், முப்பத்தைந்து வயதிற்கு மேல் இருக்க முடியாது. என்னை விட மிக மூத்தவர். வாழ்ந்தவர். மனைவியை இழந்தவர். ஐந்து வயதுப் பெண்ணிற்கு அப்பா! இவர் தன் மனத்திற்குள் வைத்திருந்த அபிப்ராயம் தப்பாய்ப் போனதற்கே மன்னிப்பு கேட்க முன்வருவதென்றால்... இதை கண்ணியம் என்பதா?

''நீங்க மட்டும் இல்லை சார், ரேடியோ ஸ்டேஷன்ல மட்டுமில்லை சார், எல்லா இடத்திலயுமே.. ஏன் என் வீட்ல கூட எனக்குத் திமிர்பிடிச்சவன்னுதான் பேரு. என்னை எப்படி விமர்சிக்கிறாங்கன்னு எனக்குத் தெரியும். என் மனசுதான் எனக்கு முக்கியம். அது சரின்னு சொல்றபடி நான் நடக்கிறேன். என் முதுகுக்குப் பின்னாடி பேசப் படறதைப் பத்தியெல்லாம் நான் கவலைப்படறதில்லை. அதனால இதுக்குப் போய் நீங்க பெரிசா ஃபீல் பண்ண வேணாம்'' என்ற வந்தனா அந்த வீட்டின் சுவர்களில் மாட்டப்பட்டிருந்த படங்களின் மேல் பார்வையை ஓட்டினாள்.

பிள்ளையார், முருகன், சரஸ்வதி, ஐயப்பன், பிறகு சற்று இளமையாகச் சிரித்துக் கொண்டு பாபு, தன் நண்பர்களுடன் பாபு, தவழ்கிற சசிகலா, வயர் பின்னின கூடை நாற்காலியில் அமர்ந்து கையில் பிளாஸ்டிக் பூ வைத்திருக்கும் சசிகலா அப்புறம் தினசரி காலண்டர்.

''உங்க மனைவி படத்தையே காணோமே?'' என்றாள்.

பாபு அமைதியாக இருக்க, ''அம்மாதான் செத்துப் போய்ட்டாங்களே'' என்றாள் சசிகலா கண்களைச் சிமிட்டி.

''அது தெரியும்மா. போட்டோ எதுவும் இல்லையேன்னு கேட்டேன்.''

''நான்கூட டாடியைக் கேட்டேன் ஆண்ட்டி. எங்கம்மா பாவம், அவங்களை யாருமே போட்டோவே எடுக்கலையாம். இல்லைப்பா?''

''ஆமாம் கண்ணு. நீ போய் பக்கத்து வீட்ல விளையாடு, போ.''

''சரிப்பா'' சசிகலா உடனே உற்சாகமாக ஓடிப் போனாள்.

''உங்க கல்யாணத்தில கூடவா போட்டோ எடுக்கலை?'' என்றாள் வந்தனா.

''இல்லைங்க, அது குழந்தைக்காக சொன்ன பொய்.''

''அதானே பார்த்தேன். இந்தக் காலத்திலே போட்டோ கூடவா எடுக்காம இருப்பாங்க? பின்னே ஏன் மாட்டலை? ஒருவேளை பூஜை ரூம்ல மாட்டி வச்சிருக்கீங்களா? சசிகலாவோட அப்பாவி முகத்தைப் பார்க்கிறப்போ அவங்கம்மா எப்படி இருந்திருப்பாங்கன்னு பார்க்கணும்னு ஒரு

பட்டுக்கோட்டை பிரபாகர்

ஆர்வம். அதனாலேதான் கேட்டேன். அவங்க எப்படி இறந்தாங்க சார்?''

பாபு தன் கண்ணாடியைக் கழற்றி வாயால் ஊதி மறுபடியும் அணிந்து கொண்டு, ''அவ சாகலைங்க. உயிரோடத் தான் இருக்கா'' என்றார்.

வந்தனாவிற்கு ஆச்சர்யம் மேலிட்டது.

''முதன் முதலா சசிகலாவோட உங்களை சந்திச்சப்போ அவ அம்மா வரலையான்னு நான் கேட்டதுக்கு, அவங்க இறந்து போய்ட்டதாச் சொன்னீங்களே சார்..''

''உங்ககிட்டே மட்டுமில்லை, எல்லார் கிட்டேயும் அப்படித்தான் சொல்லிக்கிட்டு இருக்கேன்'' என்றார் பாபு.

''ஏன், உங்க ரெண்டு பேருக்குள்ளே ஏதாவது மனஸ்தாபமா? அப்படியிருந்தாலும் செத்தே போய்ட்டதா குழந்தைகிட்டே முதற்கொண்டு சொல்ற அளவுக்கு.. உங்க கோபம் ரொம்ப அதிகமாத் தெரியுது. உங்க சொந்த விஷயம் இது. ஆனா நீங்க சொல்ற தகவல் என்னைப் பாதிக்குதுங்க. சொல்லலாம்னா சொல்லுங்க, என்ன பிரச்னை?''

பாபு சற்று முகத்தைச் சுருக்கினார்.

''சொல்றதைப் பத்தி ஒண்ணுமில்லை. ஆனா இதிலே உங்களை என்ன பாதிக்குதுன்னு எனக்குப் புரியலையே?''

''எந்த ஒரு பெண் அவமானப்படுத்தப் பட்டாலும் சரி, கொடுமைப்படுத்தப்பட்டாலும் சரி, அது என்னைப் பாதிக்கும் சார். நீங்க கோவிச்சுக்கிட்டாலும் சரி, ஆம்பளைங்க அத்தனை பேருமே பொம்பளைங்களை அடிமைப்படுத்தத்தான் நினைக்கிறீங்க. சிலர் நேரடியா, கீழ்த்தரமா. சிலர் மறைமுகமா, நாகரீகமா. காரணம் எதுவா வேணும்னாலும் இருக்கட்டுமே.. உயிரோட இருக்கிற உங்க மனைவியைச் செத்துப் போய்ட்டதா எல்லார்கிட்டேயும் சொல்றீங்களே, இதுதான் உங்க ஆண் வர்க்கத்துக்கே உள்ள ஆள்ற புத்தி.''

''ஓகோ. உங்க கருத்துப்படி பொம்பளைங்க எல்லாரும் தெய்வங்கள். அப்படியா?'' என்றார் கிண்டலாக.

''ரெண்டு நாளா ஓவர்டைமும் தூங்க வேண்டி இருக்கா?''

''ஆமாம். டெஸ்பாட்ச் ராமசாமி லீவு! அவன் சீட்டுக்கும் நான்தான் இன்சார்ஜ்!''

— கிழை. அ. கதிர்வேல்.



''நான் அப்படிச் சொல்லலை. தியாக குணமும், விட்டுக் கொடுக்கறதும் பெண்களுக்குப் பிறப்பிலிருந்தே ஏற்பட்டுடுது. இல்லைன்னாலும் சூழ்நிலையோட கட்டாயத்தாலே ஏற்படுத்திக்கப்படுது. ஆனா ஆம்பளைங்களோட சுயநலத்துக்கு எல்லையே இல்லை. ஒவ்வொரு செயல்லயும் சுயநலம்.''

''கொஞ்சம் அனுபவப் பற்றாக்குறை இருக்குங்க உங்ககிட்டே. உங்க வேகமும், கோபமும், சிந்தனையும் ரசிக்கிற மாதிரித்தான் இருக்கு. ஆனா இன்னும் கொஞ்சம் பக்குவம் வேணுங்க. எல்லா ஆம்பளைங்களும் திமிர்பிடிச்சவங்க இல்லை. அதே மாதிரி எல்லா பொம்பளைங்களும் நீங்க சொல்ற மாதிரி தியாகிகள் இல்லை.''

''இதை நான் ஒப்புக்கவே மாட்டேன். நீங்க எவ்வளவு நேரம் வாதம் செஞ்சாலும் சரி'' என்றாள் வந்தனா கைகளைக் கட்டிக் கொண்டு.

மெல்ல சிரித்து விட்டு எழுந்த பாபு நடந்து மர அலமாரியைத் திறந்து அதன் தட்டுக்களில் தேடி ஒரு கவரை எடுத்து வந்தார். நீட்டினார்.

''எடுத்துப் பாருங்க வந்தனா.''

உள்ளிருந்து எடுக்க, அது ஒரு இளம் பெண்ணின் புகைப்படம். பெரிய விழிகள் மையால் கரை கட்டப்பட்டிருந்தன. சுருள் சுருளாய்க் கூந்தல் அலைகள். மேலுதட்டை விட, ஸ்டுடியோ விளக்கைப் பிரதிபலிக்கும், சற்றே தடித்த கீழுதடு. மேடான கன்னங்கள். அவற்றில் உரசும், காதருகில் எடுத்து விடப்பட்ட ரோம ஸ்பிரிங்ஸ்.

சசிகலா வளர்ந்தால் இப்படித்தான் இருப்பாள் என்று நினைத்துக் கொண்டாள் வந்தனா.

''இவங்கதான் உங்க மனைவியா?''

''மனைவிங்கிற வார்த்தையைக் கூட பயன்படுத்த முடியாதுன்னு நினைக்கிறேன். நான் தாலி கட்டின பொண்ணுன்னு சொல்லலாம்.''

''தாலி கட்டினா பின்னே மனைவி தானே?''

''இல்லைங்க. குடும்பம் நடத்தினாத்தான் மனைவி. அவ பேர் தாரா. அவளும் மனைவியாத்தான் இருந்தா—ரெண்டுவருஷத்துக்கு மட்டும். அப்போ நாங்க இருந்தது மன்னார்குடியில. நான் நாடகத்தில நடிச்சேன். அவ வீட்டைக் கவனிச்சுக்கிட்டா. சசிகலா பிறந்தா. அவளுக்கு ஆறு மாசம் இருக்கிறப்போ என்னோட நாடக கம்பெனி மேனேஜரை வீட்டுக்குக் கூப்பிட்டு விருந்து கொடுத்தேன். அவன் ஒரு மாதிரியான ஆசாமின்னு எனக்குத் தெரியாது. நான் இல்லாத நேரங்கள்ல வீட்டுக்குப் போய்க் கலகலப்பாப் பேசியிருக்கான். தாராவை வளைச்சுப் போட்டுட்டான். சிலர் என்



கிட்டே ஜாடை மாடையாச் சொன்னப்ப எல்லாம் நான் நம்பலை. என் தாராவை நான் கொஞ்சம் கூட சந்தேகப்படலை. என்கிட்டே சொன்னவங்ககிட்டே சண்டை போட்டேன்.''

பாபு நிறுத்தி விட்டு ஹாலின் மூலையில் இருந்த மண் பானையில் இருந்து ஒற்றைக் கையால் தட்டு நீக்கி, தம்ளரில் நீர் மொண்டு குடித்து விட்டு வந்தார்.

வந்தனாவை ஒருமுறை பார்த்து விட்டு, திரும்பி ஜன்னலைப் பார்த்துக் கொண்டு பேசினார்.

''அவங்க ரெண்டு பேரும் தப்பு செய்ற கண்ராவிக் காட்சியை நானே என் கண்ணாலப் பார்த்துட்டேன். அவன் அலறி அடிச்சுக்கிட்டு ஓடிட்டான். நான் ஸ்தம்பிச்சுப் போய் நின்னுட்டேன். எனக்கு எதுவுமே புரியலை. சினிமால வர்ற மாதிரி உடனே அவங்க ரெண்டு பேரையும் கொலை செய்துட்லாம்னு வெறி எல்லாம் எனக்கு வரலை. என் சுபாவம் அப்படி. என் ஆத்திரம் அழுகையாத்தான் வெடிச்சுது. விருட்டுன்னு புறப்பட்டு கோயிலுக்குப் போய்ட்டேன். என் தாராவா இப்படி. நான் என்ன குறை வச்சேன்னு ஒரே பதைப்பு.''

வந்தனா மௌனமாக அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''மறுநாள்தான் வீட்டுக்கு வந்தேன். நான் என்ன செய்யப் போறேனோன்னு நடுங்கிக்கிட்டே நின்னுக்கிட்டிருந்தா தாரா. அவளை தனி ரூமுக்கு அழைச்சுட்டுப் போய் உட்காரச் சொன்னேன். அழுதா. மன்னிச்சிடுங்கன்னு கால்ல விழுந்தா. என்னைக் கொன்னுடுங்கன்னா. கிணத்தில விழுந்து செத்துப் போயிடறேன்னா. அவளோட ஆர்ப்பாட்டத்தை எல்லாம் அமைதியாப் பார்த்தேன். அவ தற்கொலை பண்ணிக்கிறதால என்ன பிரயோஜனம்? ஒவ்வொரு உயிரும் வாழத்தான் பிறக்குது. சிலது நியதிகளோட வாழுது. சிலது எந்த நியதிகளுக்கும் கட்டுப்படறதில்லை. தாரா தப்பு செஞ்சிட்டா. அதுக்குப் பரிகாரம் அவ உயிரை நீக்கிக்கிறதோ, நீக்கறதோ இல்லைன்னு பட்டது. உடம்பு செஞ்ச தப்பு இது. மனசும் சேர்ந்து செஞ்சிருந்தா இப்படி மன்றாடாது. மன்னிப்பு கேக்காதுன்னு நானா ஒரு தத்துவம் தயாரிச்சுப் பெரிய மகாத்மா மாதிரி அவளை மன்னிச்சிடறதுன்னு முடிவு செஞ்சேன். நடந்ததை மறந்துடுன்னேன். குழந்தையோட எதிர்காலம் பாதிக்கும்னு அறிவுரை சொன்னேன். ரொம்ப நேரம் சொன்னேன். அழுதுகிட்டே கேட்டுக்கிட்டா. நீ தப்பே செய்யலை, அது கனவுன்னேன். நீங்க தெய்வம்ன்னு கால்ல விழுந்து மாலை மாலையா அழுதா.''

''அப்புறம்?''

''மன்னிக்கிறவன் அசடுன்னு புதுப் பாடம் எனக்குக் கத்துக் கொடுத்துட்டாங்க. இன்னும் தாய்ப்பால் மறக்காத ஆறு மாசக் குழந்தையைப் பத்தியும் அவ நினைக்கலை. 'நடந்ததை மறந்துடு, எப்பவும் போல குடும்பம் நடத்தலாம்னு' எந்த புருஷனும் சொல்லாத ஒன்றைச் சொன்ன என்னையும் நினைக்கலை. அந்த மேனேஜரோட மறுநாளே ஓடிப் போய்ட்டா'' என்ற போது பாபுவின் குரல் லேசாகப் பிசிறியது.

(தொடரும்)





அவசர யுகத்தின் ஆடைகள்

"கலைஞரின் துணைவியாரே என்கிட்டே துணி வாங்குவாங்க தெரியுமா...?" என்று — பெருமையுடன் சொன்னார் நசீப் கான்.

"அதற்காக நீங்கள் கேட்கும் விலையைக் கொடுக்க முடியுமா என்ன...?" என்று பேரம் பேசியபடி நசீப் கானின் சரக்குகளை மொய்த்தது பெண்கள் கூட்டம்.

பன்னிரண்டு வருடங்களாகப் பாண்டி பஜார் நடைபாதையில் பெட்டிக்கோட், மாக்ஸி, நைட்டி போன்ற ரெடிமேட் ரகங்களை விற்று வருகிறார் நசீப் கான். இவருக்குத் தெரிந்தே நூறு குடும்பங்கள் நடைபாதை ரெடிமேட் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனவாம்.

வாரமொரு முறை வண்ணாரப்பேட்டை எம். ஸி. ரோட்டிலிருக்கும் கடைகளுக்குச் சென்று சரக்கு பிடித்து வருகிறார் கான். முப்பது ரூபாய் தினக்கூலியில் மூன்று உதவியாளர்களை அமர்த்திக் கொண்டு வியாபாரம் செய்கிறார். பெட்டிக்கோட் மற்றும் மாக்ஸி சூடாக விற்பனையாகிறது. நிகர லாபமாக மாதம் ஒன்றுக்குச் சுமார் ஐந்நூறு தேறுமாம். இரவு நேரங்களில் சரக்கு பரப்பியிருக்கும் ஜாதிக்காய்ப் பெட்டிகளிலேயே அவற்றைப் போட்டு, பிளாஸ்டிக் ஷீட்டால் மூடி, கட்டி வைத்து விடுவார்களாம். காவலுக்கு இரண்டு பேர் அங்கேயே இருப்பார்கள்.

"மழைக் காலத்தில்தான் பிழைப்பு 'டல்' ஆயிடும்" என்று கூறும் கான் நடைபாதைக்

கடைகளை அப்புறப்படுத்த மாநகராட்சி முனைப்புடன் செயல்பட்ட போது, ஆளுநரிடம் மனுக் கொடுத்துக் கடைகளைத் தக்க வைத்துக் கொண்டாராம்.

''போலீஸ்காரர்களுக்கு மாமூல்...'' என்றுநாம்கேட்கவாயெடுத்ததுமே,'' அதெல்லாம் கிடையவே கிடையாது'' என்று ஒரு பெரிய போடாகப் போட்டு விட்டார் அந்தக் கெட்டிக்கார வியாபாரி.

கானின் நடைபாதைக் கடை, சென்னை நகரின் பிரபல ரெடிமேட் கடை ஒன்றின் வாசலில்தான் இருக்கிறது. இவ்வாறு பிரபல ஏ.ஸி. ஷோரூம்களின் வாசலிலெல்லாம் நடைபாதைவியாபாரம்சுறுசுறுப்பாக நடைபெற்றாலும் இதைக் காட்டிலும் மூன்று, நான்கு மடங்கு அதிகம் விலை கொடுத்து, ஏ.ஸி. ஷோரூமில் துணி வாங்குவதற்கும் கூட்டம் வந்து கொண்டுதானிருக்கிறது!

குடை ராட்டினம் போல் சுற்றும் ஹாங்கர்களில் விதவிதமான சல்வார் செட்டுகள், ஃப்ராக், மாக்ஸி, மிடி, கைக்குழந்தை சட்டைகள்... ஆண்களுக்குத் தனிப் பிரிவு. இங்கும் ஒளிரும் நிறங்களில் ஆடைகள்! — எலுமிச்சை மஞ்சளில் பூக்களை அள்ளித் தெளித்த டீ ஷர்ட்; ரத்தச் சிவப்பில் முழுக் கை சட்டை!... என்று துணிக் கடலாகக் காட்சியளிக்கும் கடைகள் ஒன்றிரண்டு அல்ல... திரும்பிய பக்கமெல்லாம் வந்து விட்டன. ரேடியோவைப் போட்டாலோ ஐந்து நிமிடங்களுக்கு ஒரு ரெடிமேட் துணிக் கடை விளம்பரம்!

இவ்வளவு கடைகள் பெருகினாலும் இவை எல்லாவற்றிலும்வியாபாரம்கொழிக்கிறதே; என்ன காரணம் என்று கேட்டோம், சுசீலா ராமசாமியிடம். இரண்டுதலைமுறைகளாக இத்துறையில் ஈடுபட்டுள்ள நாயுடு ஹால் நிறுவனத்தின் உரிமையாளர்களுள் ஒருவர் சுசீலா ராமசாமி.

''இந்த வியாபாரத்தில் வெற்றி காணக் கண்ணையும் காதையும் கூர்மையாகத் தீட்டி வைத்துக் கொள்வது அவசியம்'' என்றார் சுசீலா. ''கல்லூரி மாணவிகள் உடுத்துவதையும், பத்திரிகை சினிமாவில் வரும் உடை வடிவமைப்புக்களையும் கவனமாகப் பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டும். எந்தப் பிரிவினருக்கு எந்த உடை விஷயத்தில் குறை அல்லது அலுப்பு ஏற்படுகிறது என்று காது கொடுத்துக் கேட்க வேண்டும். அதற்கேற்ப 'டக் டக்' என்று புதிய டிசைன்களையும் உடைகளையும் வடிவமைத்துத் தந்தால் நல்ல வரவேற்பு கிடைக்கும். ஒரு சின்ன உதாரணம்: பரத நாட்டியம் கற்றுக் கொள்ளும் பெண் குழந்தைகளின் எண்ணிக்கை இப்போது மிக அதிகமாகி விட்டது. வளரும் குழந்தைகளுக்குக் காஞ்சிப் பட்டில் நாட்டிய உடை தைக்கக் கட்டுப்படியாவதில்லை. பட்டுக்குச் சிறந்த மாற்றாக 'சைனா சில்க்' இப்போது கிடைக்கிறது. ஜரிகைப் பட்டைகளை இணைத்து 'சைனா ஸில்க்'கில் பரதநாட்டிய உடை தைத்தால் டிமாண்டில் பறந்து போகும்!'' எனக் கூறிய சுசீலா தொழிற்சாலையைச் சுற்றிக் காண்பித்தார்.

வானவில்துணுக்குகளாகத்தரையெங்கும் துண்டுத் துணிகள் சிதறிக் கிடந்தன. அவற்றுக்கிடையே தையல் மிஷின்கள் ரீங்காரத்துடன் ஓடின. போட்டியாகப் பறந்த மென்கரங்கள் உடைகளில் கண்ணாடி



பொருத்துவது, எம்பிராய்டரி, முத்து, மணி வைத்துத் தைப்பது போன்ற நுணுக்கமான வேலைப்பாடுகள் செய்வதில் ஈடுபட்டன. பிரபல மில்களின் துணிகள் ஒரு பக்கமாகக் குவிந்து கிடந்தன. 'மாஸ்டர்' இன் கத்தரி, நீரைக் கிழிக்கும் படகைப் போல் பிரவுன், ரோஸ், நீலம் என்று வண்ண வண்ணத் துணிகளை வெட்டித் தள்ளியது.

அயல்நாட்டு 'யமாடோ,' 'ஜூகி,' 'ஸிங்கர்' போன்ற மிஷின்களுடன் நம்நாட்டு 'மெரிட்டும்' இணையாக உழைத்தது. ஒரே நாளில் முப்பது பாவாடைகளுக்கும் ஆயிரம் பிளவுஸ்களுக்கும் துணி வெட்ட மிஷின்கள்; இரட்டைத் தையல் போட, மூன்று தையல் போட, இலாஸ்டிக் பொருத்த என்று 'பிரா' தயாரிக்க மட்டுமே சில மிஷின்கள்...

ஆரம்பத்தில் பெண்களுக்கான உள்ளாடைகளுக்கு மட்டுமே பெயர் பெற்றிருந்த நாயுடு ஹால் இப்போது ரெடிமேட் ஆடைகளுக்கென மூன்று நிலை ஷோரூம் ஒன்றைத் தனியாக நடத்தி வருகிறது. உள்ளாடைகள் பிளவுஸ் வகைகளுக்குத் தனி விற்பனைக் கூடம்!

மதுரா கோட்ஸ், பாம்பே டையிங் போன்ற நெசவாலை நிறுவனங்களும், ஆண்களின் கழுத்துக்கு 'டை' மட்டுமே தயாரித்து வந்த ஜோடியாக் நிறுவனமும் சில வருடங்களாக ரெடிமேட் ஷர்ட்டுகள் உற்பத்தியில் இறங்கியுள்ளன. இதனை இயல்பான வளர்ச்சியாக ஏற்றுக் கொண்டாலும், காலணிகள் மட்டுமே தயாரித்து வந்த 'பாட்டா' நிறுவனம்கூட ரெடிமேட் ஆடைகளை உற்பத்தி செய்து அதே ஷோரூம்களில் விற்க ஆரம்பித்துவிட்டது என்பது 'ரெடிமேட்'களுக்கு இருக்கும் 'கிராக்கி'யைத்தான் உணர்த்துகிறது.

"எங்கள் 'நூர்ஜானி' டெனிம் ஸ்கர்ட்டுகளையும், 'அம்பாஸடர்' ஷர்ட்டுகளையும் 'நார்த் ஸ்டார்' ஜீன்ஸையும் அணிந்தால் பத்து வயது குறைத்துக் காட்டுமே" என்கிறார் 'பாட்டா'வின் அண்ணாசாலைக் கிளை மேலாளர் ஆபிரஹாம்.

பாட்டாவில் ஆடைகள் விலையும் காலணிகள் போலத்தான்: ரூ. 129.95; ரூ. 199.95; ரூ. 259.95...!

"துணி வாங்கித் தைத்துக் கொள்வதை விட இங்கே ரெடிமேடில் வாங்குவதில் ஐம்பது முதல் அறுபது ரூபாய் கூடுதலாகச் செலவாகிறது. ஆனால் 'பாட்டா' என்ற பெயர் குறிக்கும் தரத்துக்காக இங்கே வாங்குகிறேன்" என்றார் வெங்கடாசலம் என்ற வாடிக்கையாளர்.

ஆண்களுக்காகப் புதுப் புது ஃபாஷன்களில் '**exclusive**' ஷர்ட்டுகள் தயாரிக்கும் 'சராக் டின்' 'டபுள் புல்' போன்ற நிறுவனங்களின் வெற்றி, 'ஃபாஷன் எல்லாம் பெண்கள் சமாசாரம்' என்ற மாயையைத் தகர்த்தெறிகிறது. அதிலும் 'சராக் டின்' ஷர்ட்டுகள் பம்பாயில் மட்டுமே கிடைக்கும் என்று விளம்பரம் செய்கிறார்கள்!

உள்நாட்டில் ரெடிமேட் வியாபாரம் கொடி கட்டிப் பறக்க, உலகச் சந்தையிலும் இந்திய ரெடிமேட்களுக்கு நல்ல வரவேற்பும் மதிப்பும் இருக்கிறது. 1948 — இல் '**industrial garments**' என்று அழைக்கப்படும் 'ஆலைத் தொழிலாளர்களுக்கான ஆடைகளை' ஏற்றுமதி செய்வதில் துவங்கிய 'கோயல்ஸ்' நிறுவனம், இன்று ஆண்டுதோறும் சுமார் பத்து கோடி ரூபாய் மதிப்புள்ள பல்வேறு ஆடைகளை ஏற்றுமதி செய்கிறது! அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்குச் செயற்கை இழைத் துணிகளால் ஆன ஆடைகளும் ஜப்பான் மற்றும் சில ஐரோப்பிய நாடுகளுக்குத் தூய பருத்தி ஆடைகளும் அனுப்பப்படுகின்றன.

"அவ்வப்போது மாறும் ஃபாஷன்களுக்கு ஏற்ப அந்தந்த நாடுகளிலிருந்து டிசைன்களுடன் ஆர்டர்களும் எங்களுக்கு வரும். அவர்கள் போட்டுத் தரும் டிசைன்படி நாங்கள் தைத்து அனுப்புவோம்" எனக் கூறும் பாரத் கோயல், 'கோயல்ஸ்' நிறுவனத்தின் உரிமையாளர்களுள் ஒருவர். சுமார் நானூறு ஊழியர்கள் கோயல்ஸின் ரெடிமேட் ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிகின்றனர்.

மேற்கத்திய நாடுகள் இந்தியாவிலிருந்து ஆடைகளை இறக்குமதி செய்கின்றன. நாமோ அந்த நாடுகளின் ஃபாஷன்களைத் தத்து எடுத்துக் கொள்கிறோம். உடைகளின் டிசைனில் மட்டுமின்றி அவற்றைக் கண் கவரும் விதத்தில் கடைகளில் தொங்க விடுவது, பலவிதமான பொம்மைகளை அணிவகுத்து அவற்றுக்கு ஆடைகளை அணிவித்து ஷோ கேஸில் நிறுத்துவது; கடை

• • • • • • • •

"இங்கே யாருக்குச் சங்கீதம் ரொம்பப் பிடிக்கும்?"

"எனக்கு சார்."

"எனக்கு சார்."

"எனக்கும் சார்."

"எனக்கும்தான் சார்!"

"சரி, அப்படியானா மாடியிலேயிருந்து பியானோவை மெதுவாக் கீழே இறக்கிக் கொண்டு வாங்க, பார்க்கலாம்."

— முத்து.



களுக்குப் பெயரிடுவது... கடைகளின் உட்புறத்தை மிக நேர்த்தியாக அலங்கரித்து ஏ.ஸி. யுடன் ஸ்டீரியோவில் மெல்லிசை தவழ்ந்து வர, பிரமிப்பூட்டச் செய்வது என்று விற்பனை முயற்சியிலும் மேற்கத்திய பாதிப்பைக் காண்கிறோம்.

கண்ணாடி மாளிகை போல் மினுமினுக்கும் கடையின் அலங்காரச் செலவையும் பராமரிப்புச் செலவையும் சேர்த்துத்தான் ஆடைகளுக்கு விலை நிர்ணயிக்கிறார்கள்... இது நன்றாகத் தெரிந்திருந்தும் இந்தக் கடைகளில் ரெடிமேட் ஆடைகள் வாங்கும் சில பெண்களை இது பற்றிக் கேட்டோம்.

''பணத்தைவிட நேரம் அருமையாகிவிட்ட இந்தக் காலத்தில் ரெடிமேட் துணிகள் சூடாக விற்பதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது?''

''வேலைக்குப் போகும் என் போன்ற பெண்களுக்குத் துணி வாங்க, தைக்கக் கொடுக்க, பிறகு தைத்ததை வாங்கி வர (அதுவும் டெய்லர் சொன்ன தேதியில் தராவிட்டால் பலமுறை போய்வர வேண்டும்) என்று நடையாய் நடக்க நேரம் கிடையாது.''

''புடைவை, அதற்குப் பொருத்தமாக ரவிக்கை, பெட்டிக்கோட் என்று தேடிக் கொண்டு அலைய வேண்டாம். ரெடிமேட் கடைகளில் 'ஸெட்' 'ஸெட்' ஆக ஸல்வார் சூரிதார்கள் கிடைக்கின்றன. ஸ்கூட்டர், மோபெட்டில் பயணம் செய்ய இதுதான் சௌகரியம். கடையிலேயே ஃபிட்டிங் ரூமில் போட்டுப் பார்த்துப் பிடித்திருந்தால் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். எப்படியும் நமக்குப் பிடித்த மாதிரி இரண்டு மூன்று டிசைன்கள் ஒரு கடையில் கிடைக்காமல் போகாது — இந்தச் சௌகரியங்களுக்காக முப்பது ரூபாய் அதிகம் கொடுக்கலாம்; தப்பில்லை.''

— என்று பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

''நல்ல டெய்லர்கள் கிடைப்பதே பெரும்பாடு. விலையுயர்ந்த துணி, லேஸ் என்று வாங்கிக் கொடுத்தால் துணியில் கணிசமான அளவு டெய்லர் எடுத்துக் கொள்வதும் நமது உசத்தி லேஸுக்குப் பதில் அதே போன்ற மலிவு விலை லேஸை வைத்துத் தைப்பதும்... எங்கள் அனுபவத்தின் அடிப்படையில்தான் சொல்கிறோம்'' என்றனர் சரோஜாவும் ரேவதியும்.

ரெடிமேட் துணிகள் பற்றிப் புகார்களும் உண்டு:

● பல சமயம் 'செகண்ட்ஸ்' எனப்படும் தரக் கட்டுப்பாட்டுக்கு உட்படாத ரகங்களைக்கொண்டு ஆடைகள் தைக்கப்படுகின்றன.

● பட்டன்கள் சீக்கிரம் துருப் பிடிக்கின்றன; எலாஸ்டிக்குகள் நீடிப்பதில்லை.

● தையல் சரியாகப் போடாததால் மீண்டும் மேல் தையல் போட டெய்லரைத்தான் தேடிப் போக வேண்டியிருக்கிறது.

● சற்று வாட்டசாட்டமாக இருப்பவர்களுக்கு ரெடிமேட் ஆடைகள் கிடைப்பதேயில்லை.

நுகர்வோரின் குறைகள் இவையென்றால் ரெடிமேட் துணி ஆலைகளில் பணிபுரிபவர்களின் குறைகள் பன்மடங்கு அதிகம்.

வீட்டு வேலை செய்து வந்த பல பெண்கள் 'ஃபாக்டரி வேலை' என்ற கௌரவத்துக்கும் அதிகப்படி ஊதியத்துக்கும் ஆசைப்பட்டு, தினக்கூலி அடிப்படையில் ரெடிமேட் ஆடை உற்பத்தி நிலையங்களில் வேலையில் சேர்கிறார்கள். இந்தப் பெண்கள் சூப்பர்வைஸர்களின் மிரட்டலுக்கும் மாஸ்டர் டெய்லரின் அதட்டலுக்கும் ஈடு கொடுத்தபடி மும்முரமாய் வேலை செய்து வரதட்சணைக்குப் பணம் சேர்க்கிறார்கள். பத்து வயதிலேயே படிப்புக்குத் தலை முழுகிவிட்டு பட்டன் கட்ட வந்த பொடிசுகளோ வாரச் சம்பளம் முப்பது ரூபாய்க்காக இளமையையும் விளையாட்டையும் இழக்கிறார்கள். மாஸ்டர் டெய்லர்களோ ''நாள் முழுக்க மிஷினில் உட்கார்ந்தா உடம்பு ஓவரா சூடாகித்தாங்க போவுது. கண்ணுக்கும் எரிச்சல்... என்ன செய்யறது...? வேலை அப்படி...!'' என்று வருத்தத்துடன் பேசுகிறார்கள்.

அழகழகான ஆடைகளைத் தயாரித்து அவசர யுகத்தில் நமது வாழ்வை எளிமையாக்கும் இந்த ஊழியர்களின் உழைப்பை நினைத்துப் பார்க்கும் போது அந்த ஆடைகள் மேலும் அருமையாகவே தோன்றுகின்றன.

— நிர்மலா சக்கரவர்த்தி.

மேலட்டை மற்றும் வண்ணப்படங்கள்: **யோகா.**



வானமே!
அந்தப் பஞ்சு
மேகங்களை
மழை நூலாக்கி
பூமிக்கு அனுப்பி வை...
நாங்கள்
உழைப்புச் சாயமிட்டுப்
பச்சைப் போர்வைகள்
நெய்து கொள்கிறோம்...

— சோழபுரம் அன்புராஜ்.

● ● ● ● ● ● ● ● ●

பாதை மாறிய பயணம்

மோடி மஸ்தானுக்கும், உள்ளூர் நடைபாதை வைத்யனுக்கும் கூடும் கூட்டத்தைப் போலவே அந்த வேடிக்கைக் காட்சிக்கும் கூட்டம் ஏகதேசம் சேர்ந்துவிடும்.

வெள்ளியோ, சனியோ சாயங்காலம் தேர் வீதி களை கட்டிவிடும். செண்பகம் சொல்லி வைத்த மாதிரி நாலரை மணி பஸ்சுக்கு ஒரு பையுடன் வந்து விடுவாள். மிகையில்லாத அலங்காரம் என்றாலும் வெறித்துப் பார்க்க வைக்கும். அந்த வயதிற்குரிய களை சற்று தவறித்தான் போய் விட்டிருக்கும். என்றாலும் தரை பார்த்து நடக்காத எவரும் செண்பகத்தை ஒரு நிமிடம் வெறித்துப் பார்த்து நடப்பர்.

ஆலமரத்தடியில் எஸ். வி. டி. பஸ் நின்றிருக்கும். செண்பகம் கடைசி சீட்டுக்கு முன் சீட்டில் உட்காருவாள். அவள் கையிலிருக்கும் பை அதற்கு முந்தின சீட்டில் இடம் பிடித்த அடையாளமாய் வைக்கப்படும். விஷயமறிந்த உள்ளூர்க்காரர்கள் அந்த இரண்டு சீட்டுகளில் உட்காருவதைத் தவிர்ப்பர். உட்கார விருப்பப்பட்டோ, இடமின்றி வேறு வழியில்லாமல் உட்காருபவர்களோ நிறைய வசவுகளை வாங்கிக் கட்டிக் கொள்வர். மீறினால் அடிதடியும் ஆகும்.

எப்படியும் அந்த இரண்டு சீட்டுகளில் செண்பகத்தைத் தவிர யாரும் உட்காராதபடி கட்டளைகளைப் பிறப்பிக்க முத்துவின் ஆட்கள் பஸ்ஸுக்குக் கீழே இருப்பார்கள். நாலரை மணிக்கு பஸ் புறப்பட்டதும் முத்து பரபரப்பில்லாமல் நடந்து வருவார். கை யசைப்பார். கும்பிடு போடுவார். விசாலமான பார்வையால் எல்லாவற்றையும் தீர்க்கமாய் அளந்து கொண்டு வருவார்.

பஸ் ஏறினதும் கண்டக்டர் முதல் மரியாதையைத் தருவார். செண்பகத்தைப் பார்த்து லேசாய் ஒரு புன்னகையை உதிர்த்து விட்டு அவளுக்கு முன் சீட்டில் உட்காருவார் முத்து. கண்டக்டர் முத்துவிடம் இரண்டு டிக்கெட்டுகளை நீட்டுவார்.

முத்து செண்பகம் உட்கார்ந்திருக்கும் சீட்டுகளில் தலா ஓர் இடம் காலியாகத்தான் இருக்கும். எட்டாவது ஸ்டாப் ஆவரம் பாளையத்தைத் தாண்டும் போதுதான் அந்த சீட்டுகளில் சின்ன மாறுதல் ஏற்படும். செண்பகம் எழுந்து வந்து முன் சீட்டில் முத்துவுடன் உட்கார்ந்து கொள்வாள். இது வரை நின்று கொண்டிருந்தவர்களோ, காத்திருந்தவர்களோ செண்பகம் உட்கார்ந்திருந்த சீட்டைப் பிடித்துக் கொள்வர்.

முத்து எல்லோருக்கும் பொதுவானவர். அந்தப் பஞ்சாயத்து போர்டு ஊரில் முத்து வடம் இழுக்காமல் எந்த அரசியல் தேரும் ஓடாது. ஓடவிடமாட்டார்! பெட்டிசன் முதற் கொண்டு போலீஸ், வறட்சி நிவாரணம் வரை எல்லாம் அவரின் 'ஆட்சி'க்கு உட்பட்ட விஷயங்கள்தான்.

டவுனில் முத்துவின் வாரக் கடைசி பற்றியும், ஞாயிறுகள் பற்றியும் நிறையப் பிரஸ்தாபங்கள் உண்டு. அவர் செண்பகத்துடன் அந்த தினங்களில் ஒரு நிரந்தர லாட்ஜில் தங்குவார். அவருடைய சிநேகிதர்களும் அங்கு சகஜமாக நடமாடுவதுண்டு, செண்பகம் எல்லோருக்கும் ஈடுகொடுப்பதுண்டு, என்றெல்லாம் தகவல். முத்துகூட செண்பகம் பற்றி 'உபயோகமுள்ள பெண்' என்ற வார்த்தைப் பிரயோகத்தைப் பேச்சுவாக்கில் ஏகாந்தமாய்ச் சொன்னதுண்டாம். அவருடைய பகடைக் காய் ஆட்டத்தில் எத்தனையோ சாகசங்கள், காய்கள்..... அதிலொன்று செண்பகம்.

திங்களன்று மதியத்திற்குள் செண்பகம் எப்படியும் ஊருக்குத் திரும்பி விடுவாள். அநேகமாய்த் தூக்கக் கலக்கத்துடனோ, அல்லது சோர்வாகவோதான் திரும்புவாள். ஒவ்வொரு முறையும் குறைந்தது இரண்டு வயதாவது அதிகமாகி விட்டதைப் போலத்தான் இருப்பாள். முத்து திங்களன்று இரவோ, வேறு நாட்களிலோ தான் ஊருக்கு வருவதுண்டு. இதெல்லாம் மூன்று வருஷங்களாய்த் தொடர்ந்து கொண்டுதான் இருந்தது.

ஆனால் சமீப காலமாய் வாரக் கடைசி வேடிக்கைக் காட்சி இல்லாமற் போனது. மெல்ல மெல்ல தவறி, பின் சுவாரஸ்யமற்றுப் போய் விட்டது. நாலு மாத இடைவெளிக்குப் பின் முத்துவும், அவன் சகா செந்திலும் தேனரசனைத் தெருவில் போட்டு புரட்டி அவன் உடம்பை ரணமாக்கிய போதுதான் அந்த இடைவெளியும் நிரந்தரமானது என்பது போல் பலருக்குப் பட்டது.

தேனரசன் எந்த விஷயத்திலும் சம்பந்தமற்றவனாக அந்த ஊரில் வாழ்ந்தான். அவனுக்குக் குறிப்பாய்ச் சொல்லக் கூடிய தொழில் எதுவுமில்லை. நாடார் கடையில் மூட்டை சுமப்பான். நாலு வாரத்திற்குப் பொட்டலம் கட்டுவான். விறகுக் கடையின் காவல்காரனாக இருப்பான். திடீரென்று

சுப்ரபாரதிமணியன்

பார்த்தால் எவரெஸ்ட் கபேயில் பரிமாறிக் கொண்டிருப்பான். வீடுகளுக்குத் தண்ணீர் சுமப்பான், விருந்துகளில் சமையல் வேலை செய்வான். யார் கூப்பிட்டாலும் உதவிக்குப் போய் வருவான். கொடுக்கிற காசில் திருப்தியான ஜீவனம்.

செண்பகம் டவுனுக்குப் போகிற வேடிக் கைக்காட்சி இரண்டு மூன்று வாரங்களாய் நிகழாதபோது வழக்கம் போல் அவளுக்கு ''சீக்கு'' என்றுதான் சொல்லிக் கொண் டார்கள். அதிகம் நடமாடாமல் இருந்தாள். அப்போதுதான் தண்ணீர் எடுத்து ஊற்றவும், உள்ளூர் டாக்டரிடம் போய் மருந்து வாங்கி வரவும், சமையலுக்கும் தேனரசனைக் கூப் பிட்டிருக்கிறாள்.

ஒன்றரை மாத இடைவெளிக்குப் பின் அவள் மறுபடியும் ஒரு வெள்ளிக்கிழமை யில் நாலரை மணி பஸ்சுக்கு வந்தபோது அவளுடன் தேனரசனும் வந்தது பலரை புருவம் உயர்த்த வைத்தது. பஸ்ஸிலிருந்து ரொம்ப தூரம் தள்ளிப்போய் அவன் நின்று, முத்துவின் புறப்பாட்டைப் பார்த் துக் கொண்டிருந்தான். இது சில வாரங்கள் நடந்து, பின் மறுபடியும் நின்றது.

ஒரு நாள் செண்பகத்தைத் தரதரவென்று இழுக்காத குறையாக, முத்துவின் ஆள் செந்தில் இழுத்து வந்து நாலரை பஸ்சில் ஏற்றினான். பஸ் வரைக்கும் வந்து பஸ் ஏற மறுத்தவளை அவன் அடிக்க கை ஓங்கியதை ஊரே வேடிக்கை பார்த்தது.

''எல்லோரும் என்னை நாசம் பண்ணிட் டது போதும். வுட்டுரு.....'' என்பதை மட்டும் தான் அவள் தீர்க்கமாய்ச் சப்தமிட்டுச் சொன்னாள். என்றாலும் தரதரவென்று செந்தில் அவளை இழுத்து பஸ்ஸினுள் தள்ளினான். முத்து பஸ்ஸின் கடைசி சீட்டில் முன்பே உட்கார்ந்திருந்தார்.

''எனக்குக் கல்யாணமுங்க.''

தேனரசன் ஊர் முழுக்கச் சொல்லிக் கொண்டிருந்தான்.

''யாரடா பொண்ணு?''

''செண்பகந்தா.''



''அட... செண்பகத்தையா கட்டிக்கப் போறே....?''

''ஏனாம்?''

''வேற பொண்ணு கெடைக்கலியா.... கெடைக்காட்டியும்பரவாயில்லே....பிரம்மச் சாரியாகவே இரு... இல்லெண்ணா சந்யாசம் வாங்கிக்கோ....''

''நான் எதுக்கு சந்யாசம் வாங்கிக்கனும்?''

''இப்படியொரு பொம்பளையைக் கட்டிக் கிறதைவிட அது மேல்....''

''அவங்களைக் கட்டிக்கிறதுக்கு நிஜமான ஆம்பளையா இருந்தா போதும்.....

இதைத்தான் அவன் எல்லோருக்கும் பதிலாகச் சொல்லிக் கொண்டிருந்தான். முத்துவிடமும் அதைத்தான் சொன்னான். தேனரசனின் உடம்பு ரணமாகிப் போயிற்று. அவன் உடம்பு குணமாகிறவரை செண் பகம் அவனைத் தன் வீட்டில்தான் வைத் திருந்தாள் என்பது முத்துவுக்குப் பெரிய அதிர்ச்சியாக இருந்தது.

The following particulars regarding the ownership of 'KALKI' the Tamil weekly newspaper, are published as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publications : Madras
2. Periodicity of Publication : Weekly
3. Name of Printer : V. Murali
   Nationality : Indian
   Address : AA-117, Shanthi Colony,
   Anna Nagar, Madras - 600 040
4. Name of Publisher : V. Vaidyanathan
   Nationality : Indian
   Address : 6-A, Warren Road,
   Mylapore, Madras - 600 004
5. Name of Editor : K. Rajendran
   Nationality : Indian
   Address : 1, Fifth Street, Lake Area,
   Nungambakkam,
   Madras - 600 034
6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital : Bharathan Publications Private Limited, 84/1-C, Race Course Road, Guindy, Madras - 600 032.

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

V. Vaidyanathan
Publisher

1.3.1990

தேன் கையிலிருந்த பணத்தைப் போட்டு, சின்னதாய் வெற்றிலைக் கடை ஆரம்பித்து விட்டாள் செண்பகம். வாரம் ஒரு முறையாவது தவறாமல் செண்பகமும், தேனரசனும் சேர்ந்து டவுனுக்குப் போய் விட்டு வந்தார்கள். முரட்டுத் துணியில் ஏதாவது அழுக்குக் கலரில் நல்ல சர்ட்டும், வெள்ளை வேஷ்டியும் அணிந்து மலர்ச்சியாக செண்பகத்துடன் காலையில் கிளம்புவான் தேனரசன். ஓட்டல் சாப்பாடு, மேட்னிஷோ, வெற்றிலை பாக்கு வாங்குதல் என்று இரவில் திரும்பினார்கள். கள்ளழகர் திருவிழா சப்பரக் காட்சி போல் பலர் அதைச் சந்தோஷமாய்ப் பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள்.

முத்து நாலரை பஸ்ஸையும், வாரக் கடைசியையும், டவுனையும் தவற விடாமல் சகாக்களோடு போய் வந்து கொண்டுதான் இருந்தார்.

டவுன் சுந்தர் கோவிலில் வைத்துச் செண்பகத்துக்கும், தேனரசனுக்கும் திருமணம் நடந்தபின் அன்றைக்குத்தான் அவர்கள் ஊர் திரும்பிக் கொண்டிருந்தார்கள். கையில் கனத்த பெட்டியைத் தூக்கினபடி தேனரசன் பஸ்ஸைவிட்டு இறங்கினான். செண்பகம் மஞ்சள் பையொன்றைத் தூக்கிக் கொண்டு பின் வந்தாள். பத்து வருஷங்களுக்கு முன்பு இருந்த மலர்ச்சியுடன் இருந்தாள்.

மனோகர் சைக்கிள் கடை வாசலில் நின்றிருந்த முத்துவைப் பார்த்ததும் தேனரசனுக்கு நடை தளர்ந்து விட்டது. பின்னோக்கிச் செண்பகத்தைப் பார்த்தான். அவளும் உள்ளூர பயந்தபடி தலைகுனிந்து கொண்ட மாதிரி இருந்தது.

விறுவிறுவென்று முத்து தேனரசனை நோக்கி நடந்தார். சகாக்கள் பின் வர, சைகை செய்து நிறுத்தினார். தேனரசன் உடம்பு நாலு மாத இடைவெளிக்குப்பின் மறுபடியும் ரணமாகப் போகிறது என்பது மட்டும் எல்லோர் மனசிலுமிருந்தது. தேனரசனை நெருங்கி விட்டார்.

''தேனரசா...!''


தேனரசன் பயத்துடன் பெட்டியைக் கீழே வைத்துவிட்டு நின்றான். வழக்கமாய் முத்து எல்லோரையும் ஏக வசனத்தில்தான் கூப்பிடுவார். பெயர் சொல்லிக் கூப்பிட்டது தேனரசனுக்கு ஆச்சர்யமாக இருந்தது. செண்பகம் பயத்தை வெளிக்காட்ட விரும்பாதவள் போல் நடந்து கொண்டிருந்தாள்.

''செண்பகம் உன்னைக் கூடத்தான்...''

முத்து இருவரையும் பார்த்து லேசாய்ச் சிரித்தார்.

''என்ன தேனரசா... கல்யாணத்துக்கு என்னையெல்லாம் கூப்புட்டா நிறைய செலவாயிருமுன்னு கூப்புடலையா?''

ஐடிபிஐ-முதலீட்டுப் பத்திரங்கள் முதலீட்டு ஆதாய வரி விலக்குப் பெற ஒரு கவர்ந்திடும் வழி



- ஆண்டு முழுவதும் சமவிலையில் கிடைக்கும்.
- வருமான வரிச் சட்டம், 1961, பிரிவு எண் 54E-ன் கீழ் முதலீட்டு ஆதாய வரி விலக்கு.
- செல்வ வரிச் சட்டம், 1957, பிரிவு எண் 5(1)xvie)-ன் கீழ் செல்வ வரி விலக்கு.
- வருமான வரிச் சட்டம், பிரிவு எண் 80-Lன் கீழ் வருமான வரி குறைப்பு.
- ஆண்டொன்றுக்கு 9% விகிதத்தில் ஆறு மாதத்திற்கொரு முறை வட்டி வழங்கப்படும்.
- முதலீடு செய்தவர் விரும்பினால் 3 ஆண்டுகட்கான மொத்த வட்டியும் தள்ளுபடி முறையில் முன்னதாகவே ஒரே நேரத்தில் வழங்கப்படும்.
- எவ்வித வரியும் வட்டி வழங்கும்பொழுது கழிக்கப்படமாட்டாது.
- வெளியூர்க் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவற்றை மாற்றுவதற்கான செலவை ஐடிபிஐ ஏற்றுக்கொள்ளும்.

Sobhagya-B/89 TAM

மேற்கொண்டு விவரங்களுக்கு அருகாமையிலுள்ள ஐடிபிஐ ஆபிஸை அணுகுங்கள் அல்லது மானேஜருக்கு எழுதுங்கள்:

இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் பாங்க் ஆப் இந்தியா

ஐடிபிஐ டவர், கஃப் பரேட், கொலாபா, பம்பாய்-400 005.

''அதெல்லாம் இல்லீங்க....''

''பத்தோட பதினொண்ணா எனக்கும் ஒரு எலை போடாம போயிருவீங்களா?''

''அதெல்லாம் இல்லீங்க... ஏதோ....''

முத்து செண்பகத்தைப் பார்த்தார். கண்களில் மை நிரம்பி தளதளத்து கவர்ச்சியாக்கிக் கொண்டிருந்தது. மஞ்சள் பூசின முகம். தாலிக் கயிற்றின் மஞ்சள் அபரிமிதமாக ஜொலித்தது. நாலு வருஷம் முன் அவளை முதலில் பார்த்த போது இருந்த சிறு செடி போல் இருந்தாள்.

செடியை உலுக்கி சிதைத்துவிட்டோமே என்றிருந்தது முத்துவுக்கு. அவள் உதறாமல் இருந்திருந்தால் இன்னும் சிதைவுகள்தான். அவள் உதறின கணம் அவள் வாழ்க்கைக்கு மீட்சி கண்டு விட்டாள் என்றிருந்தது. இதைத் தாலிக்கயிற்றோடு அவளைப் பார்க்கையில்தான் உணர முடிகிறது. தனிமையானவள் என்றால் சீண்டிப் பார்க்க வைத்திருக்கும். சீண்டிப்பார்த்ததெல்லாம்போதும் என்று ஒரு கணம் முத்துவின் மனத்தில் வந்தது.

''செண்பகம் என்னையெல்லா கல்யாணத்துக்குக் கூப்புடக்கூடாதுன்னா...''

செண்பகம் பேசாமல் தலை குனிந்து பக்கவாட்டில் பார்த்தாள்.

''நீ கல்யாணத்துக்கும், சாப்பாட்டுக்கும் கூப்புடாட்டி என்ன.... நான் உங்களை கூப்புடக் கூடாதா.....''

இருவரும் முத்துவைப் பார்த்தார்கள்.

''தேனரசா! என்னால் உனக்கு அடி உதைதான் தர முடிஞ்சுது. ஆனால் உன்னால் ஒரு பெண்ணுக்கு வாழ்க்கை தர முடிஞ்சுது. அந்த புத்தி எனக்கில்லே. ஒரு நாள் என் வூட்டுக்கு ரெண்டு பேரும் தம்பதிகளா வரணும். உங்களை கௌரவப் படுத்தணும். நான் குடும்பமில்லாதவனா, பொண்டாட்டி கட்டாதவனா இருந்தாலும் சந்தோஷமா விருந்து வைக்க மனசு இருக்கு. நீங்க வந்தா என்னைக் கௌரவிக்கிற மாதிரி இருக்கும். என்னோட மொரட்டு கசடுக்குள்ளார ஒரு மனுஷன் இருக்கிறதை நீங்கதா தொட்டுக்காட்டி ஆரம்பிச்சு வைக்கணும். பசப்புன்னு மட்டும் என் வார்த்தைகளை நெனச்சிராதீங்க... எப்ப வர்றீங்க?''

அவர் குரல் நழதழுத்து நெகிழ்வடைவதைச் செண்பகமும், தேனரசனும் ஆச்சர்யத்துடன் பார்த்தார்கள். முத்துவின் மாறுதல் பற்றி, சுற்றி இருந்தவர்கள் ஆகாசம் அளவு யோசித்தார்கள். செண்பகத்தின் மஞ்சள் கயிறு பிரகாசித்துக் கொண்டிருந்தது.



அருள்வாக்கு

நன்றாகப் படித்தறிந்த ஒருத்தர் நாலு பேருக்காவது அதைப் படிப்பிக்காமல் போனார் என்று ஏற்படவே கூடாது. நன்றாகக் கற்று வித்வானாகிற எவனும் அப்புறம் தான் கற்றதை மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுத்துப் பிரசாரம் செய்தேயாக வேண்டுமென்பது ஆன்றோர் விதித்த விதி. தன்மட்டில் கற்றவனாயிருந்து பயனில்லை; கற்பிப்பவனாயிருந்து கல்வியின் பயன் வருங்கால சமுதாயத்துக்கும் போகும்படி செய்ய வேண்டும்.

மநுஷ்யனுடைய வாழ்க்கையில் ப்ரஹ்மசர்யம், கார்ஹஸ்த்யம், வானப்ரஸ்தம், ஸந்யாஸம் என்று நாலு ஆச்ரமம் உள்ளது என்றால், கல்வி கற்பிப்பதிலும் நாலு ஸ்டேஜ்கள் உண்டு.

அதீதி, போதம், ஆசரணை, ப்ரசாரணை என்று இந்த நாலுக்குப் பேர். அதீதி என்றால் படிப்பது. முதலில் நன்றாகப் படிக்க வேண்டும். அப்புறம் போதம், அதாவது படித்ததை நன்றாகப் புரிந்து கொண்டு அதிலே மேலும் புது அறிவு பெறுவது. மூன்றாவதாக ஆசரணை. முதலிரண்டும் இப்போதுங் கூடப் பல ஸப்ஜெக்ட்களில் நடந்து விடுகின்றன. ஆனால் இந்த மூன்றாவது விஷயத்தில் தான் கோளாறாக இருக்கிறது. அது என்ன? ஆசரணை என்றால் அறிவிலே இறக்கிக் கொண்டதை நம்முடைய வாழ்க்கையிலே இழைத்து, நடைமுறையில் நடத்திக் காட்டுவது என்று அர்த்தம். கற்ற பின் அதற்குத் தக நிற்பது ஆசரணை.

இந்த மூன்றோடு மட்டும் வித்வானின் லக்ஷணத்தை முடிக்காமல், முடிவாக 'ப்ரசாரணை' என்றும் ஒரு நாலாவது லக்ஷணம் சொல்லியிருக்கிறது. இதுதான் தான் கற்ற கல்வி தன்னோடு போகாமல் அதை நாலு பேருக்குக் கற்றுக் கொடுப்பது. ப்ரசாரம் செய்வது ப்ரசாரணை.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.



அத்தியாயம் 61

நிச்சயதார்த்தம்

வெளியில் காலடிச் சப்தம் கேட்டதும் பூங்குழலி அச்சிறு குடிலின் வாசற் கதவை நோக்கிப் போனாள். அவள் தன்னை விட்டு விட்டு அடியோடு போய் விடப் போகிறாள் என்று சேந்தன் அமுதன் எண்ணிப் பெருமூச்சு விட்டான். அவள் அவ் வாசற்படி வழியாக வெளியேறும் போது தன் உயிரும் தன் உடலை விட்டு வெளியேறி விடும் என்று கருதினான்.

பூங்குழலி கதவைச் சற்றுத் திறந்து வெளியே பார்த்து விட்டு மறுபடியும் கதவை அடைத்துத் தாளிட்டதை சேந்தன் அமுதன் பார்த்தான். இது என்ன விந்தை? தாளிட்டது மட்டுமல்லாமல் திரும்பவும் தன்னை நோக்கி வருகிறாளே?

அவளுடைய உள்ளம் சிறிது இளகி விட்டதோ! இளகினால்தான் என்ன? மறுபடியும் தன்னை வீரனாக வேண்டும் என்றும், இராஜ்யத்தைப் பிடிக்க வேண்டும் என்றும், சிங்காதனம் ஏறி அரசாள வேண்டும் என்றும், — இவ்வாறு போதனை செய்து கொண்டுதானிருப்பாள். உலக ஆசைகள் என்னும் புயற் காற்றினால் அலை வீசிக் கொந்தளிக்கும் கடல் அவளுடைய உள்ளம். சிவபெருமானுடைய பக்தியில் திளைத்து அமைதியுற்றிருக்கும் இனிய புனல் வாவியை ஒத்தது தன் மனம். அதில் எழுந்த சிறிய கொந்தளிப்பு இவளால் நேர்ந்ததுதான். பூங்குழலிக்கும் தனக்கும் ஒரு நாளும் ஒத்து வரப் போவதில்லை. அதைப் பற்றி வீண் மனோராஜ்யம் செய்வதில் என்ன பயன்?

பூங்குழலி அவன் அருகில் வந்ததும் அவனைத் தன் குவளை மலர்க் கண்களால் உற்றுப் பார்த்தாள். சேந்தன் அமுதனின் நெஞ்சம் தத்தளித்தது.

"கதவை ஏன் சாத்தினாய்? யார் வந்தனர்? ஒருவேளை அம்மாதானோ, என்னமோ?" என்றான் அமுதன்.

"யாராயிருந்தாலும் சிறிது நேரம் காத்திருக்கட்டும். நம்முடைய பேச்சு முடியும் வரையில் வெளியில் இருக்கட்டும். ராஜாவும் ராணியும் அந்தரங்கமாகப் பேசிக் கொண்டிருக்கும் போது குறுக்கே வந்து யாரும் தடை செய்யக் கூடாது அல்லவா?" என்றாள்.

"ராஜா — ராணி — யார் ராஜா? யார்

அமரர் கல்கி

ராணி?'' என்று தடுமாறினான் அமுதன்.

''நீ ராஜா; நான் ராணி! இத்தனை நேரம் சொன்னதெல்லாம் உன் மனத்தில் ஏறவே இல்லையா?''

''இல்லை, பூங்குழலி! எனக்கு நீ போதனை செய்வதில் சிறிதும் பயனில்லை என்றுதான் சொன்னேனே? உன் உள்ளப் போக்கும் என் உள்ளப் போக்கும் முற்றும் மாறானவை. அவை ஒத்து வர மாட்டா!'' என்றான் அமுதன்.

''ஒத்து வரும்படி நாம்தான் செய்ய வேண்டும்'' என்றாள் பூங்குழலி.

''அது முடியாத காரியம்!''

''உன்னால் முடியா விட்டால், என்னால் முடியும். அமுதா! நான் தீர்மானம் செய்து விட்டேன். அரசகுமாரனைக் கலியாணம் செய்து கொண்டு அரியாசனம் ஏறும் எண்ணத்தை விட்டு விட்டேன். அரண்மனை வாழ்வையும் அரச போகத்தையும் காட்டிலும் உன்னுடைய அன்பு கோடி மடங்கு எனக்குப் பெரிது. நீ என் வழிக்கு வர மறுப்பதால், நான் உன்னுடைய வழிக்கு வருவேன். உன்னையே நான் மணந்து கொள்வேன்...''

சேந்தன் அமுதன் பரவச நிலையை அடைந்தான். ''பூங்குழலி! பூங்குழலி! எனக்கு இப்போது சுரம் அடிக்கவில்லையே? நான் கனவு காணவில்லையே? இப்போது நீ சொன்ன வார்த்தைகள் என் காதில் தவறாக விழவில்லையே? நான் தவறாகப் பொருள் கொள்ளவில்லையே?'' என்றான்.

''இன்னொரு தடவை சொல்கிறேன், கேள்! நீ என் வழிக்கு வர மறுப்பதால் நான் உன்னுடைய வழிக்கு வரத் தீர்மானித்து விட்டேன். உன்னையே நான் மணந்து கொள்வேன். என் பெரிய அத்தையின் வாழ்க்கையைப் பற்றி நான் அறிந்து கொண்டிருந்த விவரங்கள் என் உள்ளத்தில் வீண் ஆசைகளை உண்டாக்கியிருந்தன. நியாயமாக அவள் சிங்காதனத்தில் வீற்றிருக்க வேண்டியவள் என்று அடிக்கடி எண்ணி, நானும் ஏன் சிங்காதனம் ஏறக்கூடாது என்ற ஆத்திரத்தை எனக்கும் உண்டாக்கி விட்டது. என் அத்தை கொலைகாரனுடைய வேலினால் மரணமடைந்த போது, என்னுடைய ஆசையும் மடிந்து விட்டது. அரண்மனையில் வாழ்கிறவர்கள் படும் அவதிகளையும் வேதனைகளையும் அறிந்து கொண்டேன். அலைகடலில் படகு ஓட்டிக் கொண்டு ஆனந்தமாகக் கழிக்கும் வாழ்க்கைக்கு அரண்மனை வாழ்வு ஒரு நாளும் இணையாகாது என்று அறிந்தேன். அமுதா! உனக்கு உடம்பு சரியானதும் இருவரும் கோடிக்கரை செல்வோம். அங்கே காட்டுக்கு நடுவில் உள்ள கோயிலில் குழகர் தன்னந் தனியாகத் துணை எவருமின்றி இருக்கிறார். நாம் இருவரும் கோடிக்கரைக் குழகருக்குப் புஷ்பத்திருப்பணி செய்வோம். சில சமயம் படகில் ஏறிக் கடலில் செல்வோம். ஈழ நாட்டின் ஓரத்தில் இனிய தீவுகள் எத்தனையோ இருக்கின்றன. அந்தத் தீவுகளில் ஒன்றில் சில சமயம் இறங்குவோம். அங்கே நீ ராஜாவாகவும் நான் ராணியாகவும் இருப்போம். அந்த ராஜ்யத்துக்கு யாரும் போட்டிக்கு வர மாட்டார்கள். அமுதா! இதற்கெல்லாம் உனக்கு ஆட்சேபம் ஒன்றுமில்லையே?''

''ஒரே ஆட்சேபந்தான், பூங்குழலி! இவ்வளவு பெரிய பாக்கியத்துக்கு நான் அருகதை உள்ளவனா என்னும் ஆட்சேபந்தான். இதையெல்லாம் நீ உண்மையாகத்தானே சொல்லுகிறாய்? பிறகு பெரிய ஏமாற்றத்துக்கு என்னை உள்ளாக்குவதற்காகச் சொல்லவில்லையே? இல்லை, இல்லை! நீ உண்மையாகத்தான் சொல்கிறாய். எப்போது கோடிக்கரைக்குப் புறப்படலாம்?''

''உனக்கு உடம்பு நேரான உடனே புறப்படலாம்.''

''எனக்கு உடம்பு நேராகி விட்டது, பூங்குழலி! நான் வேணுமானால் இப்போது எழுந்து நடக்கிறேன், பார்க்கிறாயா?'' என்று கூறிவிட்டுச் சேந்தன் அமுதன் எழுந்திருக்க முயன்றான்.

பூங்குழலி அவன் கையைப் பிடித்து எழுந்திருக்காமல் தடுத்து, ''வேண்டாம்; இன்று ஒரு நாள் மட்டும் பொறுத்துக் கொள்!'' என்றாள்.

வாசற் கதவை யாரோ இலேசாகத் தட்டும் சப்தம் கேட்டது.

''அம்மா கதவைத் தட்டுகிறாள். திறந்து விடு! அம்மாவிடம் இந்தச் சந்தோஷ சமாசாரத்தைச் சொல்வோம்'' என்றான் அமுதன்.

பூங்குழலி போய்க் கதவைத் திறந்தாள். வாசலில் கண்ட காட்சி அவளைச் சிறிது வியப்புறச் செய்தது.

அவள் எதிர்பார்த்தபடி கதவைத் தட்டியவள் வாணி அம்மை அல்ல.

அரண்மனைச் சேவகன் ஒருவன் கதவைத் தட்டியிருக்க வேண்டுமென்று தோன்றியது. கதவு திறந்ததும் சேவகன் ஒதுங்கி நின்றான்.

அப்பால், செம்பியன் மாதேவியும் இளவரசர் மதுராந்தகரும் நின்றார்கள்.

இன்னும் சிறிது தூரத்துக்கு அப்பால், பல்லக்குகள் இரண்டு இறக்கி வைக்கப் பட்டிருந்தன. சிவிகை தூக்கிகளும் காவலர்களும் மரத்தடியில் நின்றார்கள். அவர்களில் ஒருவன் பிடித்துக் கொண்டிருந்த தீவர்த்தி வெளிச்சத்தில் இவ்வளவு காட்சியையும் கண்ட பூங்குழலி செம்பியன் மாதேவியின் முன்னால் தலைவணங்கிக் கும்பிட்டு, ''தாயே! வர வேண்டும்!'' என்றாள்.

''உன் அத்தை மகனுக்கு உடம்பு எப்படியிருக்கிறது, பூங்குழலி! வாணி அம்மை எங்கே?'' என்று கேட்டுக் கொண்டே மழவரையன்மா மகளாகிய முதிய எம்பெருமாட்டி அந்தக் குடிசைக்குள்ளே பிரவேசித்தாள்.

மதுராந்தகன் வெளியிலேயே நின்றான். ஆனால் அவனுடைய குரோதம் ததும்பிய கண்கள் ஆர்வத்துடன் குடிசைக்கு உள்ளே நோக்கின.

வருகிறவர் சிவபக்த சிரோமணியும் தங்களுக்கு மானியம் அளித்துக் காப்பாற்றி வருகிறவருமான செம்பியன் மாதேவி என்று அறிந்ததும் சேந்தன் அமுதனும் எழுந்தான்.

''தாயே! நல்ல சமயத்தில் வந்தீர்கள். முதன் முதல் சந்தோஷமான செய்தியைத் தங்களிடம் தெரிவித்து ஆசிபெறும் பாக்கியம் எங்களுக்குக் கிட்டியிருக்கிறது. சிவபெருமானுடைய திருவருளாலேயே இது நடந்திருக்க வேண்டும். இன்னும் என் அன்னையிடம் கூடச் சொல்லவில்லை. அன்னையே! இத்தனை காலங் கழித்துப் பூங்குழலி மனமிரங்கி என்னை மணம் புரிந்து கொள்ள இசைந்திருக்கிறாள். தாங்கள்தான் கூட இருந்து எங்கள் திருமணத்தை நடத்தி வைக்க வேண்டும். நாங்கள் திருமணம் செய்து கொண்ட பிறகு கோடிக்கரைக் குழகர் கோயிலுக்குப் போய் அங்கே பூ மாலைக் கைங்கரியம் செய்ய எண்ணியிருக்கிறோம்!'' என்றான்.

செம்பியன் மாதேவியின் முகத் தோற்றம் இச் செய்தியினால் அந்த மாதரசி மகிழ்ச்சி அடைந்தாளா, கலக்கமடைந்தாளா என்பதைத் தெரிந்து கொள்ள முடியாமலிருந்தது. அவருடைய இதழ்களில் மகிழ்ச்சிப் புன்னகை தோன்றியது. ஆனால் கண்களிலோ கண்ணீர் ததும்பி நின்றது.

அமுதனும் பூங்குழலியும் அவர் முன்னால் வணங்கிய போது, மாதரசி தழுதழுத்த குரலில், ''குழந்தைகளே! இறைவன் அருளால் உங்கள் இல்வாழ்க்கை இன்பமயமாக இருக்கட்டும்!'' என்று ஆசி கூறினார்.

அந்தச் சமயம் வாணி அம்மை அங்கு வந்து சேர்ந்தாள். அவளிடம் செம்பியன் மாதேவி சமிக்ஞையினால் அமுதனுடைய உடம்பைப் பற்றித் தெரிந்து கொள்ள வந்ததாகக் கூறினார். வந்த இடத்தில் அவர்களுக்குத் திருமணம் நடக்கப் போகிற செய்தியை அறிந்து மகிழ்ச்சி அடைந்ததாகவும் தெரிவித்தார்.

அச் சமயம் வாணி அம்மையின் முகபாவமும் கலக்கத்தையும் களிப்பையும் ஒருங்கே காட்டுவதாயிருந்தது.

மேலும் சிறிது நேரம் சேந்தன் அமுதனுடனும் பூங்குழலியுடனும் பேசிக் கொண்டிருந்த பிறகு செம்பியன்மாதேவி வெளிக் கிளம்பினார்.

அவரும் மதுராந்தகனும் பல்லக்குகள் இரண்டும் இறக்கி வைத்திருந்த இடம் நோக்கிச் சென்றார்கள்.

வெளியில் ஒரு மரத்தடியில் முதிய பிராட்டியார் நின்று, சுற்று முற்றும் பார்த்தார். அருகில் ஒருவரும் இல்லை என்பதைக் கண்ட பிறகு, மதுராந்தகனை நோக்கி, ''பார்த்தாயா, மதுராந்தகா! என் வயிற்றில் பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த மகன் அதோ அக் குடிசையில் வாழும் சேந்தன் அமுதன். அவனுக்கு ஐந்து வயதானபோதே எனக்கு இச் செய்தி தெரிந்து விட்டது. அவன் எட்டு நாள் குழந்தையாயிருந்த போது மூச்சுப் பேச்சற்றுக் கிடந்ததைப் பார்த்து இறந்து விட்டதாக எண்ணினேன். பிள்ளைப் பாசத்தினால் உன்னை என் குழந்தையாக ஏற்றுக் கொண்டு இவனைக் கொண்டு போய்ப் புதைத்து விடச் சொன்னேன். இவனை எடுத்துப் போன வாணி வெகு காலம் திரும்பி வரவே இல்லை. ஐந்து ஆண்டு கழிந்த பிறகு இவளையும் இப் பிள்ளையையும் பார்த்ததும் உண்மை தெரிந்து கொண்டேன். ஆயினும், உன்னை நான் கைவிடவில்லை. அவன் என் வயிற்றில் பிறந்த மகன் என்பதற்காக அவனை அரண்மனைக்கு வரவழைத்துக் கொள்ளவுமில்லை. எல்லாம் இறைவன் திருவிளையாடல் என்று எண்ணி உன்னை என் வயிற்றில் பிறந்த மகனைக் காட்டிலும் பதின் மடங்கு அருமையாக வளர்த்து வந்தேன். அதற்காகவெல்லாம் எனக்கு இப்போது இந்த வரத்தை நீ கொடு! சோழ சிங்காதனம் வேண்டாம் என்று சொல்லி விடு! நீ சிங்காதனம் ஏறுவதற்குக் கூட நான் ஆட்சேபிக்க மாட்டேன். ஆனால் உன் வம்சத்தில் பிறக்கும் பிள்ளைகள் ஊமைகளாக இருந்து விட்டால் என்ன செய்கிறது



என்றுதான் அஞ்சுகிறேன்!'' என்றார்.

இவ்விதம் செம்பியன்மாதேவி கூறி வந்த போது மதுராந்தகனுடைய முகம் பேயடித்த முகமாகக் காணப்பட்டது.

அவன் மணம் செய்து கொண்டிருந்த சின்னப் பழுவேட்டரையரின் மகளுக்கு ஒரு பெண் மகவு பிறந்திருந்தது. அதற்கு இரண்டு பிராயம் ஆகியும் இன்னும் பேசத் தொடங்கவில்லை என்பது அவனுடைய நினைவுக்கு வந்தது.

பிரமை பிடித்து மரத்தோடு மரமாக நின்ற மதுராந்தகனைப் பார்த்து அவனை வளர்த்த அன்னையாகிய மாதரசி, ''குழந்தாய்! ஏன் இப்படியே நின்று விட்டாய்? வா, போகலாம்! அரண்மனைக்குப் போய் நன்றாக யோசித்து நாளைக்குப் பதில் சொல்லு!'' என்றாள்.

மதுராந்தகன் தட்டுத் தடுமாறி, ''தாயே! யோசிப்பதற்கு இனி என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை. தாங்கள் போங்கள்! என்னுடைய இடத்தில் அரண்மனையில் வளர்ந்திருக்க வேண்டிய தங்கள் குமாரனிடம் சிறிது பேசி விட்டுப் பிறகு வருகிறேன்!'' என்றான்.

''அப்படியே செய்! வரும் போது பல்லக்கின் திரைகளை நன்றாக மூடிக் கொண்டு வா! கொடும்பாளூர் வீரர்கள் உன்னைப் பார்த்து விட்டால் ஏதேனும் கூச்சல் போட்டாலும் போடுவார்கள்!'' என்று சொல்லி விட்டு அம்மாதரசி மேலே பல்லக்கை நோக்கி நடந்தார்.

மதுராந்தகனுடைய முகம் முன்னை விடக் குரோதமும் மாற்சரியமும் நிறைந்த பயங்கர மாறுதலை அடைந்ததை அப்பெருமாட்டி கவனியாமலே அங்கிருந்து சென்று விட்டார்.



அத்தியாயம் 62

ஈட்டி பாய்ந்தது!

சற்று நேரம் நின்ற இடத்திலேயே நின்றான் மதுராந்தகன். குடிசைக்குப் போகலாமா, கோட்டைக்குப் போகலாமா என்று அவன் உள்ளத்தில் ஒரு போராட்டம் நடந்தது போலத் தோன்றியது. பின்னர் அவன் தன்னைச் சுமந்து வந்த பல்லக்கின் அருகில் சென்று, சிவிகைத் தூக்கிகளிடமும் காவலர்களிடமும் ஏதோ சொன்னான். சிவிகைக்கு உள்ளேயிருந்து ஏதோ ஒரு பொருளையும் எடுத்துக் கொண்டான். சிவிகையைத் தூக்கிக் கொண்டு ஆட்கள் புறப்பட்டுச் சென்றார்கள். அவர்களுடன் தீவர்த்தி வெளிச்சமும் சென்றது.

மதுராந்தகன் திரும்பக் குடிசையை நோக்கி வந்த போது, அவனும் மாதேவடிகளும் எந்த மரத்தின் ஓரமாக நின்று பேசிக் கொண்டிருந்தார்களோ, அதே மரத்தின் பின்புறத்திலிருந்து திடீரென்று ஒரு மனிதன் வெளிப்பட்டு வந்ததைக் கண்டு மதுராந்தகன் ஒரு கணம் திடுக்கிட்டான்.

அவன் வேறு யாரும் இல்லை. பாதாளச் சிறையிலிருந்து தப்பித்து வந்தியத் தேவனோடு வந்திருந்த 'பைத்தியக்காரன்' கருத்திருமன்தான்.

இன்னமும் அவன் பார்ப்பதற்குப் பைத்தியக்காரனைப் போலவே இருந்தான். அவனுடைய தோற்றமும் அவன் திடீரென்று அந்த இடத்தில் வெளிப்பட்டதும் மதுராந்தகனுக்குத் திகிலை உண்டாக்கியதில் வியப்பில்லைதானே?

அடுத்த கணம் மதுராந்தகன் சிவிகையிலிருந்து எடுத்து வந்த கூரிய குத்து வாளை ஓங்கினான்.

கருத்திருமன் அவனைக் கையமர்த்தி, "ஐயா! நில்லுங்கள்! நான் தங்கள் விரோதி அல்ல!" என்றான்.

"விரோதி அல்லவென்றால், பின்னே நீ யார்? என் நண்பனா?" என்று மதுராந்தகன் கேட்டான்.

"ஆம், ஐயா! நண்பன்தான்!"

மதுராந்தகன் குரோதமும் துயரமும் ததும்பிய குரலில் மெல்லிய சிரிப்புச் சிரித்துவிட்டு, "நல்ல நண்பன் கிடைத்தாய்! உலகமே என்னை விட்டு நழுவிச் செல்லும் போது, நீயாவது கிடைத்தாயே?" என்றான்.

"ஆம், ஐயா! உலகத்தில் யாரும் தங்களுக்குச் செய்ய முடியாத உதவியைத் தங்களுக்கு நான் செய்ய முடியும்!" என்றான் கருத்திருமன்.

"அது என்ன, சொல், பார்க்கலாம்! நேர



மாகி விட்டது. சொல்லுவதைச் சீக்கிரம் சொல்லு!''

''எதற்கு நேரம் ஆகிவிட்டது?'' என்று கருத்திருமன் கேட்டு விட்டு, மதுராந்தகனை உற்று நோக்கினான்.

''அரண்மனைக்குப் போவதற்குத்தான். வேறு எதற்கு?''

''தங்களுக்கு உரிமை இல்லாத அரண்மனைக்குத் தாங்கள் திரும்பிப் போகப் போகிறீர்களா?''

மதுராந்தகன் மறுபடியும் அதிர்ச்சி அடைந்து, ''அடே! என்ன சொல்லுகிறாய்? உனக்கு என்ன தெரியும்? எப்படித் தெரியும்? விரைவிலே சொல்லு! இல்லாவிடில்.....'' என்று கையிலிருந்த குத்து வாளை ஓங்கினான்.

''ஐயா! வாளை ஓங்க வேண்டாம். தங்கள் பகைவர்கள் எதிர்ப்படும்போது உபயோகிப்பதற்குத் தீட்டி வைத்துக் கொள்ளுங்கள். சற்று முன் தாங்களும் தங்களை வளர்த்த பெரிய மகாராணியும் இந்த மரத்தடியில் நின்று பேசிக் கொண்டிருந்தீர்கள். நான் மரத்தின் பின்னால் நின்றதை நீங்கள் இருவரும் கவனிக்கவில்லை.....''

''ஆகா! ஒட்டுக் கேட்டு இரகசியத்தை அறிந்து கொண்டாயா? அந்தத் துணிச்சலுடனேதான் என்னை வழி மறித்து நிறுத்தினாயா?''

''இல்லை, இல்லை! மகாராணி தங்களிடம் சொன்ன செய்தி எனக்கு முன்னமே தெரியும். அதைவிட அதிகமாகவும் தெரியும். அந்த மாதரசி தங்களை வயிற்றில் வைத்து வளர்த்த அன்னை அல்லவென்றும், கண்டராதித்தர் தங்கள் தந்தை அல்லவென்றும் அவர் தங்களிடம் கூறினார். தங்களுடைய அன்னை யார் என்றும் சொல்லி இருப்பார். ஆனால், தங்கள் தந்தை யார் என்று சொல்லியிருக்க மாட்டார்.''

மதுராந்தகன் அவனை வெறித்து நோக்கி, ''உனக்கு அது தெரியுமா?'' என்று கேட்டான்.

''ஆம், தெரியும்.''

மதுராந்தகன் அந்தப் பைத்தியக்காரத் தோற்றமுடையவன்தான் அவன் தந்தை என்று உரிமை கொண்டாடப் போகிறானோ என்று பீதி அடைந்தான். அருவருப்பும் ஆத்திரமும் நிறைந்த குரலில், ''உனக்கு எப்படித் தெரியும்? நீ யார்?'' என்று கேட்டான்.

''நான் தங்கள் தந்தையின் ஊழியன்!'' என்று கருத்திருமன் கூறியதும், மதுராந்தகன் முகம் தெளிவு பெற்றது.

கருத்திருமன் சற்று அருகில் நகர்ந்து வந்து ''ஐயா! தங்கள் தந்தை.....'' என்று மெல்லிய குரலில் கூறினான்.

மதுராந்தகன் காதில் அவன் கூறியது விழுந்தது. மதுராந்தகனுடைய தலை சுற்றியது. கீழே விழப் பார்த்தவன் சமாளித்துக் கொண்டு, கருத்திருமனுடைய புஜங்களை உறுதியாகப் பற்றிக் கொண்டு, ''நீ கூறியது உண்மைதானா? உண்மையாகவே நான் இராஜகுமாரன் தானா?'' என்று கேட்டான்.

''ஆம், ஐயா! இதைத் தங்களிடம் சொல்வதற்காகவே பல வருஷங்களுக்கு முன்பு நான் இங்கு வந்தேன். தங்களை அந்தரங்கமாகப் பார்த்துப் பேசுவதற்குச் சமயம் நோக்கிக் கொண்டிருந்தேன். துரதிர்ஷ்டவசமாகச் சின்னப் பழுவேட்டரையர் என்னை அரண்மனைத் தோட்டத்தில் பார்த்து விட்டார். பிடித்துப் பாதாளச் சிறையில் போட்டு விட்டார்.''

''எப்போது தப்பினாய்? எப்படி?''

''இன்றைக்குத்தான் வந்தியத்தேவன் என்னும் வாலிபன் ஒருவனுடைய உதவியினால் தப்பித்து வெளிவந்தேன்.....''

''ஆகா நானும் கேள்விப்பட்டேன். கரிகாலரைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டவன் அல்லவா அவன்?''

''ஆம்; ஐயா! ஆனால் உண்மையில் ஆதித்த கரிகாலரைக் கொன்றவன் அந்த வாலிபன் அல்ல!''

''அதைப் பற்றி நமக்கு என்ன கவலை? கொன்றவனாகவே தான் இருக்கட்டுமே? இப்போது எங்கே அவன்?''

''அதோ சற்றுத் தூரத்தில் தெரியும் வேலியின் மறைவில் இருக்கிறான். எனக்கும் அவனுக்கும் இரண்டு குதிரைகளுடன் காத்திருக்கிறான். நான் நேரம் செய்வது பற்றி அவன் இப்போது கோபம் அடைந்திருப்பான். அதைப் பற்றி நான் சிறிதும் கவலைப்படவில்லை. எதிர்பாராத விதத்தில் தங்களைச் சந்தித்து விட்டேன்.''

''எப்போது நீங்கள் இங்கே வந்தீர்கள்?'' என்றான் மதுராந்தகன்.

''சற்று முன்னாலேதான் வந்தோம். இந்தக் குடிசைக்கு அருகில் இரண்டு குதிரைகள் இருக்கின்றனவென்று தெரிந்து கொண்டு வந்தோம். குதிரைகளைத் தேடிக் கொண்டிருந்த போது தாங்களும் தங்களை வளர்த்த அன்னையும் தீவர்த்திகளுடன் சாலையில் வந்தீர்கள். அந்த வெளிச்சத்தில் குதிரைகளைக் கண்டு பிடித்தோம். நான் பல வருஷங்களுக்குப் பிறகு வாணியைப் பார்த்தேன். அவளுடன் ஊமைப் பாஷையில் பேசிக் கொண்டிருக்கும் போதே நீங்கள் இந்தக் குடிசைப் பக்கம் திரும்பி வந்தீர்கள்.

நீங்கள் இந்தக் குடிசைக்குத்தான் வருகிறீர்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. வந்தியத் தேவன் வேலி மறைவுக்கு ஓடிவிட்டான். நானும் வாணியும் இம் மரத்தின் பின்னால் சிறிது நேரம் நின்றோம். பிறகு அவளும் குடிசைக்குள் போய்விட்டாள். நான் மட்டும் இங்கு நின்று கொண்டிருந்தேன். அதன் பலனாகத் தங்களைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது....''

''சரி, இனிமேல் நீ என்ன செய்யப் போகிறாய்?''

''தாங்கள் எவ்விதம் சொல்லுகிறீர்களோ, அவ்விதம் செய்கிறேன், ஐயா! தங்கள் பிறப்பைக் குறித்த உண்மையை அறிந்த பிறகும் தஞ்சை அரண்மனைக்குத் திரும்பிப் போகப் போகிறீர்களா? ஒன்று ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். தாங்கள் சோழ குலத்து இளவரசர் அல்லவென்பது இன்னும் சிலருக்கும் தெரியும். முதன் மந்திரிக்கும் அவருடைய ஒற்றன் ஆழ்வார்க்கடியான் என்பவனுக்கும் தெரியும். என்றைக்காவது ஒரு நாள்......''

''ஆமாம், ஆமாம்! தஞ்சை அரண்மனைக்குப் போக எனக்கும் விருப்பமில்லைதான். நீ என்ன யோசனை சொல்லுகிறாய்?''

''அந்த வேலி மறைவில் இரண்டு குதிரைகள் இருக்கின்றன. தாங்கள் குடிசைக்குள் போவது போல் போய் விட்டு அந்த வேலிப் பக்கம் வாருங்கள். நான் வந்தியத்தேவனுடன் சிறிது பேசிக் காலந் தாழ்த்திக் கொண்டிருக்கிறேன். தங்கள் கையிலுள்ள வாளை அவன் மீது எறிந்து கொன்று விடுங்கள். இரண்டு குதிரைகள் மீது நாம் இருவரும் ஏறிப் போய்விடுவோம். கோடிக்கரை சென்று இலங்கைக்குப் போவோம். இலங்கை அரசர், சோழகுலத்தின் பகைவர்; பாண்டிய குலத்துக்குப் பரம்பரை சிநேகிதர். நான் இலங்கை மன்னரை நன்கு அறிவேன். பாண்டிய குலத்தின் மணி மகுடமும் இரத்தின ஹாரமும் இருக்குமிடமும் அறிவேன். என்ன சொல்லுகிறீர்கள்?''

மதுராந்தகன் சிறிது நேரம் யோசனை செய்தான். அவனுடைய உள்ளம் அந்தச் சில வினாடி நேரத்தில் எத்தனையோ கோட்டைகள் கட்டியது.

''ஐயா! நேரம் போகிறது. தங்கள் முடிவு என்ன? வந்தியத் தேவன் இனி இங்கேயே வந்து விடுவான்.''

''அவனைக் கொல்ல வேண்டும் என்றா சொல்லுகிறாய்?''

''தங்களுக்குத் தயக்கமாயிருந்தால் தங்கள் கையிலுள்ள குத்துவாளை என்னிடம் கொடுங்கள்!''

''வேண்டாம்; இந்த வாளுக்கு வேறு வேலை இருக்கிறது. வந்தியத் தேவனைப் பற்றி எனக்குத் தெரியும். அவன் நல்ல வீரன். அவனையும் நம்முடன் அழைத்துக் கொண்டு போகலாமே?''

''அழைத்துப் போகலாம்; ஆனால் இன்னொரு குதிரை?''

''குதிரைக்கு என்ன குறைவு? நான் இன்னமும் பட்டத்து இளவரசன் மதுராந்தகன் தானே!'' என்று கூறி விட்டுக் கோபச் சிரிப்புச் சிரித்தான்.

பிறகு, ''நீ போ! அவனைச் சற்று நேரம் பொறுமையாக இருக்கச் சொல்! இந்தக் குடிசைக்காரனைப் பார்த்து ஒரு வார்த்தை பேசிவிட்டு விரைவில் வந்து விடுகிறேன்!'' என்றான்.

கருத்திருமன், வந்தியத் தேவன் மறைந்து நின்ற வேலியைத் தேடிக் கொண்டு போனான். நல்ல இருட்டு. தூரத்தில் இராஜ பாட்டையில் அவ்வப்போது சிலர் தீவர்த்தி பிடித்துக் கொண்டு போனபோது சிறிது வெளிச்சம் வந்தது. வெகு தூரத்திலிருந்து வந்த அந்த மங்கலான வெளிச்சத்தில் இரண்டு கம்பீரமான புரவிகள் வேலிகளில் கட்டப்பட்டு நிற்பது தெரிந்தது. ஆனால் வந்தியத் தேவனைக் காணவில்லை. மெல்லிய குரலில் கூப்பிட்டும் பார்த்தான். பதிலுக்குக் குரல் கேட்கவில்லை.

''சரி; அவனாகத் தொலைந்து போனால் நல்லதாய்ப் போயிற்று'' என்று கருத்திருமன் எண்ணிக் கொண்டான்.

வந்தியத் தேவனும் கருத்திருமனும் முதலில் நந்தவனக் குடிசையருகில் வந்தபோது அங்கே இருள் சூழ்ந்திருந்தது. குடிசைக்குள் எரிந்த சிறிய விளக்கிலிருந்து சில ஒளிக் கிரணங்கள் வெளியே எட்டிப் பார்த்தன.

தாமரைக் குளத்திற்குத் தண்ணீர் மொள்ளச் சென்ற வாணி அம்மை யாரோ இருவர் இருட்டில் வருவதைக் கண்டு தயங்கி நின்றாள். முதலில் வந்தியத் தேவனுடைய முகம் அவள் பார்வையில் தென்பட்டது. உடனே அவளுடைய முகம் மலர்ந்தது. முன்னொரு தடவை சேந்தன் அமுதன் அவனை அழைத்து வந்ததை அவள் மறந்து விடவில்லை. வரவேற்புக்கு அறிகுறியாகத் தலையை அசைத்தாள்.

பின்னால் தொடர்ந்து வந்த கருத்திருமனைக் கண்டதும் பேய் பிசாசைக் கண்டவளைப் போல் பீதி அடைந்து செயலற்றுப்

பிரமித்து நின்றாள்.

கருத்திருமன் அவளுடன் சமிக்ஞை பாஷையில் பேச முயன்று, அவளுடைய பீதியை ஒரு வாறு போக்கினான்.

அவர்களிருவரையும் தனியாக விட்டு விட்டு வந்தியத் தேவன் குடிசையை அணுகினான். வாசற் கதவு அப்போது தான் தாளிடப் பட்டது. பலகணி வழியாக எட்டிப் பார்த்தான். சேந்தன் அமுதன் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருப்பதற்குப் பதிலாக முக மலர்ச்சியுடன் பூங்குழலியுடன் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்து அவனுக்குச் சிறிது நிம்மதி ஏற்பட்டது.

அவர்களுடைய பேச்சினிடையில் குறுக்கிட்டு விடைபெற்றுக் கொண்டு போக முயல்வது உசிதமா என்று யோசித்துக் கொண்டிருக்கையிலேயே, செம்பியன்மாதேவியும் மதுராந்தகனும் அவர்களுடைய பரிவாரங்களும் வந்து விட்டார்கள்.

உடனே அவன் குடிசையை விட்டு நகர்ந்து வேலியைத் தாண்டி அப்பால் குதித்தான். அங்கே கட்டியிருந்த குதிரைகளைக் கண்டதும் ஆழ்வார்க்கடியான் அந்த வரைக்கும் தன்னை ஏமாற்றி மோசம் செய்யவில்லையென்று உறுதி பெற்றான். கருத்திருமன் வரவுக்காக அங்கேயே காத்திருந்தான்.

சிவிகைகள், பரிவாரங்கள், தீவர்த்திகள் எல்லாம் போன பிறகும் கருத்திருமன் வராதிருக்கவே, வந்தியத்தேவன் பொறுமை இழந்தான்.

மீண்டும் வேலியைத் தாண்டிக் குதித்து வந்தான். மரத்தடியில் மதுராந்தகனும் கருத்திருமனும் பேசிக் கொண்டிருப்பதைக் கவனித்தான். மதுராந்தகன் கண்ணில் பட அவன் விரும்பவில்லை. கருத்திருமனுக்கும் மதுராந்தகனுக்கும் என்ன அந்தரங்கப் பேச்சு என்ற ஐயமும் அவன் உள்ளத்தில் உதித்தது. அவர்களுடைய பேச்சில் ஒரு பகுதி அவன் காதில் விழுந்தது.

மதுராந்தகன் குடிசையை நோக்கிப் போன போது, அவனையறியாமல் வந்தியத்தேவனும் பின்தொடர்ந்து போனான்.

மதுராந்தகன் குடிசை வாசலில் சென்று கதவை இடிக்கலாமா, வேண்டாமா என்று தயங்கி நின்றான். அப்போது உள்ளிருந்து கலகலவென்று சிரிப்புச் சப்தம் கேட்டது. அந்தச் சிரிப்பின் ஒலியினால் மதுராந்தகனுடைய மனம் மாறி விட்டதோ, அல்லது எண்ணி வந்த காரியத்துக்குத் துணிவு வரவில்லையோ, தெரியாது. உடனே திரும்பிக் கருத்திருமன் சென்ற திசையை நோக்கிச் செல்லத் தொடங்கினான்.

வந்தியத்தேவன் அவன் கண்ணில் படாமல் தப்புவதற்காக அப்பாலிருந்த ஒரு மரத்தின் மறைவுக்குப் பாய்ந்தான். அப்படிப் பாயும் போது அவன் கண்ணில் ஒரு விபரீதமான காட்சி தென்பட்டது. குடிசைக்குப் பின்புறச் சுவரில் ஒரு பலகணி இருந்தது. அதன் வழியாகக் குடிசையில் எரிந்த விளக்கின் ஒளி சிறிது வெளியே வந்து கொண்டிருந்தது. அந்த ஒளியில் ஒரு மனித உருவம் கையில் ஒரு குட்டையான ஈட்டியுடன் பயங்கரமாக நிற்பதைக் கண்டான்.

குடிசையின் பலகணி வழியாக அந்த உருவம் உள்ளே உற்றுப் பார்த்தது.

பின்னர், ஈட்டியைப் பலகணி வழியாக உள்ளே எறியும் நோக்குடன் குறிபார்க்கத் தொடங்கியது. ஆனால் உடனே எறிந்து விடவில்லை. குறி பார்ப்பதும் மறுபடி கீழே தழைப்பதுமாக இருந்தது.

அதே சமயத்தில் குதிரைகள் புறப்படும் காலடிச் சப்தம் கேட்டது.

வந்தியத்தேவன் ஒரு கண நேரம் தத்தளித்தான். குதிரைகள் இரண்டும் போய் விட்டால் அவன் தப்பிச் செல்வது அசாத்தியமாகி விடும்.

குதிரையைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் போனால் இங்கே இந்தக் கரிய நிழல் உருவம் என்ன கொடிய காரியம் செய்ய எண்ணுகிறதோ, அதைத் தடுக்க முடியாமற் போகும்.

வந்தியத்தேவனுடைய தத்தளிப்பு ஒரு நிமிட நேரத்துக்கு மேல் நீடிக்கவில்லை.

குதிரைகள் போனால் போகட்டும்; அவன் கடமை இப்போது இங்கேதான்.

கையில் ஈட்டியுடன் நின்ற கரிய உருவத்தை நோக்கி மெள்ளச் சென்றான்.

குடிசைக்குள்ளிருந்து 'வீல்' என்று ஒரு குரல், — பீதி நிறைந்த பெண் குரல், தெளிவாகக் கேட்டது.

வந்தியத்தேவன் ஜாக்கிரதையை விட்டு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான்.

ஈட்டியை உள்ளே எறிய இருந்தவன் வந்தியத்தேவன் ஓடி வரும் சப்தம் கேட்டுத் திரும்பினான்.

திரும்பிய வேகத்துடன் அவன் மீது ஈட்டியை எறிந்தான்.

ஈட்டி வந்தியத்தேவனுடைய விலாவில் பாய்ந்தது. அவன் கீழே விழுந்தான்.

அவன் என்ன ஆனான் என்று கூடப் பாராமல் ஈட்டியை எறிந்தவன் அங்கிருந்து ஓட்டம் எடுத்தான்.

(தொடரும்)

ரசனை

கமலாலயன்

குழந்தை தோளிலிருந்து நழுவி நழுவி இறங்கிக் கொண்டிருக்க, கையில் பிடித்திருந்த வயர் கூடை பாறாங்கல்லாய்க் கனத்தது. கடைத்தெரு நெரிசலில் கூட 'கணகண' வென்று மணியடித்துக் கொண்டு வேகமாக வரும் சைக்கிள்காரர்கள்; இரு புறமும் கடைகளைப் பராக்குப் பார்த்துக் கொண்டே நடந்து வருகிறவர்கள். இவர்கள் தன் மேல் இடித்து விடக் கூடாதே என்று





''என் பையனை நேற்று அந்த முகமூடித் தலைவன்கிட்டே சேர்த்துட்டேன்!''

''அப்படியே என் மகனுக்கும் ஒரு 'சான்ஸ்' பாரேன்... பாவம், இன்னும் 'பிளேடோ'டவே சுத்தறான்...!

— அ. தெய்வசிகாமணி.

இப்படியும் — அப்படியுமாக ஒதுங்குவதிலேயே அவளுக்கு மூச்சு வாங்குகிற அளவுக்குப் பதற்றமாயிருந்தது.

''இந்த வயர்க் கூடையாச்சும் எடுத்துட்டு வந்தா என்ன?'' என்று முன்னால் தன் போக்கில்— இவள் வருகிறாளா, இல்லையா என்பதைக் கூடக் கவனிக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டு நடக்கும் விஜயனைக் கேட்டு விட்டால் கூடத் தேவலாம் என்பது போன்ற எரிச்சல் மூண்டது இவளுக்கு. கேட்டால், இங்கே ஒன்றும் சொல்ல மாட்டான். ஒருவேளை அவனே வாங்கிக் கொண்டு எடுத்து வரவும் செய்யலாம். ஆனால் வீட்டுக்குள் போய் நுழைந்ததுமே அந்த வயர்க் கூடை சாமான்களோடு வந்து இவள் முகத்திலேயே விழும். பொட்டலங்கள் உடைந்தும், அவிழ்ந்தும் சிந்திச் சிதறிக் கலந்து கிடக்கிற மளிகைச் சாமான்களை உட்கார்ந்து பொறுக்கிப் பிரித்தெடுப்பதை விட இப்போது வயர்க் கூடையையும், குழந்தையையும் சேர்த்துச் சுமப்பது சுலபம் தான்...!

நடந்து கொண்டே வலது பக்கமாகப் பார்த்தவள் நின்று விட்டாள். புத்தகக் கடையில், புத்தகங்களோ, உள்ளே உட்கார்ந்திருக்கும் ஆட்களோ கூடத் தெரியாத அளவுக்கு விதம் விதமாக — ரகம் ரகமாக — வாழ்த்து அட்டைகள் சரஞ்சரமாய்க் கோக்கப்பட்டுத் தொங்கிக் கொண்டிருந்தன. இன்னும் பதினைந்து — இருபது நாள் இருக்கிறது பொங்கலுக்கு. ஒரு மாதம் முன்னாலிருந்தே இது மாதிரி வாழ்த்துக்கள் தொங்க ஆரம்பித்தாகி விட்டது.

ஓரத்தில் நின்று பார்க்கும்போதே அந்த வாழ்த்து அட்டைகளின் படங்களில் இவளுக்கு மனம் லயித்துப் போனது. கல்யாணத்துக்கு முன்னால், படிக்கிற காலத்தில்— பார்த்துப் பார்த்துத் தேர்ந்தெடுத்துப் பிரியமாய்த் தோழிகளுக்கும் — இவளுக்குப் பிடித்தமான ராதா மிஸ்ஸுக்கும் அனுப்புகிற அட்டைகள் ஞாபகம் வந்தன. வெறும் சம்பிரதாயமான வாழ்த்து அட்டைகளல்ல; இவளது ரசனையையும், மனத்தில் நிறைந்து பொங்குகிற பிரியத்தையும் சுமந்து செல்கிற அன்னப் பறவைகள்.

'எல்லாம் ஒரு காலம்..' என்று பெருமூச்சோடு நினைத்துக் கொண்டு நின்றாள்.

முன்னால் நடந்து கொண்டிருந்தவன் கொஞ்ச தூரம் வரை போன பிறகுதான் இவள் அங்கேயே நின்று விட்டதை உணர்ந்தான். வேகமாகத் திரும்பி வந்தான். அவன் வருகிற வேகத்திலேயே இவளுக்குக் கலக்கம் மூண்டது.

''என்ன இங்கே நின்னுட்டுப் பராக்குப் பார்க்கற...? வேகமா வந்து தொலையேன்...!''

''இல்லீங்க.. வந்து...''

''என்ன, சொல்லு...''

''பொங்கலு வருது.. நாலஞ்சு கிரீட்டிங் கார்டு வாங்கிக்கறேன்...'' — குழந்தையின் ஆவல் ததும்பியது குரலில்.

எரிச்சலும் — கடுகடுப்பும் மூண்டு வர ஏதோ சொல்ல வாயெடுத்தவன் கிரீட்டிங்ஸ் கார்டுகள் தேர்ந்தெடுக்க அருகில் நிற்கும் ஆட்களின் கவனம் இவர்கள் மேல் திரும்புவதை உணர்ந்ததும் முணுமுணுப்புடன் மௌனமானான்.

''இந்தப் பையைக் கொஞ்சம்...''

— தயங்கினாள் இவள். சுள்ளென்று விழுந்தான் விஜயன்.

அப்படி கீழே வெச்சுட்டு, சட்டுன்னு பாரு..''

— மௌனமாகக் கடையை நெருங்கி ஓர் ஓரமாகப் பையை வைத்து விட்டுக் கார்டுகளை ஆவலுடன் பார்த்தாள்.

மனத்தை அள்ளி ஒன்றிப் போகச் செய்து விடுகிற கார்டுகள். ஆப்செட் பிரிண்டிங்கின் நேர்த்தியையும் — ஓவியர்களின் தூரிகைக் கனவுகளையும், புகைப்படக் கலைஞர்களின் கேமராக்கள் வடித்திருந்த கவிதைகளையும் — துல்லியமாய் வெளிப்படுத்துகிற கார்டுகள். எதை எடுப்பது, எதை விடுவது என்று திணறிப் போனாள். தோளில் அரைத் தூக்கத்திலிருந்த குழந்தை விழித்துக் கொண்டு இலேசாகச் சிணுங்கியபடியே மீண்டும் தூங்கிப் போனாள்.

இவள் படங்களைக் கவனமாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தாள்.

மேற்கு வான் சரிவில், ஆதவன் மறையும் வேளை.. பொன் பூச்சுப் பெற்று மினுக்கிற தூரத்துத் தென்னை மரங்கள்...

வயல்களில் குனிந்து நாற்று நட்டுக் கொண்டிருக்கும் உரமேறித் திரண்ட உழைக்கும் பெண்கள், வேலையின் நடுவே

அண்ணாந்து பார்த்து விடியலைத் தேடுகிற ஏக்கத்தின் வெளிப்பாடு...

'பூப்போலக் கண்கள்.. பூப்போலக் கன்னம்...' என்று கவிஞர் பரவசப்பட்ட — குழந்தைகளின் விதம் விதமான படங்களில் ஒன்றிரண்டு...

— பார்த்துப் பார்த்து இப்படி நாலைந்து படங்களை அவன் தேர்ந்தெடுத்தான். ஊரில் அம்மாவுக்கு, தோழி வித்யாவுக்கு, தம்பி குமாருக்கு.. இன்னும்.. யாருக்கு... ம்... ராதா மிஸ்ஸுக்கு.. என்று யோசித்துக் கொண்டே, படங்களை எடுத்தான். நிமிடத்துக்கு நிமிடம் உள்ளுக்குள் பொங்கி வரும் எரிச்சலை முகச் சுளிப்பில் வெளிக்காட்டத் தொடங்கியபடியே நின்ற விஜயனிடம் வாழ்த்துக்களை நீட்டினான் இவன்.

விஜயன், நிதானமாக அவற்றைக் கையில் வாங்கினான். படங்களை ஒவ்வொன்றாகப் பார்த்தான். பிறகு திரும்பி இவனை ஏறிட்டுப் பார்த்தான். அந்தப் பார்வையிலேயே இவன் துவண்டு போனான். தோளிலிருந்த குழந்தை திடீரென்று தாங்க முடியாத கனமாகித் தெரிந்தாள். அடி வயிற்றிலிருந்து திரண்டு வந்த ஒருவிதமான சங்கடமும்— பயமும் கலந்த உணர்வோடு, ''ஏங்க... இந்தப் படம் பிடிக்கலைன்னா வேற நல்லதா நீங்களே எடுங்க...'' என்று தொண்டை அடைக்கச் சொன்னான். விஜயன் ஒன்றுமே சொல்லாமல், இவன் அவ்வளவு நேரமும் பார்த்துப் பார்த்துத் தேர்ந்தெடுத்த படங்களை, மறுபடி — எதிரே மர ஸ்டாண்டின் மேல் விரிந்திருந்த கார்டுகளின் குவியல் மேல் போட்டான். ஒரு நிமிடம் வரை அங்கே பரந்து கிடந்த கார்டுகள் எல்லாவற்றையும் அவன் கண்கள் பருந்துப் பார்வையில் துழாவின.

மர ஸ்டாண்டின் கடைசியில், போஸ்ட் கார்டு சைஸில் கிடந்த படங்களின் மேல் நிலைத்தன அவன் கண்கள். அந்தக் கார்டுகளிலிருந்து இரண்டு மூன்றைத் தேர்ந்தெடுத்தான் விஜயன்.

இன்றைக்கு சினிமாவில் கொடி கட்டிப் பறக்கிற இரண்டு 'சூப்பர்' — 'சூப்பர் சூப்பர்' ஸ்டார்களின் படங்களும், ஒரு பிரபலமான அரசியல் தலைவரின் படமுமாக அவன் தேர்ந்தெடுத்த படங்கள் இருந்தன. காகிதமும் சரி, அச்சிட்டிருந்த விதமும் சரி, படு மோசமாக இருந்தது. அவர்களைப் பற்றி இவனுக்கு அந்த நிமிடம் வரை எந்தவிதமான ஓர் அபிப்பிராயமும் இருந்திருக்கவில்லைதான். ஆனால், அந்தக் கார்டுகளைப் பார்த்தவுடன் கண்களில் மசமசவென்று சில நிறங்களாக மட்டுமே அந்தப் படங்கள் அப்பிக் கொண்டன. அதைத்தான் அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

பரிதாபமான ஒரு பார்வையோடு — தனக்கு முன் விஜயன் நீட்டிய படங்களை வாங்கிக் கொள்ளாமலே நின்றான் அவன்.

''என்ன ராஜம்? இதை எடுத்துக்க, போதும்..'' — என்றான் விஜயன் குரூரமான ஒரு புன்னகை இதழ்க்கடையோரம் இரகசியமாகத் தலை நீட்டியதை மறைக்க முயலாமல்!

குனிந்து வயர்க் கூடையைக் கையில் எடுத்துக் கொண்டு தோளிலிருந்து நழுவி இறங்கிய குழந்தையை மீண்டும் மேலே தூக்கி அணைத்தபடி கடை வாசலிலிருந்து ஓரடி முன்னால் நகர்ந்தான் ராஜம்.

''ஏய், என்ன, இங்கே ஒரு மனுஷன் படத்தை வச்சுக்கிட்டு நிக்கிறேனுல்ல...? ஒண்ணுமே சொல்லாம போறியே...?''

— அருகே நிற்பவர்களைப் பற்றின பிரக்ஞையே இல்லாமல் இரைந்து கத்தின விஜயனை — நின்ற இடத்திலிருந்தே திரும்பிப் பார்த்தான் ராஜம்.

''இல்லீங்க... எனக்கு எதுவும் வேணாம்.. நேரமாவுது... வாங்க, போகலாம்...'' என்றான்.

'தொந்தி'ரவு!

சமீபத்தில் திருவனந்தபுரம் போலீஸ் டெபுடி கமிஷனர் ஆணை ஒன்றைப் பிறப்பித்துள்ளார். அதன்படி கேரள காவல் துறையில் — குறிப்பாக கான்ஸ்டபிள், ஹெட் கான்ஸ்டபிள் பதவியிலிருப்பவர்களுள் — பானையைப் போலத் தொந்தி கொண்டவர்களைக்கண்டறிந்து(இடைச்சுற்றளவு 32 அங்குலத்திற்கு மேலிருந்தால்) அவர்களுக்குத் தினசரி இரண்டு மணி நேரம் 'பரேட்' நடத்திப் பயிற்சி செய்து தொந்தியை உடனே குறைக்க வேண்டும்.

''பானை வயிறு உடைய அதிகாரிகளை என்ன செய்வதாம்?'' என்று புலம்புகிறார் ஒரு கான்ஸ்டபிள்!

— டைம்ஸ் ஆஃப் இந்தியா.

தகவல்: ஆர். அரிகோபி.



புதிய சர்வதேச இரண்டு சீலுடைய பேக்



இரண்டு சீலுடையது

இரண்டு சிறப்புடையது

மணத்தையும், குணத்தையும்
எப்போதும் உள்ளடக்கியுள்ளது

ஆகவே, நீங்கள் விரும்பிடும்
சக்ரா டீ மணத்தையும்,
ஸ்ட்ராங்கான குணத்தையும்
தன்னகத்தே வைக்கிறது.

CHAKRA

சக்ரா

ப்ரிமியம் டஸ்ட் டீ

A TATA PRODUCT

SPEER/04/206/90/Tam



''நாளையிலேருந்து எல்லோரும், தின
மும் ஷாம்பு போட்டுக் குளிச்சுட்டு வர
ணும்னு எங்க மானேஜர் சொல்லிட்
டார்.''

''ஏன் அப்படி?''

''பைலெல்லாம் எண்ணெய்க் கறை
படியாமல் இருக்கத்தான்!''

— சீர்காழி ஸ்ரீராம்.

அரசியல்வாதி: ''என்ன, உன் பேர்
கின்னஸ் புக்ல வந்திருக்கா?''

தொண்டர்: ''ஆமா தலைவரே!''

அரசியல்வாதி: ''எதுக்கு?''

தொண்டர்: ''3,500 சோடா புட்டிகளை
எதிர்க்கட்சிக்காரங்க மேலே வீசி,
சாதனை புரிஞ்சதுக்கு!''

— எஸ். முகம்மது யூசுப்.





''நம்ப தலைவர் சமயச் சொற்பொழிவு
கூடச் செய்வார்!''

''அப்படியா!''

''ஆமாம், எந்தச் சமயத்துல கட்சி
மாறணும், எந்தச் சமயத்துல புதுக்கட்சி
ஆரம்பிக்கணும், எந்தச் சமயத்துல ராஜி
னாமா செய்து எந்தச் சமயத்துல வாபஸ்
வாங்கணும்னு எல்லாம் கரெக்டா சொல்
வார்!''

— ராதா வாசுதேவன்.

குமாஸ்தா: என்னைக்காவது 'எக்ஸ்ட்ரா'
வேலை இருக்கும்னா முதல் நாளே
சொல்லிடுங்க சார்!

மானேஜர்: அதுக்குத் தகுந்த மாதிரி சீக்கி
ரம் வந்துடலாம்னா...?

குமாஸ்தா: ஊஹூம்; லீவு போட்டுட
லாம்னுதான்!

— சீர்காழி ஸ்ரீராம்.



மணல்வெளி மான்கள்

8

வலப்பக்கம் ஒரு 'ஸாமில்'. இடப் பக்கம் கொல்லத்துப் பட்டறை இடையில் இரண்டுக்கும் நடுவே ஓர் ஆலமரம். உட்கார்ந்து இளைப்பாற ஒரு சுமைதாங்கி.

கௌதம் சுமைதாங்கிக் கல் மீது உட்கார்ந்திருந்தான். பார்வை சாலை கடந்து எதிர்ப்புறமிருந்த போலீஸ் ஸ்டேஷன் வாசலில் ஒரு நிமிஷத்துக்கு ஒருதரம் போய்ப் போய் மீண்டாலும், வண்டிச் சக்கரத்துக்குக் கட்டுப்போட வந்திருந்த சிங்காரத்தின் மீது தான் குவிந்திருந்தது.

சக்கரக்கட்டுக்காக இரும்பு வளையம் மண் தரையில் கனன்று கொண்டிருந்தது. வளையத்தைச் சுற்றி வைத்திருந்த வரட்டியடுக்கு, சாலை வாகனங்களின் காற்று வேகத்தில் அவ்வப்போது கோபமாகச் சுடர் விசிற்று.

இரண்டு சக்கரங்களும் இறக்கி வைத்த மாட்டு வண்டி நுகத்தடியில் அமர்ந்திருந்த சிங்காரம் எழுந்து போய் வரட்டியடுக்கு நெருப்பில் ஒரு பீடியைப் பற்ற வைத்துக் கொண்டு திரும்பி வந்து உட்கார்ந்தான்.

''எங்கே போயிருக்காராம் இன்ஸ்பெக்டரு?''

''டவுனுக்குத்தான்னு ரைட்டர் சொன்னாரு.''

''நீ வந்து ஒரு அவரு ஆவுமே?''

''ஆமா!''

சிங்காரம் பீடியை யோசனையோடு இழுத்தான்.

''நீ லாக்கப்பிலே ஆதியைப் பாத்தியா, தம்பி?''

''இந்த ரைட்டரு புது ஆளு மாமா! ரொம்ப தடபுடல் பண்ணிக்கிறாரு.''

''ஆமா, போலீஸ் டேசன் இல்லே. பண்ணிக்கலேன்னா ஆவுமா? நீ இன்னா ஆபீசரா, இல்லே எம். எல். ஏ.வா... அட, கொறஞ்ச பட்சம் ஒரு தொளசிங்கமா?''

சிங்காரம் வளவளப்பதாகக் கௌதமுக்குத் தோன்றியது. இன்ஸ்பெக்டர் ஒருவேளை நேராக வீட்டுக்குப் போயிருப்பாரோ என்று இருமுறை சைக்கிள் எடுத்துக் கொண்டு போய் அவன் பார்த்துவிட்டு வந்தான்.

மனசு தவிதவித்தது. ஸ்டேஷனில் சரியான தகவல் கிடைக்கவில்லை. எப். ஐ. ஆர். எழுதிவிட்டார்களா? ஆதியை எப்படி, எந்த ஆதாரத்தில் கைது செய்தார்கள் என்ற விவரம் தெரிய வேண்டும்.

இரும்பு வளையத்தைச் சுற்றி எரிந்து கொண்டிருந்த வரட்டியடுக்கையே பார்த்தான் கௌதம்.

''உனக்கு இன்னாத்துக்கு மரிகப்புள்ளே இந்த லோல் பாடு?''

சிங்காரம் அண்ணாந்து விட்ட பீடிப்புகை ஆலமரத்தை



நோக்கிப் பறந்தது.

இன்னும் பலரிடமிருந்து, ஏன் விட்டலா புரம் கிராமத்திலிருந்தே இந்தக் கேள்வி புறப்பட்டு வரும் என்று கௌதமுக்குத் தோன்றிற்று.

''சும்மா ஒரு அனுதாபம்தான்! ஆதியும் நானும் ஒரே தெருவிலே மூணு வருஷம் குடித்தனம் இருந்தோம். அவன் ஒம்பதாவது படிக்கறப்ப நான் ஹைஸ்கூல்லே ஆறாவது சேர்ந்தேன்.''

ஆதி, கௌதம் வருவான் என்று காத்திருந்தவன் போல் அதே ஒன்பதாவதில் மூன்று வருடங்கள் தங்கி விட்டான். கௌதம் அவனைத் தாண்டி அடுத்த வகுப்புக்குப் போன போதுதான் அவன் படிப்புக்குத் தலை முழுகினான்.

இதெல்லாம் வெளித் தோற்றம். ஓர் ஊர்ப் பார்வை இட்டுக்கட்டிக் கொள்ளத் தேவையான ஸ்தூல காரணங்கள்.

காலையில் ஆதியைக் கைது செய்து விட்டார்கள் என்று தெரிந்து, ஒரு பாய்ச்சலில் சைக்கிள் மிதித்து, கௌதம் அவன் வீட்டிற்குப் போனான். குடிசைக்குள் குத்துக் காலிட்டு முழங்கைகளை மோவாயில் முட்டுக் கொடுத்து அமர்ந்திருந்தாள் ஆதியின் அம்மா மங்கலட்சுமி.

அந்த வயசான பெரிய கண்கள் பனிச் சென்று அறைவது போல் கௌதமைப் பார்த்தன.

''பா... பா'' என்று இரண்டு முறை தன் மார்பைத் தட்டிவிட்டுத் தன் தலையைப் படபடவென்று மங்கலட்சுமி அடித்துக் கொண்டாள்.

பேச முடியாத அந்த ஜீவனின் பெரிய விழிகளிலிருந்து மாலை மாலையாகக் கண்ணீர் உருண்டது.



கௌதமின் அடிவயிற்றிலிருந்து உதைத்துக் கொண்டு ஏதுவோ பந்து போல் எழுந்து மார்பைத் தாக்கிற்று. இவள் கால் மாட்டில் அமர்ந்து ஒருத்தி அழ வேண்டுமென்றுதான் ஆதி அலைபாய்ந்து கொண்டிருந்தான்.

'நான் போய் ஸ்டேஷனில் பார்த்து விட்டு வருகிறேன்!' என்று தன் மார்பைத் தட்டிக் காட்டி அவன் சைஞ் செய்தான்.

ஆனாலும் மார்பில் அந்த உதையின் ஆதிக்கம் இன்னுமிருந்தது. சைக்கிள் பின்னே அமர்ந்து தன் மனசையெல்லாம் அவிழ்த்து உதறிய மாசிலாவின் பிரேதத்தின் மீது கல் வைத்து மூடிய இரண்டு சாக்குப் பைகள் கவனத்துக்கு வந்தன.

கட்டியிருந்த லுங்கியோடு புறப்பட்டிருந்தான். சட்டை பேண்ட் மாற்றிக் கொண்டு ஸ்டேஷனுக்குப் போகலாமென்று வீடு திரும்பினான்.

நீலாம்பர முதலியார் விபூதிப் பூச்சும் சந்தனப் பொட்டுமாகத் திண்ணையில் வந்து உட்கார்ந்து விட்டிருந்தார். அவரது ரம்பத்திலிருந்து தப்பித்துக் கொள்ளும் வேகத்தில் சைக்கிள் ஸ்டாண்டைப் போட்டான்.

''என்ன கௌதமா, ஆதியைப் போலீஸ் புடிச்சுக்கிட்டுப் போயிடுச்சாமே!''

''ஆமா'' என்று கூறி அவன் படியேற முற்பட்டான்.

''நேத்து அஞ்சு லிட்டர் கிருஷ்ணாயில் வாங்கினானாம். சூப்பர் மார்க்கெட் ஆளு சொன்னான். ஆத்துப் பாலத்தாண்ட கிருஷ்ணாயில் டின்னை வச்சுக்கிட்டு, அரை மணி நேரம் ஒக்காந்துகினு இருந்தான்னு தேங்கா உரிக்கிற மார்சாயன் சொன்னான்.''

கௌதம் நின்றான்.

''இதெல்லாம் உங்களுக்கு யார் சொன்னது தாத்தா?''

''எல்லாம் வர்றவங்க போறவங்கதான். நேத்துக் காத்தாலே ஒன்னைக் கொலை பண்ணிடுவேன்னு கத்தினானாமே, மாசிலாவைப் பார்த்து!''

சந்தர்ப்பக் காற்று ஆதிக்கு எதிராக வீசிக் கொண்டிருந்தது.

''பாவம்... அந்த ஊமச்சி மங்கலட்சுமி! அவளுக்கு ஆதி பொறந்த அன்னிக்கி நான் இங்கதான் இருக்கேன். பெனாங்குக்கு மயிக்கா வாரம் கப்பல்ல போகப் போறேன். கொளந்தை பொறந்ததுமே புள்ள அளுவுதா இல்லையான்னு அவளுக்கு ஏக சந்

வையவன்

இன்ஸ்பெக்டர்: 'திருடன் வீட்டிலேயே திருட்டு'ன்னு தலைப்புக் கொடுத்துப் பேப்பர்லே போட்டிருக்கான். மகா கேவலமா இருக்குய்யா, 507!

போலீஸ் கான்ஸ்டபிள்: 'மாமூல்' கேட்டுக் கேட்டு சலிச்சுப் போய்த்தான் சார், நான் இந்த முடிவுக்கு வந்தேன்...!

— அ. தெய்வசிகாமணி.

தேகம். மருத்துவச்சிகிட்டே சீண்டிச் சீண்டிக் கேட்டுக்கினே இருந்தாளாம். அந்தக் காலத்திலே ஆஸ்பத்திரின்னா பூந்துறை டவுனு. இல்லே வேலூரு.''

காலம் நீலாம்பர முதலியார் நினைவுகளில் தேன் கூட்டுச் சிற்றறை போல் கொஞ்சம் கொஞ்சம் சேமிக்கப்பட்டிருந்தது.

''மறுநாள் காத்தால நான்தான் கொளந்தை சத்தம் போட்டு அளுவுதுண்ணு சைகை பண்ணிக் காட்டினேன். என்ன எப்பப் பாத்தாலும் அந்த கியாபகம் அவளுக்கு வந்துடும்'' என்று பெருமூச்சு விட்டார்.

தன் குழந்தை வாய் விட்டு அழுகிறது என்று புரிந்து கொண்ட ஊமை ஜீவனின் ஆனந்தப் பிரவாகம்தான் தன்னைப் பாதித்ததா?

எது என்னைப் பாதித்தது? ஏன் இப்படி ஒரு மணி நேரமாகப் போலீஸ் ஸ்டேஷன் எதிரில் வேலை மெனக்கெட்டு நான் உட்கார்ந்திருக்கிறேன்?

''மரிகப்புள்ளே இதுக்குப் பின்னாடி ஒரு பெரிய கை கவுறு பிடிச்சுப் பொம்மலாட்டம் ஆடிக்கினு இருக்குது... புரியுதா?'' — சிங்காரம் கடைசி இழுப்பு இழுத்துப் பீடியை வீசியெறிந்தான்.

அவனது வெளுத்த மீசையையும் பெண்களுக்கு மயங்கும் கண்களையும் ஒருமுறை பார்த்தான் கௌதம்.

''ஒரு கல்லுக்கு ரெண்டு மாங்கா. இப்ப மாங்கா கணக்கு மூணு புரியுதா?''

சிங்காரம் சொன்ன புதிரின் மையம் புரிந்தது — துளசிங்கம். மீதி?

''என்னா மரிக்கப்புள்ளே... ஆன்ஸர் கண்டுபுட்சியா?''

''நீயே சொல்லிடு மாமா.''

''இதான் பட்டப் படிப்பு பண்ற வேலை! மூளை மேல தார் போட்டு மொளுகி விட்டுடும். 'வர்ற போற வண்டியெல்லாம் டுர் டுர்னு போய்க்கினே இருக்கணும். அதுக்கு வசதி வேணாமா?''

படித்தவர்களைக் கண்டால் வரும் கிராமத்து இளக்காரம் அது.

''மாமா, கொஞ்சம் சந்து விட்டா வந்தேன் வந்தேண்ணு வந்துடுவியே நீ!''

''அப்ப சொல்லு நீயே!''

''நீ சொல்ற ஆளு யாருன்னு புரியுது...''

''ஆனா ஒரு கல்லு மூணு மாங்கா புரியலே, அதானே?''

''அதான்.''

''அப்படி வா வளிக்கு!''

வண்டி நுகத்தடியில் கால் நீட்டிக் கூட்டத் தடிக்கு முதுகு சாய்த்துச் சௌகரியமாய் உட்கார்ந்தான் சிங்காரம்.

''நுணாமரத்து நெலம் வில்லங்கமில்லாம பைசல் ஆய்ப் போச்சு! அசலுக்கு வெட்டியா ஒரு ஊர்வசியும் கெடைச்சாச்சு. என் நெலத்து மேல வண்டியை ஓட்டினு வரா தேண்ணு தடுத்தவனையும் இப்ப மடக்கிப் போட்டாச்சு. ரோடு — ப்ளாக்கே இல்லே. லைன் கிளியர்!''

சிங்காரம் அவ்வப்போது பயன்படுத்தும் ஆங்கிலத்தைக் கிண்டல் செய்யும் மனோநிலை கௌதமுக்கு அப்போது வரவில்லை.

அவன் சிங்காரத்தைக் கண் வாங்காமல், பார்த்தான்.

இவ்வளவு கொடூரமான விஷயத்தை எப்படி இவனால் மனம் கூசாமல், உடம்பு பதறாமல் சொல்ல முடிகிறது? ஒருவனால் செய்ய முடிகிறது. இவனால் சொல்ல முடிகிறது.

விட்டலாபுரத்திற்குச் சிங்காரம் பொருத்தமானவன்தான். ஒரு நதிர்ந்த நிலைக்கு வந்து, என் வழி, என் பாதை, என்று வழியெல்லாம் விழுங்கிக் கொண்டு ஓடும் இந்த ஆற்று வெளி மண்ணின் சாரம் இவன் உடம்பிலும் ஊறியிருக்கிறது....

அவன் கவனம் கலைந்தது.

சாலையில் திடீரென்று குளம்போசைகள் கேட்டன. ஒன்று பத்தாக அல்ல. நூறு நூறாக. ஒரு பட்டாளம் வருவது போல.

கௌதம் கிழக்கே திரும்பினான்.

ஒரு பெரிய மாட்டு மந்தை வந்து கொண்டிருந்தது. சாலை முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டு இருநூறு முந்நூறு உருப்படிக்கு மேல்.

குளம்போசைகளின் ஆரவாரம் ஓர் அணிவகுப்பு நெருங்குவது போல் படிப்படியாக உயர்ந்தது. தலை அதிர்வது போல் மந்தை ஓசை தன்னைக் கடந்து செல்வதைக் கௌதம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''மாட்டுக்காரரே... மந்தை எங்கே ஒசூர் சந்தைக்கா?'' என்று கேட்டான் சிங்காரம்.

''எல்லாம் போக வேண்டிய எடத்துக்குத்தான் போவுதுங்க,'' என்று நேரத்தை விரயம் செய்ய மனமின்றி ''த்தாய்... ஹோய்... ஹாய்'' என்று கூப்பாடு தொடங்கினான் மாட்டுக்காரன்.

''எங்கே போவுது மாமா?'' என்றான் கௌதம்.

''கசாப்புக்கு'' என்று பதில் சொன்னான் சிங்காரம். புழுதிப் படலம் மந்தையின் பின்னே பாதுகாப்பு வளையம் போல் தூர நகர்ந்து விட்டது.

தன்னையறியாமல் கௌதமுக்கு ஏனோ புத்தர் ஞாபகம் வந்தது. 'முடமான இளமறியை முதுகிலே சுமந்த தீரன்' என்று என்றோ படித்த கவிதை வரி நினைவில் எட்டிப் பார்த்தது.

முடமான ஆட்டுக் குட்டியைத் தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு நியாயம் கேட்கப் போ என்று புத்தனை எது பாதித்தது? யோசித்தால் விட்டலாபுரம் மட்டுமல்ல. எல்லா ஊரும். எல்லா நாடும். எல்லாக் காலமும் இதேதான் சங்கதி!

''நீ ஏன் வெட்டிக்கி மல்லாடறே மரிகப் புள்ளே? பூந்து இருக்கிறது பெரிய கை. நீ இன்ஸ்பெட்டரைப் பாத்தாலும், ஐ.ஜி.யைப் பாத்தாலும் களட்டின கடையாணி களட்டினதுதான்! என்ன புரியுதா?'' என்று விட்ட இடத்தில் மீண்டும் ஆரம்பித்தான் சிங்காரம்.

கௌதம் ஒன்றும் சொல்லவில்லை. வருத்தமாய்ச் சிரித்தான்.

கௌதம் மனசுக்குள் புத்தன் சுமந்து கொண்டிருந்த ஆட்டுக் குட்டியை இறக்கி வைத்தான். இந்த சிங்காரத்தையோ அந்த சாமிநாதனையோ சற்று முன்பு மந்தை ஓட்டிச் சென்ற மாட்டுக்காரனையோ எதுவும் பாதிக்காதா?

எது பாதித்தாலும் போகிற போக்கைத் தடுத்து ஒரு புண்ணியமுமில்லை என்று இவர்கள் போய்க் கொண்டிருக்கிறார்களா?

ஆதிகேசவனுக்கு அது ஏன் புரியவில்லை? ஊர் அழுகினால் இவனுக்கு என்ன வந்தது? இவன் ஏன் துளசிங்கத்திற்குத் தடை போட்டான்?

எதையாவது யாராவது தடுத்து விட முடியுமா? ஆட்டுக்குட்டி நொண்டியதற்குத் தோளில் போட்டுப் போய் அரசாங்கத்தை நீதி கேட்க முடியுமா?

மனசுக்குச் சும்மா இருக்க முடியாது. பாவடி வீதியில் கட்டிய பாவு மாதிரி நூல் நூலாக அது இழை தாவிக் கொண்டே இருக்கும். ஒன்றை அறுக்கும். ஒன்றை இணைக்கும். ஒன்றை முறுக்கும்.

ஆதியை எது பாதித்ததோ அதுவே தன்னைப் பாதித்திருக்கிறதா? இது தேவை தானா?

கொடுமைகளுக்கு ஒரு முடிவுமில்லை. தலை வணங்கு. அல்லது ஒதுங்கிக் கொள். சௌக்கியமான வழிகள் இரண்டே இரண்டுதான். எதிர்க்கிறாயா.. மோதுகிறாயா நீ உன் தற்காப்பைப் பொருட்படுத்தவில்லை. வா. வந்து மோதிச் சிதறுண்டு மாண்டு போ.

விட்டலாபுரமானாலென்ன? வேறு ஊரானால் என்ன?

கொடுமைகளுக்கு ஓய்வில்லை. ஒரு நாளுமில்லை. ஓர் உருவத்தில் இல்லையென்றால் மற்றோர் உருவத்தில் இவை எதிர்ப்பட்டுக் கொண்டே....

கௌதமின் எண்ண இழைகள் அறுந்தன. இன்ஸ்பெக்டரின் மோட்டார் சைக்கிள் போலீஸ் ஸ்டேஷன் வாசலில் நுழைந்தது.

''இன்ஸ்பெக்டர் வந்துட்டாரு. நான் வர்றேன்'' என்று சிங்காரத்திடம் சொல்லி விட்டு வேகமாகச் சாலை கடந்தான்.

அவன் ஸ்டேஷனில் நுழையவும் இன்ஸ்பெக்டர் தம் தொப்பியைக் கழற்றிக் கீழே வைக்கவும் சரியாயிருந்தது.

''மார்னிங் ஸார்!''

அவர் நிமிர்ந்தார்.

''ஓ.. கௌதம் வா.. வா.''

அவர் நேற்று காட்டிய மரியாதை குறைந்திருப்பதாகத் தோன்றியது.

''ஸிட் டவுன்'' என்று எதிரிலிருந்த நாற்காலியைச் சுட்டிக் காட்டினார். அவன் அமர்ந்தான்.

''நானே ஒனக்கு ஆள் அனுப்பணும்னு நெனச்சேன்.''

கௌதம் நாற்காலியில் உட்கார்ந்திருந்த கோணத்தில் லாக்கப்பின் ஒரு மூலை தெரிந்தது. சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருந்த ஆதி சட்டென்று எழுந்து கம்பிக்குப் பின்னால் அவசரமாக எழுந்து நிற்பது தெரிந்தது. அவன் முகம் மிரட்சியும், ஒலியும், அவன் வருகையால் பிறந்த நம்பிக்கையுமாக மாறி மாறித் தெரிந்தது.

''எதுக்கு சார், மோட்டார் மறுபடியும் ட்ரபிளா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே. அது ஓ.கே. இந்த மாசிலா மர்டர் கேஸிலே நீ ஒரு விட்னஸ் ஆக வேண்டி இருக்கு.''

''சாட்சியா... நானா?''

''மாசிலா நேத்து ஆதியை அடிச்சப்போ நீ அவன் கெணத்திலே மோட்டார் பம்ப் ரிப்பேர் பண்ணிட்டிருந்தியாமே!'' என்றார் அவர்.

(தொடரும்)





GIVE YOUR CHILD GOKULAM AND WATCH HER EYES LIGHT UP WITH WONDER!

Gokulam

the favourite children's monthly in English.

March Highlights :

* **The Scarlet Pimpernel** — *a condensed novel*
* *The childhood of the Hindi writer* — **Munshi Premchand.**
* **Adventures of Robin Hood** — *a picture story in colour*
* **Jungle Trek** — *an exciting board game for two or more players*

Annual Subscription : Rs. 36.00 (India)
Overseas : Rs. 270.00 (Air mail)
: Rs. 120.00 (Sea mail)

For agency and subscription contact :
GOKULAM, Guindy, Madras - 600 032
Telephone : 434157, 434190.

BUY YOUR COPY TODAY!

4

ராஜாஜி வாழ்க்கை வரலாறு — VIII

ராஜ்மோகன் காந்தி

ரெட்டிக்குக் கையெழுத்து; கிரிக்கு ஆதரவு!

ராஜாஜியின் மத உணர்வு குருட்டுப் பக்தி அல்ல. அது ஆழ்ந்த சிந்தனையின் விளைவாக உருவானது. மதம் சம்பந்தமாக அவர் எப்போது எழுதினாலும் அநேகமாக அதில் கீதையைப் பற்றியோ உபநிஷத்தைப் பற்றியோ குறிப்பு இருக்கும். அவற்றின் விளக்கவுரையாகக் கட்டுரை அமையும். உதாரணமாக:

"ஒரு பொருளை சக்தியாக உருமாற்ற முடியும் என்றால், சக்தி மீண்டும் பொருளாக உருமாற முடியும் என்பதும் ஏற்கத் தக்கதே. அடிப்படையான விஷயம் சக்தி. எல்லாப் பொருள்களுக்கும் — உயிருள்ளன, உயிரற்றவை ஆகிய அனைத்துக்கும் — ஆதாரம் அதுவே. இந்த சக்தி, தன்னிலிருந்து இந்தப் பரந்த பிரபஞ்சத்தை — அண்டசராசரத்தை — உருவாக்கியது. பிரபஞ்சத்தைக் கடப்பது எனில், பயங்கர வேகத்தில் பாயும் ஒளிக்கே பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் ஆகின்றன! இவையெல்லாம் நம்மை ஆச்சர்யப்பட வைக்கின்றன. இந்த ஆச்சர்யம்தான் மதத்துக்கும் விஞ்ஞான வளர்ச்சிக்கும் அடிப்படை. இந்த ஆச்சர்யங்களைப் புதிராக ஏற்று, ஆராய்ச்சிகள் மூலம் விடை காண முயல்வது விஞ்ஞானம். அந்த ஆராய்ச்சிகளின் முடிவில் நாம் மேலும் ஆச்சர்யங்களுக்கே உள்ளாகிறோம். கிடைக்கின்ற விடைகளே புதிய ஆச்சர்யங்களைத் தோற்றுவிக்கின்றன! மேலும் ஆராய்ச்சிகளைத் தூண்டுகின்றன! இப்படி முழு விடை காண முடியாத நிலைக்கு மனிதன் தள்ளப்படும் போது அவன் ஆச்சர்யம், மரியாதையாக மாறுகிறது; வழிபாடாக மலர்கிறது."

மற்றொரு கட்டுரையில்:


"உலகிலே துன்பம் இருக்கும் வரை, உண்மைகளை ஆய்ந்து அறிய வேண்டும் என்கிற ஆவல் குறுகுறுப்பு மனித உள்ளத்தில் இருக்கும் வரை, ஆண்களுக்கும் பெண்களுக்கும் நிறைவேற வேண்டிய இன்றியமையாத ஆசைகள் ஏதேனும் இருக்கும் வரை, அறிவு என்பது இந்த உலகில் உள்ளவரை மத உணர்வு மக்களிடமிருந்து நீங்காது நிலைத்திருக்கும்."

கீதையையும் உபநிஷதங்களையும் அவர் அடிக்கடி மேற்கோள் காட்டி எழுதியது, அவை வேறு மத கிரந்தங்களை விட உயர்வானவை என்ற எண்ணத்தில் அல்ல. கீதையை அவர் விளக்க முயன்றது, தம்மை விடக் குறைவான அறிவாற்றல் உள்ளவர்களுக்கு அதனை எடுத்துச் சொல்லும் முகமாகத்தான். அதுவும், தாம் அவர்களை விட மேம்பட்டவர் என்ற கருத்தில் அல்ல. இறைவனின் அருள் தமக்கு எப்படி தேவைப்படுகிறதோ, அப்படி மற்றவர்களுக்கும் தேவைப்படுகிறது என்ற எண்ணத்தினால்தான் விளக்கினார். மற்ற மதங்களையும் அவற்றைப் பின்பற்றுகிறவர்களையும்





• ரெட்டிக்குக் கையெழுத்து:



• கிரிக்கு ஆதரவு:

அவர் பெரிதும் மதித்தார். சராசரி முஸ்லிமுக்கு இறைவனிடம் உள்ள பற்றுதல், இந்துக்கள் உணர்ந்து பின்பற்றக் கூடிய ஒன்று என்பதாக அவர் உணர்ந்தார். பிரிட்டிஷ் ஆட்சியில் சிறைப்பட்டிருந்த காலத்தில் அவர் குரானைப் படித்ததும் உண்டு. பைபிளையும் அவர் நன்றாகப் படித்திருந்தார் என்பதற்கு அவருடைய சுயராஜ்யா கட்டுரைகளிடையே அடிக்கடி அவர் பைபிளை மேற்கோள் காட்டியது சான்றாக அமைந்தது. 'பைபிளும் குரானும் கீதையும் இருளினூடே நமக்கு வழிகாட்டி அழைத்துச் செல்லும் கை விளக்குகள்' என்று அவர் எழுதியிருக்கிறார். இறையுணர்வு உள்ள எல்லா ஹிந்துக்களும், சீக்கியர்களின் மத நூலான கிரந்த சாஹேபை, மூலத்திலோ நல்ல மொழிபெயர்ப்பிலோ படிக்க வேண்டும் என்றும் அவர் விரும்பினார்.

இவ்வாறெல்லாம் அவர் பேசியும் எழுதியும் இருந்தாலும் இந்துவாக இருப்பதில் அதிலும் வைஷ்ணவனாக இருப்பதில் அவருக்குத் திருப்தியும் சந்தோஷமும் இருந்து வந்தது. சங்கு சக்கரம் போன்ற வைஷ்ணவச் சின்னங்கள் தம்மை அதிகம் கவர்வதாக அவர் மோனிகா ஃபெல்டனிடம் கூறியிருக்கிறார். ஹரி, நாராயணன், கோவிந்தன், வாசுதேவன் போன்ற பெயர்கள், பகவான், ஈசுவரன் போன்ற சொற்களை விட அதிகமாக அவர் இதயத்தைத் தொட்டன.

'சர்வ வல்லமை படைத்த இறைவன் எல்லாவற்றையும் சரி செய்வான்' என்ற நம்பிக்கை ஸி. ஆருக்கு இருந்தது. ''கடவுள் நமக்குக் கடுமையான சோதனைகளைத் தந்து கொண்டிருக்கிறார் என்றாலும் அவர் இந்தியாவைக் கைவிட மாட்டார்'' என்று ஓரிடத்தில் எழுதியிருக்கிறார். கடவுள் நம்பிக்கை சரியானது என்பது மட்டுமல்ல, கடவுளிடம் நம்பிக்கை வைக்க வேண்டியது நமது கடமை என்பதாகவும் கருதியவர் அவர். இந்தக் கடவுள் நம்பிக்கையின் விளைவாக நேர்மை, அடக்கம், நல்லொழுக்கம், கருணை, வெற்றி தோல்விகளைச் சம நிலையில் இருந்து ஏற்கும் மனப்பக்குவம் முதலியன உண்டாகும் என்று கருதினார்.

இத்தகைய மதச் சார்பான எண்ணங்களும் கருத்துக்களும் ஸி. ஆரை ஒரு குருவாக உயர்த்தின; அதோடு அவருக்கே அமைதியையும், தைரியத்தையும், பொறுமையையும், கருணையையும் அளித்தன. கடவுளிடம் அவருக்கு இருந்த அசைக்க முடியாத நம்பிக்கைதான் அவர் இறப்பதற்கு ஓராண்டுக்கு முன்னர் அவரைத் தயக்கமின்றி இவ்வாறு எழுதச் செய்தது:

''நாம் கதவுகளை மூடி விடவில்லையென்றால் கடவுள் எப்போதும் நம் அருகில் இருப்பார். நாம் காதுகளை அடைத்துக் கொள்ளவில்லையென்றால் அவர் நம் அருகே அமர்ந்து நம்முடன் பேசுவார்.''

இறையுணர்வுடன் கூடவே ஸி. ஆரின் இலக்கியப் பணி தொடர்ந்தது. அரசியல் பணியும் நடந்தது. 1969ல் ஜாகிர் ஹுசைன் காலமானதும் காங்கிரஸின் ஒற்றுமைத் திரை கிழிந்து, உள்ளேயிருந்த பூசல்கள் அம்பலத்துக்கு வந்தன. கட்சித் தலைவர்களின் ஒரு கோஷ்டியில் காமராஜர், நிஜலிங்கப்பா, சஞ்சீவரெட்டி, அதுல்ய கோஷ், எஸ். கே. பாட்டீல் ஆகியோர் அங்கம் வகித்தனர். இவர்கள், சஞ்சீவ ரெட்டியைக் குடியரசுத் தலைவர் பதவிக்குச் சிபாரிசு செய்தனர். இந்திராவுக்கு இது பிடிக்கவில்லை. இந்திரா எதிர்த்தும் கேளாமல் காங்கிரஸ் நாடாளுமன்றக் கமிட்டியும் ரெட்டியையே நியமித்தது. மொரார்ஜி தேசாய், சவான் போன்றோர் சஞ்சீவ ரெட்டிக்கே ஆதரவு அளித்தனர். இதனால் கோபமுற்ற இந்திரா, பின்விளைவுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்று எச்சரித்தார்.

இந்திராவுக்குத் தனிப்பட்ட முறையில் கடிதம் எழுதிய ஸி. ஆர்., இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணும் வகையில், ''நீங்களே குடியரசுத் தலைவராகி விடலாமே? மொரார்ஜியைப் பிரதமராக அனுமதிக்கலாமே?'' என்று யோசனை தெரிவித்தார். தேவையற்ற, யாரும் கேளாமலே தரப்பட்ட இந்த அறிவுரை, காங்கிரஸின் எதிரியால் காங்கிரஸின் ஒற்றுமையைக் காப்பாற்றத் தரப்படும் யோசனையாக விளங்கியது! இதில் உள்ள விசித்திர, விநோத நிலை பற்றி ஸி. ஆர். கண்டுகொண்டதாகவே தெரியவில்லை!

ராஷ்டிரபதி பவனில் வசிக்கலாம் என்ற எண்ணம் இந்திராவுக்கு ஒரு கிளுகிளுப்பை ஏற்படுத்தியதா, இல்லையா என்பது தெரியவில்லை; ஆனால் அவர் பிரதமரின் அதிகாரங்களைக் கைவிடத் தயாராக இல்லை என்பது மட்டும் உறுதியாயிற்று. ராஜாஜியின் யோசனையை ஒதுக்கி விட்டு, சஞ்சீவ ரெட்டியின் வேட்புமனு ஒன்றில் கட்சிக்கு விசுவாசமாகக் கையெழுத்துப் போட்டார் இந்திரா. பிறகு, ரெட்டியை எதிர்த்து ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட்ட துணை ஜனாதிபதி வி. வி. கிரிக்கு ஆதரவாக வேலை செய்ய ஆரம்பித்தார்!

(தொடரும்)



● அன்பிற்குத் தடை என்றால் அந்த வேலிகளைத் தான் உடைக்க விரும்புவேன்.

—கலீல் ஜிப்ரான்

தவறுகளை மன்னிக்குமாறு ராஜீவ் கேட்கிறாரே!

* எம். விஜயா, பையூர்.

? ஸ்டாலினைக் குறை கூறியவர் தமது மனைவியைத் தேர்தலில் நிறுத்தியது ஏன்?

! தப்பித் தவறி தோற்றால், தோற்பது நாமாக அல்லாமல் நமது மனைவியாக இருந்து விட்டுப் போகட்டும் என்ற ராஜேந்தர் தந்திரம்தான் காரணம்.

* மு. சிவஞான முருகன், ஸ்ரீவைகுண்டம்.

? மறைமலைநகர் பெயர்ப் பிரச்னையைத் தெனாலிராமனிடம் விட்டால் எப்படிச் சமாளித்திருப்பார்?

! ஸ்டேஷனுக்கு மறைமலை அடிகள் பெயரையும் பிளாட்ஃபாரத்துக்குக் காமராஜர் பெயரையும் வைத்துச் சமாளிக்க வழிகாட்டலாம். இல்லாவிட்டால் ஸ்டேஷனை இரண்டாகப் பிரித்து, ஒரு பக்கத்துப் பெயர்ப் பலகையில் மறைமலைநகர் என்ற பெயரையும் இன்னொரு பக்கப் பெயர்ப் பலகையில் காமராஜர் நகர் என்ற பெயரையும் எழுதலாம்!

* த. சத்தியநாராயணன், அயன்புரம்.

? 'ஜெயலலிதாவால் ஏற்படும் எந்த அவமானத்தையும் தாங்கிக் கொள்வோம்' என்று காளிமுத்து கூறியிருப்பது பற்றி?

! ஜெயலலிதாவின் கட்சியில் தொடர்ந்து இருப்பதே அவமானம்தான் என்பதை ஒப்புக் கொண்டு உண்மை விளம்பியதற்காகப் பாராட்டுப் பெறுகிறார். அவமானங்களைத் தாங்குவது அவரது தோலின் கனத்தையொட்டிய விஷயம்.

* எஸ். பேபி காயத்ரி, விருத்தாசலம்.

? புதிய சீருடையில் இருக்கும் விடுதலைப் புலிகள் பற்றி?

! சீருடை புதுசாக இருக்கலாம்; புலி பழசுதான். அதன் குணம் மாறாது.

* அ. ஜமால் மொய்தீன், செங்குன்றம்.

? தி. மு. க. வின் கட்சி மாநாட்டில் தமிழ்க் குடிமகன் கலந்து கொண்டு பார்வையிட்டிருக்கிறாரே?

! சட்டத்தை மீறாவிட்டாலும் நல் மரபுகளை மீறினார் எனலாம்.

* எம். ராஜேந்திரன், லால்குடி.

? பெங்களூர் விமான விபத்தில் எரிந்த விமானம் வாங்கி 360 மணி நேரம்தான் ஓடியுள்ளதாமே?

! மிக நவீனமான விமானங்களை வாங்கு முன் அதற்கேற்றபடி விமான நிலையங்கள் நவீனப்படுத்தப்பட வேண்டும். இல்லையெனில் தண்டவாளம் போடாமல் ரயில் வாங்கி ஓட்டுவது போல்தான். தவிர, இந்த ரக விமானங்கள் நன்கு பரீட்சித்துப் பார்த்து சர்வதேச அரங்கில் பாராட்டுக்களைப் பெறவில்லை. அதற்குள் அவசரக் குடுக்கைத் தனமாக ஆர்டர்கள் கொடுத்தது, ராஜீவ் அரசு செய்த பல கோல்மால் கலந்த குளறுபடிகளில் ஒன்று.

* ஜி. குசேலன், சங்கராபுரம்.

? ஒரிஸ்ஸாவில் தேர்தல் பிரசாரத்தின் போது இ. காங்கிரஸ் செய்த தவறுகளை மன்னிக்குமாறு ராஜீவ் வேண்டுகோள் விடுத்திருக்கிறாரே?

! போஃபர்ஸ், ஏர்பஸ், ஹெலிகாப்டர், நீர்மூழ்கி, பேரங்களில் கோடி கோடியாக மக்களின் வரிப்பணம் விரயமாகியிருப்பது சந்தேகத்துக்கிடமின்றி உறுதிப்பட்டிருக்கிறது. இவை ஒவ்வொன்றுக்கும் குறைந்த பட்சமாக ஒரு வருஷ தண்டனை என்று கொண்டாலும் செயிண்ட் கிட்ஸ் அசிங்க நாடகத்துக்காக மேலும் ஒரு வருஷம் சேர்த்து ஐந்து வருஷங்களுக்காவது காங்கிரஸை மத்தியிலும் மாநிலங்களிலும் ஒதுக்கி வைப்பதுதான் மக்கள் செய்யக் கூடிய புத்திசாலித்தனமான காரியம். பார்ப்போம், மன்னிக்கிறார்களா, தண்டிக்கிறார்களா என்று.

* மு. வேங்கடேசகுமார், திருச்சி.

? கள்ளச் சாராய மரணம் பற்றி?

! வருந்த வேண்டிய, வேதனை அளிக்கிற விஷயம்தான். ஆனால் இந்தச் சம்பவம் மதுவிலக்கு ரத்து வாதத்துக்குப் பலம் சேர்த்து விடக் கூடாது. காரணம், மதுவிலக்கு இல்லை என்றாலும் கள்ளச் சாராயம் இருக்கும் — மலிவாகக் கிடைக்கிறது என்பதால். எனவே, அமைச்சரவை சுறுசுறுப்பு அடைவதுதான் வழி. கள்ளச் சாராயம் காய்ச்சுவோர், விநியோகிப்போர் மீது மட்டும் சட்டம் பாய்ந்தால் போதாது. அதற்குப் பின்னணியில் உடந்தையாக இருக்கும் அரசியல் பெருந்தலைகள் வெட்டப்படாவிட்டாலும் குட்டப்படவாவது வேண்டும்.

* ரூ. 20 பரிசு பெறுபவர்:

ஏ. ஈசுவரன்,
தேவூர் மேட்டுக்கடை,
சங்ககிரி வட்டம்,
637 104 (சேலம் மாவ.)

* ஏ. ஈசுவரன், தேலூர்மேட்டுக்கடை *

? சத்தமில்லாமல், எம். ஜி. ஆர். உயிலை நிறைவேற்றும் வகையில், காது கேளாதோர் பள்ளி ஆரம்பித்துள்ள ஜானகி அம்மாள் பற்றி?

! இதை அரசியலில் புகாமல் ஆரம்பத்திலேயே செய்திருந்தால் எவ்வளவோ கௌரவமாகவும் பெருமையாகவும் இருந்திருக்கும். போனது போகட்டும், இப்போது நடக்கிற நற்பணிக்கு நமது மகிழ்ச்சியையும் வாழ்த்தையும் தெரிவிப்போம்.

* ப. நாகமணி, தச்சநல்லூர்.

? ப. உ. சண்முகம் அ. தி. மு. க.விலிருந்து விலகி, தி. மு. க. வில் சேர்ந்திருக்கிறாரே, இது எதைக் காட்டுகிறது?

! அவருடைய சண்முகத்தில் ஒரு முகம் பல்டி, இன்னொரு முகம் உல்டா என்பதைத்தான்!

* கே. எல். குமணன், கல்லிடைக்குறிச்சி.


? மிகக் குறுகிய காலத்தில் ஜப்பான் மிக வேகமாக முன்னேறியது போல் இந்தியாவும் முன்னேற நீங்கள் கூறும் யோசனை?

! 'மந்திரங்களைச் சொல்பவருக்கும் புரியவில்லை; அதைக் கேட்டுத் திருப்பிச் சொல்பவருக்கும் புரியவில்லை; இப்படிப்பட்ட நிலைமை இங்கே நிலவுவதால்தான், 'அனைவருக்கும் கல்வி' என்ற இலக்கு நோக்கி நாம் முன்னேற முடியவில்லை' என்பது போன்ற அபத்தமான வாதங்களை, சால்ஜாப்புக்களைக் கூறிக் கொண்டிராமல், சிறந்த,காலத்துக்கேற்ற கல்வியை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதுதான் நாடு உய்ய ஒரே வழி.



தோல்வியில் மனைவி

கல்மாடி மீறல்



பணியுங்கள்



சத்தமின்றி



அவமானம் தாங்கி



பல்டி — உல்டா



சுட்டுப் பொசுக்கிய வெயிலில் அந்தக் காட்டுச் சாலையின் மயான அமைதியில் நின்று கைகாட்டினான் இளம்பரிதி.

கடகடவென்று ஓடி வந்த 'நேசமணி' பஸ் உர்ர்ரென்று முறைத்துக் கொண்டு நின்றது. அவன் ஏறிக் கொண்டதும் சிரத்தையாய்க் கிளம்பிற்று.

பஸ்ஸில் நெரிசல் இல்லை. அங்கங்கே இடம் கிடந்தது. மூன்றாவது சீட்டின் விளிம்போரம் ஒண்டியிருந்த கிழமொன்று கால் மடக்க, ஷட்டரோரம் போய் அமர்ந்து கொண்டான்.

ஆமையின் ஊர்தலாய் பஸ்ஸின் வேகம். ஒருவேளை அவன் உள்ளே இருந்ததாலோ என்னவோ அப்படித் தெரிந்தது!

கொழுந்து விட்டெரிந்த அக்கினி வெயில். காலை வெயிலுக்குக் கூடவா இத்தனை கோபமிருக்கும்? சித்திரை மாதமென்றாலே இந்தச் சிரமம்தான்.

திடீரென்று அவனுக்குள் 'இன்னும் முன்னமே எழுந்திருந்து புறப்பட்டிருக்கலாமோ' என்ற சிந்தனை சுட்டது. இரவு முழுக்க முழுக்க இருளுக்குத் துணையாய் விழித்திருந்தவன், விடிந்து கொண்டிருந்த வைகறையில் அல்லவா தூக்கத்தில் விழுந்திருந்தான்! அவனையும் மீறி அசத்தியிருந்தது தூக்கம். முத்துசாமிப்புரத்து அம்மன் கோயில் சந்நிதியில், மங்கலாய்த் தெரிந்த பிராகார விளக்கொளியில், சிமெண்டுப் படிக்கட்டில் சகலமும் மறந்து போனான்.

அவன் மட்டும் அந்த இரவிலே அம்மன் கோயில் சந்நிதிக்கு வந்திருக்கா விட்டால் இந்நேரம் மற்ற பிரமுகர்களைப் போல் பணகுடி காவல் நிலையத்துக்குள் கைகட்டிப் போயிருப்பான்! கட்சியின் முக்கிய புள்ளிகளையெல்லாம் போலீஸ் சல்லடை போட்டுச் சலித்ததைக் கேள்விப்பட்டதுமே சமயோசிதமாய் இருளைப் போர்த்திக் கொண்டு அவன் நழுவியிருந்தான். பணகுடியிலிருந்து மூணு கிலோ மீட்டர் தூரம் முத்துசாமிப்புரம். அவனுக்குப் பரிச்சயமான கிராமம்தான். ஒன்றியச் செயலாளராயிருந்ததால் கட்சி வேலை நிமித்தம் அடிக்கடி வந்து போயிருக்கிறான் அங்கே. தொண்டர்களின் வீடுகளில் தஞ்சம் புகுந்து திடீரென்று போலீசின் துப்புக்கு ஆளாவதை விட, ஆளரவம் தொலைந்து போய் அந்நியமாய் இடுகாட்டுப் பக்கம் நின்றிருந்த அந்த அம்மன் கோயிலே அவனுக்கு உசிதமாய்த் தெரிந்திருந்தது.

எப்படியோ இரவை மட்டும் ஏமாற்றி விட்டால் போதும்; காலையில்தான் பெரும் கடமை கிடந்தது. நாங்குநேரித் தாலுகாபீஸ் முன் தொண்டர்கள் சகிதம் அரசியல் சாசனம் 17–வது பகுதியின் தட்டச்சுப் பிரதியைத் தீயிட்டுக் கொளுத்த வேண்டி இருந்தது. பின்னே என்ன, இந்தியை

மனுஷத்தன்மை ஜிந்தாபாத்!



மட்டுமே இந்தியாவின் ஆட்சி மொழியாய் அங்கீகரிப்பதா!

— தாலுகாபீஸ் முன் கைதானால் கூடத் தேவலை. கட்சிக் கட்டளையும், திட்டமும் அதுவே... சொல்லி வைத்தாற்போல, தமிழகத்தின் பல்வேறு நகரங்களிலும் கிராமங்களிலும் ஒரே நேரத்தில் பிரதிகள் சாம்பலாகும். தொண்டர்கள் கைதாவார்கள்; அவனைப் போல குட்டித் தலைவர்களும், பெருந்தலைவர்களும்தான்! கட்சியின் கையுயரும். தலை நிமிரும். தமிழினத்தின் தலை..

பொழுது விடிந்து சூரிய முட்கள் உடலில் சுருக்கென்று குத்திய போதுதான் அவனுக்கு விழிப்புத் தட்டியது. ராத்திரி முழுக்க அந்நியப்பட்டிருந்த தூக்கம் காலை வந்ததும் அந்நியோன்யப்பட்டிருந்தது.



அபிமானி

பொறி கலங்கிப் போனான் இளம்பரிதி. அடித்துப் புரண்டு வயற்காட்டு வழியாய் ஓடி வெகு தூரம் ஒதுங்கியிருந்த காட்டு வழிக்கு வந்தான். அங்குதான் போலீஸின் அச்சமிருக்காது. இருக்கவுமில்லை. நினைத்தது போலவே ஒரு பஸ்ஸும் வர, ஏறி விட்டான்.

"க்யா ஆஜ் பகுத் காம்ஹை?"

பஸ்ஸின் ஊஞ்சலாட்டத்தில் கண்கள் சொருகிக் கொண்டு வந்த சமயத்தில், சன்னமாய்த் தொனித்த அந்த அந்நிய வார்த்தைகளில் திடுமென விழிகள் விரித்து, வெறித்தான் இளம்பரிதி. யாரந்த ஹிந்தி மொழிப் புண்ணியவான்?

சற்றே வலப்புறம் எறிட்டான். அடுத்திருந்த அந்தக் கிழம்தான் உதிர்த்திருக்க வேண்டும். அவர்தான் அவனை நோக்கி அசடு வழிந்து கொண்டிருந்தார். கர்சீப்பால் கழுத்து, முகமென்று வியர்வையை அழுத்தி அழுத்தித் துடைத்துக் கொண்டும், பஸ்ஸின் உள்ளும் புறமும் ஏக்கமாய் வெறித்துக் கொண்டும்..

என்ன கேட்டார்?

இளம்பரிதிக்கு ஒன்றும் ஓடவில்லை. என்ன கேட்டார் என்பது கூட அந்நியமான போது? ஆனால் அவரின் பாவநேர்த்திகளைப் பரிசீலித்த போது — ஓ. வெயிலைப் பற்றித்தான் குறைப்பட்டுக்கொள்கிறாரென்பது ஓரளவு புரிந்தது.

"ஆமா ஆமா" — வேறு வழி தோன்றாமல் அவனும் நாகரிகமாய்த் தலையாட்டிக் கொண்டான். "அச்சா! அச்சா!"

ஆயினும் இளம்பரிதியின் மனசுக்குள் தர்மசங்கடம் உறுத்திற்று. என்ன இது... கன்னமிடப் போய்க் காவல் நிலையத்திற்குள் ஒளிந்து கொண்டதைப் போல.. ஒரு வடக்கத்திக்காரனிடம்..

இதுவே வேறு களமாயிருந்திருந்தால் நடக்கிறதே வேறு. "ஹிந்தி ஒழிக.. வடக்கத்திக்காரனை நம்பாதே.." — கோஷங்களை வெடித்திருப்பான். இப்போது.. முடியாது. போலீஸ் வரும். காரியம் மண்ணாகிப் போகும்..

மீண்டும் ஒருமுறை திரும்பிப் பார்த்தான் அவரை. மனிதரைப் பார்த்தால் பாவமாக இருந்தது. எழுபது வருஷங்களை விழுங்கி ஏப்பம் விட்டிருந்த களைப்பு தெரிந்தது. வழுக்கைத் தலையும் ரேகைகள் வரைந்த தேகமுமாய்.. கண்கள் குழிகளுக்குள் தொலைந்திருந்தன. தூசிப் படலமிட்ட ஆடைகள்..

அவர் கால்களுக்குக் கீழ் விரிந்தது இளம்பரிதியின் ஒருகணப் பார்வை. வாரால் இறுக்கிய போர்வை மூட்டை கால்களுக்குக் கீழே கிடந்தது. மனிதர் எங்கோ ஊர் சுற்றி விட்டு வருகிறார் போல. கன்னியாகுமரியிலிருந்து கூட இருக்கலாம். அங்குதான் வடக்கத்திக்காரர்கள் அதிகம் வருவதுண்டு. அவர்களுக்கென்ன? அவர்கள் ஆளப் பிறந்தவர்கள். தெற்கத்திக்காரர்களைப் போலவா..

அமர்ந்தவாறே பின் திரும்பி பஸ்ஸிற்குள் வலைவிரித்தான் பார்வையாலே. அவரோடு சேர்ந்தவர்கள் யாரேனும்...? அப்படி யாரும் வந்திருந்ததாகத் தெரியவில்லை.

தனியாகவா வந்திருக்கிறார்? எப்படிக் கேட்டுத் தெரிந்து கொள்வது? எந்த பாஷையில்...? அவனுக்குத் தெரிந்ததெல்லாம் தமிழ். தமிழ்.

''பத்து நிமிஷம் வண்டி நிக்கும். காப்பி டீ சாப்பிடணுமின்னா சாப்டுட்டு வந்திருங்க.''

வள்ளியூர் நிலையத்துக்குள் பஸ் வந்து நின்றதும் கண்டக்டர் சொல்லி விட்டு இறங்கிப் போனார். பின்னாலே டிரைவர்.

''முஜே பானி பீனா ஹைஹ்... ஜரா ஜகஹ் பே நஸர் ரக்னா, பேட்டா....''

அசரீரியாய்ச் செவியருகே குரல் கேட்க, அவசரமாய்த் திரும்பிப் பார்த்தான் இளம்பரிதி. கிழவர்! எழுந்து நின்று அவனிடம் யாசிக்கும் பாவனையில் கேட்டுக் கொண்டிருந்தார்.

அவரின் அசைவுகளையும் பார்வையின் திசையும் கணித்துப் பார்த்து, அவர் எதுவோ அருந்தப் போகிறாரென்றும் அதுவரைக்கும் அவரின் சீட்டைப் பார்த்துக் கொள்ளச் சொல்கிறாரென்றும் நுனிப் புல்லாய்க் கிரகித்துக் கொண்டான் இளம் பரிதி...

''சரி... ம்..'' தலையசைத்துச் சம்மதம் சொன்னான். மறு நிமிடமே தன் இடுப்பு வேஷ்டியில் செருகி வைத்திருந்த கட்சிக் கரை கர்சீப்பை உருவி எடுத்து அந்த சீட்டின் வெற்றிடத்தில் அடையாளம் வைத்தான்.

அவன் பார்வை பஸ் ஸ்டாண்டில் சிதறியது. சுவர்களிலெல்லாம் 'ஹிந்தி ஒழிக, தமிழ் வாழ்க' வாசகங்கள். எல்லாம் தொண்டர்களின் கைவரிசை. நல்லவேளை, போலீஸ் தொப்பிகள் ஏதும் தென்படாமல் போனது அவனின் அதிர்ஷ்டம்தான். போலீஸ் நிலையம் அங்கிருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரம்தான்.

குனிந்து மணிக்கட்டைப் பார்த்தான். எட்டாகியிருந்தது கடிகாரத்தில். ஒன்பது மணிக்குள் நாங்குநேரி போயாக வேண்டுமேயென்ற அவசரம் முகிழ்த்தது அவனுக்குள். முறையான வேகத்தில் பஸ் போனாலுமே ஒரு மணி அவகாசம் பிடிக்கும். அதில் தண்டமாய்ப் பத்து நிமிஷத் தாமதம் வேறு...

''உட்டோ உட்டோ... யஹ் மேரி ஜகா ஹை.. உட்டோ.''

''என்னவோ உட்டோ கிட்டோனிட்டு.. சோலியைப் பார்த்துக்கிட்டுப் போவதுக்கில்லாம...''

இளம்பரிதிக்கு இப்போதுதான் சொரணை தட்டியது. லே..சா..க...த் தலைக்குள் கிறக்கம் அழுத்த, கண்களைக் கசக்கிக் கொண்டே பார்த்தான். முன்னிருந்த கைப்பிடியில் சாதாரணமாய்த் தலைசாய்த்திருந்தவன் அப்படியே... தூங்கி விட்டிருந்தான்.

பஸ்ஸிற்குள் சளசளவென்று சந்தடி.

''இஸ்மே ந்யாய் நஹிஹை.. க்யா ஆத்மி.. உட்டோ உட்டோ..''

''என்னலே நீ! ஒன் எடமின்னு எழுதியா வச்சிருக்கே?''

தன் வயதொத்த இளவட்டமொன்று அடுத்து அமர்ந்து கிழவரோடு விவாதம் பண்ணிக் கொண்டிருந்ததைப் பார்த்தான் இளம்பரிதி.

அப்படியெனில் அந்த இடத்தில் வைத்திருந்த அடையாளக் கர்சீப்...?

இருக்கைக்குக் கீழே கிழவரின் பார்வை,

மூட்டைக்கு மேல் கட்சிக் கரை பல்லிளிக்க அபஸ்வரமாய்க் கிடந்தது கர்சிப்!

இளம்பரிதிக்கு உக்கிரம் பொங்கியது. தன் கட்சியை அந்த மடையன் அவமானப் படுத்தி விட்டதாய் நாபிச் சுழியிலிருந்து கோபம் எரிந்தது. ஆனாலும் தற்போது தன்னால்எதுவும்செய்யமுடியாதஇக்கட்டை நினைத்து மனசுக்குள்ளே குறுகிப் போனான்.

கர்சிப்பை எடுத்துக் கொண்டே சொன்னான்: ''அந்த சீட்ல கர்சிப் வச்சிருந்தேன்.. எப்படியோ கீழே விழுந்து கெடக்கு.. பாவம், ரொம்பத் தூர தொலவெட்டியில இருந்து வாராருபோல..''

''அதுக்கு நா என்ன பண்ண... அப்ப பாக்கும்போ கர்சிப்பையும்காணோம், கிர்கிப்பயும் காணுமே..'' பொறுப்பில்லாமல் இளைஞனின் வார்த்தைகள்.

''நா சொல்றனில்ல...''

''நீரு சொன்னா, ஒடனே அதை நான் நம்பிரணுமா..''

இளம்பரிதிக்கு மூக்கு சிவப்பாயிற்று. செவிமடல்கள் ஜிவுஜிவென்று தகிப்பெடுத்தன. நாளங்களில் தீக்குழம்பு.. அந்த மடையனை.. அந்த மடையனை..

கூடாது. இப்போது கூடாது. இதைவிடப் பெரிய காரியம் இளம்பரிதிக்குக் கிடக்கிறது. தமிழினத்தின் ஒட்டுமொத்த இழிவுக்கே அஸ்தி கரைக்கும் காரியம்.

''தேக்கோ பேட்டா. இஸ்மே க்யா ந்யாய் ஹை?''

கிழவர் இப்போது இளம்பரிதியை நோக்கி உருக்கமாய் முறையிடத் துவங்கினார். அவரின் முறையீட்டில் நியாயமில்லாமல் இல்லை. அவனை நம்பித்தானே, அவனிடம் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டுத்தானே, போயிருந்தார் கீழே.

பத்து நிமிஷக் கெடு முடிந்து டிரைவரும் கண்டக்டரும் உள்ளே வந்தனர்.

''என்னய்யா தகராறு?'' — என்று கேட்டுக் கொண்டே தடதடவென்று அருகில் விரைந்தவர்கள் இளைஞனின் முலாம்பூசிய பேச்சில் மயங்கி, ''சீக்கிரம் தகராறை முடிங்கப்பா..'' என்று ஒப்புக்கு இரைந்து கொண்டே திரும்பித் தத்தம் கடமைகளில் இறங்கினர்.

இளைஞனுக்கு ரொம்பவும் கர்வமாகப் போயிற்று. எதையும் சட்டை செய்வதற்கில்லை என்பது போல ஏளனமாய்க் கிழவரைப் பார்த்துப் பல்லிளித்துக் கொண்டிருந்தான்.

தட்டிக் கேட்க எந்த நாதியும் அந்த நெரிசலில் முன்னுக்கு வராதது இளம்பரிதிக்குச் சங்கடத்தைத் தந்தது.

எல்லோரும் வேடிக்கை மட்டும் பார்த்தார்கள் — வாயெல்லாம் பல்லாக.. திறந்த விழிக் கதவுகளை மூடிக் கொள்ள மனமில்லாமல்.. அருவியாய்ப் பெருக்கெடுத்தோடும் வியர்வை பிசுபிசுப்பிலும் எப்படித்தான் சிரிக்க முடிகிறதோ அவர்களால்..

''நீ என்ன செய்யணுமோ செஞ்சிக்காவே.. நாவொண்ணும் அசையப் போறதில்லை..''

மீண்டும் திமிராகப் பேசினான் அந்த இளைஞன்.


இளம்பரிதிக்குக் கட்சி, கொள்கை, 17 வது பகுதி எல்லாம் மறந்து போயிற்று. கண்ணெதிரே நடக்கின்ற அநியாயம்தான் தெரிந்தது. விருந்தாய் வந்த முதியவரைச் சீண்டி அவமதிக்கும் அக்கிரமத்துக்கு பஸ்ஸில் அவ்வளவு பேரும் துணை போய்க் கொண்டிருந்தார்கள்.

யாரும் அதை எதிர்பார்க்கவில்லை. ''சொன்னா கேக்க மாட்ட, திமிரு பிடிச்ச ராஸ்கல்..'' என்றபடி இளம்பரிதி விருட்டென்று எழுந்தான். பாய்ந்து அந்த 'திமிர் பிடித்தவனின்' கழுத்தைப் பற்றி நெட்டித் தள்ளினான். ஆக்ரோஷமாய் அடித்து விட்டான். சோர்ந்து, சுருண்டு விழுந்து விட்டான் அந்த இளைஞன்.

கண்டக்டருக்கு இப்போதுதான் குலை நடுங்கியது. ''டிரைவரண்ணே.. வண்டியைக் கச்சேரிக்கு எடுங்க.. எதுவும் தப்புத்தண்டா ஆயிரக் கூடாது.''

பரபரப்பாய் டிரைவர் ஆக்ஸிலேட்டரை அழுத்தினார். ஆவேசம் தணியாதவனாய் இளம்பரிதி தொண்டை அதிர கர்ஜித்தான். ''போங்கய்யா! எப்படியும் ஒரு கொள்கைக்காகப் போராடிக் 'கச்சேரிக்கு'ப் போயிருக்க வேண்டியவன்தானே இப்ப மனுஷத் தன்மைக்காகப் போராடிப் போலீசுல மாட்டிக்கப் போறேன்...''


பஸ்ஸில் கூட்டம் புரியாமல் விழித்தது.



விஞ்ஞானத்த வளக்கப்போறேண்டி,
நாடு வளங்கொழிக்க வக்கப்போறேண்டி;
எம்மாட்டுக்கு தினம் **ஓ.கே.** போடுவேண்டி,
நாளுக்கிருபது லிட்டரு பாலு
கறக்கப்போறேண்டி!


ஆம்! டாடா **ஓ.கே.** பால் வறட்சியைப்போக்கும் ஒரு முழுமையான தீவனம்.

மாட்டுத்தீவனம் வாங்கும் பொழுது டாடாவின் **ஓ.கே.** தானா என்று பார்த்து வாங்குங்கள். டாடாவின் **ஓ.கே.** ஒரு முழுமையான கால்நடைத்தீவனம்.



தயாரிப்பவர்கள்:

டாடா
ஆயில் மில்ஸ்
கம்பெனி லிட்.



'அநியாயக் கண்டனம் ஐயா!'

* பிரஸார் என்றால் ஒலிபரப்பு; பிரசார் என்றால் பிரசாரம். பிரசார பாரதியாக டி.வி. — ரேடியோ இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் இப்போது சுயாட்சி வழங்க ஏற்பாடாகி வருகிறது. எனவே பிரஸார் பாரதி என்று எழுதுவதே சரி; பிரசார் பாரதி அல்ல.

சென்னை, நாதன்.

* டி.வி — ரேடியோ சுயாட்சிக்கு மக்கள் தயாராக வில்லை என வாதிடும் உஷா சுப்ரமணியத்தின் கூற்று விந்தையாக இருக்கிறது.

மேட்டுப்பாளையம், பி.ஏ. வஹாத்.

* சாத்தியம்தானா டி.வி — ரேடியோ சுயாட்சி? உரையாடலில் உஷாவிற்குத்தான் என் பாராட்டுக் கள். மற்ற இருவரும் சண்டை தான் போட்டார்கள்!

சென்னை — 39, எழில்.

* 'எந்தெந்த விஷயங்களுக்குத்தான் 'கவர் ஸ்டோரி' வெளியிடுவது என்ற வரைமுறை கிடையாதா' என்று முதலில் அலட்சியமாகப் படிக்க ஆரம்பித்து, இறுதி யில் பிரமித்துப் போனேன். குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கக் காவல் துறையினருக்குப் போலீஸ் நாய்கள் எந்த அளவுக்கு உறுதுணையாக இருக்கின்றன என்பது இப்போதுதான் புரிகிறது.

கும்பகோணம், எஸ். வெங்கடேசன்.

* 'நாயே' என்று சாதாரணமாக அலட்சியமாய்த் திட்டுவோம். ஆனால் நாய்கள் தமிழக காவல் துறைக்கே பெருமை சேர்க்கின்றன என அறியும் போது இனி சம்பந்தாசம்பந்தம் இல்லாமல் நாயே என்று கூறக் கூடாது எனத் தீர்மானித்து விட்டேன்.

ஊத்தங்கரை, கவி. செங்குட்டுவன்.

* புலனாய்வுத் துறையில் பயன்படுத்தப்படும் பெரும்பாலான நாய்களின் வால் வெட்டப்பட்டிருப் பது ஏன்? என்ற கேள்விக்குப் பதில் தெரியாமல் என் வேதாள மனம் முருங்கை மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தது! உங்கள் அட்டைப் படச் சிறப்பு கட்டுரையைப் படிக்க இணக்கமாக அதை அழைத்து வந்திருந்தேன்..... ஆனால், முடிவில் மீண்டும் விடை தெரியாமல், வேதாளம் 'பேக் டு முருங்கை மரம்!'

கும்பகோணம் — 1, கே. ஆனந்தன்.

* என்னங்க, இந்த வாரம் செமை 'மூட்'ல இருக் கறாப்பலே தெரியுதே? அதான் அட்டகாசமான ஜோக்ஸ்களையும், அருமையான துணுக்குகளையும் போட்டிருக்கிறே! இதே நிலை தொடர்ந்து நீடிக்குமா?

குத்தாலம், வி. சுந்தரராமன்.

* திருச்சியில் நடை பெற்ற தி. மு. கழக மாநாட்டுச் செய்திகளின் தொகுப்பைப் படு சூப்பர் வேகத்தில் திரட்டி, முதலாவதாக வெளியிட்ட பெருமையைக் கல்கி வார இதழ்தான் பெறுகிறது!

பெங்களூர், ப. மூர்த்தி.

* தலையங்கம் 'நறுக்'! பைசா பெறாத விவகாரங் களுக்கு நம்மவர்கள் அடித்துக் கொள்வதையும், தீர்த்து வைக்கப்பட வேண்டிய பிரச்னைகள் பல உள்ளதையும் நன்கு வெளிப்படுத்தியுள்ளீர்கள்.

மதுரை — 20, சி. மகேஷ்.

* என்னய்யா, அநியாயம்! தமிழகத்தில் இகாங் கிரஸ் இருக்கிறது என்பதை ஞாபகப்படுத்த கோஷ் டிப் பூசல்களில், சண்டைகளில் ஈடுபட்டுச் சலித்துப் போன "வாழப்பாடி அண்ட் கோ"வினர், இப்போது போராட்டக்களத்தில் இறங்கியுள்ளதைத் — தலை யங்கத்தில் கண்டித்திருக்கிறீரே!

வேலூர், கே.ஆர். தேவேந்திரன்.

* பிரதமர் இருக்கும் கூட்ட மேடையில் மாநில முதல்வர், "ரகளை" நடப்பது குறித்து தமது பேச்சில் குறிப்பிட்டு விட்ட பிறகு, போலீசார் அது குறித்து அடுத்தக்கட்ட நடவடிக்கை எடுத்துத்தான் தீரவேண் டும். கைது நடவடிக்கை, எடுக்காமல் இருந்திருந் தால், முதல்வரின் புகார் மீது போலீசார் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற பழி போலீஸ் துறை மீது விழுந் திருக்கும். எனவேதான் ஜனதா தள கட்சியினர் கைது செய்யப்பட்டனர். அரசு அவர்களை விடுவித்திருக் கிறது.

திருச்சி — 16, தி. அன்பழகன்.

* பஸ் ஓட்டுகிற டிரைவர் மற்றும் கண்டக்டர்களைக் கதைகளிலும், கவிதைகளிலும் திட்டி விட்டுப் போவது எளிது. ஆனால் அவர்களது உள்ளத்தைத் தொட்டுக் காட்டுவது கடினம். மேலாண்மை இதில் உள் ஆழங்களைத் தொட்டுப் போகிறார்.

தேனி, அல்லி உதயன்.

* பழகத் தெரியவேண்டும் — கதை இயல்பாகவும், மனத்தைத் தொடும் சிறப்பைப் பெற்றதாகவும் இருந் தது. மாருதி வரைந்த ஓவியம் கதையுடன் போட்டி போட்டது!

சென்னை — 39, அ.க. கிருட்டிணன்.

* மாமியாரின், பழக்கத்தையும்,. மதியாத்தன்மை யினையும், கணவனுக்குக் குத்திக்காட்ட, சம்பந்த மில்லாதவர் வீட்டில் அநாகரிகமாக நடந்து கொண்ட ராதாவின் செயலை நியாயப்படுத்த, கதாசிரியர் முயன்று தோற்றுத்தான் போயிருக்கிறார்.


மதுரை — 20, வே. மாறியாடும்பெருமாள்

* பழகத் தெரிய வேண்டும் என்ற கதையில் ஓரிடத்தில் கோபி என்பதற்கு முரளி என்று தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது! குழம்பிப் போய் விட்டோம்! இதுபோன்ற குறைகளைத் தவிர்க்கவும்.

சென்னை — 4, ஏ. எஸ். குணசீங்.

வேஷம்

கமலா கந்தசாமி



"அண்ணே.... ஒரே ஒரு போஸ்ட் தான் காலியாய் இருக்கு. நீங்க சொன்னால் நிச்சயம் டி.ஈ.ஓ. கேட்பார். உங்களை நம்பித்தான் இருக்கேன். இருபதாயிரம் செலவானாலும் பரவாயில்லை...!"

பக்கத்து கிராம இணைச்செயலர் தமிழ்மாறன், கெஞ்சுவது போல் கூறிக் கொண்டே, ஹேண்ட் பேக் ஜிப்பைத் திறந்தார்.

உள்ளே.....

இரண்டு புத்தம் புதிய நூறு ரூபாய் நோட்டுக் கட்டுகள் மின்னின. வாசலில் நிழலாடுவது தெரிந்தது.

"முதலில் பணத்தை உள்ளே வை..." என்றார் எம்.எல்.ஏ. வாசலில் எட்டிப் பார்த்து.

"யார் அது....." என்றார்.

"நான்தான்...." என்ற மெல்லிய குரலைக் கேட்டு...

"அட அட.... சாரா? வாங்க... வாங்க... என்ன சார்... அப்படியே வாசலில் நின்று கொண்டு... நான் யாரோன்னு பார்த்துட்டேன். நீங்கபாட்டுக்கு உள்ளே வரவேண்டியது தானே. எம்.எல்.ஏன்னா என்னசார். நான் உங்கள் மாணவன்... சார்..." என்று வரவேற்றவரை அன்புடன் நோக்கினார் ஆசிரியர் வடிவேலு.

'ஆஹா..... இவன் அல்லவா உண்மையான மாணவன். அதுவும் இந்தக் காலத்தில் இப்படி ஒரு குருபக்தியா...?' என்ற வியப்புடன் உள்ளே வந்தார் வடிவேலு.

"உட்காருங்க சார்!" என்றார் எம்.எல்.ஏ.

வடிவேலு சார் உட்கார்ந்த பிறகும் எதிரே உட்காராமல் நின்று கொண்டிருந்த அவரைப் பார்த்து. "சும்மா உட்காருப்பா.." என்றார் வடிவேலு சார்.

"பரவாயில்லை சார். உங்களுக்கு முன்னாடி உட்கார மனசு வரமாட்டேங்குது சார்...." என்ற எம்.எல்.ஏ, எதிரே அமர்ந்திருந்த தமிழ்மாறனைப் பார்த்து, "தம்பி... இவர் யார் தெரியுமா? இவர்தான் என் குரு; ஆசான்; வழிகாட்டி! என் மனத்தில் சின்ன வயசிலேயே நேர்மையை விதைத்தவர். இன்றைக்கு அரசியலில் இந்த அளவுக்கு நான் வளர்ந்து செல்வாக்கோடு இருக்கிறதுக்கு ஐயாதான் காரணம்..." என்று பேசிக் கொண்டே போனார்.

வடிவேலு சாருக்குப் பெருமிதமாக இருந்தது. வரும் போது கூட 'இப்போ எப்படி இருப்பானோ' என்று சந்தேகப் பட்டுத் தான் வந்தார்.



என் உயிர்த்

பாரதிராஜாவுக்குப் பழைய வண்ணாரப்பேட்டை பாலாஜி எழுதும் பகிரங்கக் கடிதம்:

வணக்கம் வாத்யாரே!

எனக்கு ரொம்ப நாளாவே மனசிலே ஒரு கொறை. உன்னாண்டை சொல்றதுக்கு இன்னா? நீ எப்பவும் தெக்கத்தியானுங் களை வெச்சே கதை பண்ணிங்கிறியே, நம்ப பேட்டை பக்கம் திரும்பிப் பாக்க மாட் டேன்றியேன்னுதான். இந்த வாட்டி அத்தைத் தீத்துப்புட்டே. ரொம்ப டாங் ஸும்மா.

இன்னா, ப்ரசண்ட் பாலிடீஸ்காரங்க வண்டவாளத்தையெல்லாம் தண்டவாளத் துலே ஏத்திங்கிறே. அத்தோட நிறுத்திக் காம சஸ்பென்ஸா ஒரு கதையும் வச்சிங் ்றே, பாரு, அதான் நம்ம பாரதிராஜா ரது!

தலைவர் தருமனா ஆக்ட் குடுக்கறாரே அந்த தோஸ்த்தை எங்கேருந்துபா புடிச் சாந்தே? இன்னா பேச்சு, இன்னா ஸ்டைலு, தூள் கிளப்பிட்டாரு போ. அந்த பாபுதான் வசனம்னு கூடத் தெரியுது! வளத்தெடுத்த வடிவுக்கரசியண்டை, 'ஏயக்கா, என்னிய குப்பைத் தொட்டியண்டை கண்டெடுத்து வளத்தேன்னுதானே உங்கண்ணனுக்கு இத்தினி கேவலமாப் பூட்டேன்,'னு அந்தத் தம்பி கண்ணு கலங்கறப்ப ரொம்ப ஃபீலிங்கா யிட்டேன் வாத்யாரே! வயசுப் பொண்ணு ஆம்புட்டாப் போதுமே. ஒவ்வொருத்தன் இன்னா ஒராய் ஒராஞ்சுக்குவான். தொட்டுக் காம எட்ட நின்னே லவ்வடிக்கிறது படா டீஸண்டா. இல்லே? கச்சிக்காக இவுரு சொந்த செலவுலே சைக்கிள் ஊர்கோலம் கூடப் போறாராம். தலை மூசனையைப் பாரேன்!

தெரிஞ்ச மூஞ்சின்னு வடிவுக்கரசி — பொன்னம்மாதான் — போட்டியாங்காட்டி யும்? பட்டை அடிக்கிற பொம்பளையைப் பாத்துங்கீறேன். ஆனா பட்டை அடிச்சிக் கினே கூட இருக்கிறவனைக் குடிக்கா தேன்னு தடுக்குதே — ஹே, சூப்பர் காரெக் டர், தோஸ்த்! தம்பி தருமன் யாரோ பொண்ணை இஸூத்தாந்துட்டான்னு குப்பமே குபார்பட்டுப் போறப்ப, இது இஸூத்து முடிஞ்சிகினு யார்ராதுன்னு கும் பலை ஒதுக்கிக்கினு போவுதே அதுவும் சரி;

'நாளைக்குப் பையனுக்கு டீச்சர் போஸ்ட்டுக்கு இண்டர்வியூ. ஒரே ஒரு இடம்தானாம். இந்த வருஷத்தோடு ரிட் டயர் ஆகப்போகிறோம். வருகிற கொஞ்சம் பணம் ஒரு பெண்ணைக் கட்டிக் கொடுக்க வாங்கிய கடனுக்குத்தான் சரியாய் இருக் கும். பையனுக்கு ஒரு வேலை கெடச்சிட்டா குடும்பத்தைச் சமாளிச்சிடலாம். இவன் சிபாரிசால் நிச்சயம் கிடைக்கும். சொல் வானா...?' என்று சந்தேகத்துடன் வந்த வடிவேலு சார் மகிழ்ச்சி அடைந்தார்.

'இந்த அளவுக்கு நம்மீது பக்தி வச்சிருக் கிறவன் நமக்குச் செய்யாமல் யாருக் குச் செய்யப் போகிறான்?' என்ற எண்ணம் வடிவேலு சாரின் மனத்தில் உதித்ததும் பையனுக்கு வேலையே கிடைத்து விட்டது போல மகிழ்ந்து போனார்.

எம்.எல்.ஏவோ தமிழ்மாறனைப் பிடித் துக் கொண்டார். "தம்பி.... தமிழ்மாறன்! நீங்க கூட அந்த டீச்சர் போஸ்ட்டுக்குச் சிபாரிசுக்கு வந்த போது நான் நிர்தாட் சண்யமா மறுத்தது கண்டு என்மீது கோபப் பட்டு இருப்பீங்க.... இன்றைக்கு அரசியலில் கூட நான் நேர்மையா இருக்கேன் என்றால் அதுக்கு ஐயாவின் போதனைதான் முக்கிய மான காரணம். இப்போ பாருங்க இருக் கிறது ஒரே ஒரு போஸ்ட். நான் போய் எம்.எல்.ஏன்னு சொல்லிட்டுத் தலை யிடறது நல்லா இருக்குமா. அதுதான் தமிழ் மாறன்...... என்னை மன்னிச்சிடுங்க.. நான் யாருக்குமே சிபாரிசுக்குப் போக மாட்டேன் என்பதைத் தம்பிக்கு நீங்க சொல்லுங்க சார்....." என்று வடிவேலு வைப் பார்த்தார் எம்.எல்.ஏ.

இடிந்து போனார் வடிவேலு சார்.

இந்தநிலையில் 'நீ என் பையனுக்குச்

தோழன்



அப்பாலே அந்தப் [illegible]
த்திகினு, 'யாருமா நீ. பேரச் சொல் லாட்டிப் போறே. ஊரையாவது சொல்லு... ஹூம்... இந்தப் பொண்ணு மனசிலே பெரிசா பாரம் கீது. அதான் பேச மாட் டேன்னுது'ன்னு கரிசனம் காட்டுதே அதுவும் சரி; 'தருமா... தருமா...'ன்னு கூவித் துடிச்சு உசிரை விடுதே அதுவும் சரி, படா செண்ட்டிமெண்ட் வாத்யாரே!

அந்தச் சிட்டு — ரொம்பச் சாமர்த்திய மாத்தான் டீல் பண்ணிங்கிறே. அந்தப் பொண்ணுக்குச் சரியாப் பேசவே வராதாங் காட்டியும்? மொத்தம் பத்துத் தடவை வாய் மூத்து உதுந்துருக்குமா? அதுங்கண்ணை யும், சிரிப்பையும் பேச வச்சி வித்தை காட்டி யிருக்கியே, டக்கர். ஆமா, இதுலே காமெரா சாமர்த்தியத்துக்கும் பங்கு இருக்குது இல்லே? சொம்மா சொல்லக் கூடாது. அந்த மஞ்சாப்பூ, ஆத்து ஓட்டம், ரெண்டு பக்கம் சிப்பாய் கணக்கா நிக்கற மர வரிசைக்கு நடுவாந்தரத்திலே ஒத்தையடிப் பாதையிலே பூப்பூவா ஓடற கலருங்க— அப்படியே அள்ளிக்கினு போவுது.

ரஞ்சன்னு பேர் மாத்திட்டா கண்டி நம்ம தோஸ்த் லிவிங்ஸ்டனைத் தெரியாதாங் காட்டியும்? கில்லாடி மாமா வேலைக்காரு வாத்யாரே, அந்த டில்லி பாபு! என்னமோ கிங்மேக்கர்ஸ்னு சொல்லுவாங்களே, அந்த மாதிரி இந்த ரக ஆளுங்கதான் இன்னிக்கி எம். எல். ஏ ..மினிஸ்டர் மேக்கருங்களா?

அனாமத்தா கார்ட்டூன் மூஞ்சியை வச்சி கினு 'சிட்டிசன்'னு ஒரு ஆளு நடமாடிகினு கிறாரே, அது யாரு? உன் மனச்சாட்சியா? தாவலை, படத்தைப் பாக்கிறவங்க இன்னா கேக்கணும்னு நினைக்கிறாங்களோ அதை அவர் கேட்டுடறார்.

ஆமா, இன்னான்னாவோ பேஜார் பண்றாங்க. அநாயம் நடக்குது. அல்லாம் சரி. இதுக்கெல்லாம் இன்னாய்யா மாத்து? நாயம் கிடைக்கணும்னா இன்னா செய்ய ணும்ன்றே? பொல்லாதவங்களையெல் லாம் பொணமாக்கிப் போட்டுட்டு அத்தினி பேரும் காப்பு மாட்டிகினு கையைத் தூக்கி கினு ஊர்கோலம் போறதா? அத்தையும் தான் காட்டியிருக்கறே! இல்லே வாத் யாரே, வேற இன்னாவோ செய்யணும். நாலு பெரிசுங்களைக் கேட்டுப் பாரு.

கிடக்கு, படம் எப்படி இருக்குன்றியா? அதென்ன, சமுதாயப் பிரச்னையா? அப்படி ஒண்ணை நெஞ்சிலே ஆணி அடிச்சி மாட்டி விட்டுட்டே பாரு! அதனால திக்திக்னு மனசிலே ஒரு வலி வருது ராசா.

— பி. எஸ். எஸ்.

சிபாரிசு செய்யணும்னு' எப்படி சொல்றது என்ற குழப்பத்துடன்....

''ஆமாம் தம்பி... இந்தக் காலத்தில் ஒரு வித்யாசமான மனிதர். இது போன்ற நல்ல வர்கள் எனது மாணவர்கள் என் று சொல்லிக் கொள்ள எவ்வளவு பெரு மையா இருக்குது தெரியுமா....?'' என்றபடி வடிவேலு சார் எழுந்தார்.

''என்ன சார் எழுந்துட்டீங்க. இருங்க காப்பி குடிச்சிட்டுப் போகலாம். அதுவும் எதுக்காக வந்தீங்கன்னு சொல்லலே....'' எம்.எல்.ஏ பதறினார்.

''ஒண்ணுமில்லேப்பா...; சும்மா இந்தப் பக்கம் ஒரு வேலையா வந்தேன். உன் நினைவு வந்தது. அப்படியே பார்த்துட்டுப் போகலாம்னு தான்.... அடுத்த முறை வர்றப்போ காப்பி சாப்பிட்டுக்கிறேன்...'' என்றபடி வடிவேலு சார் வெளியே சென்றார்.

வாசல் வரை வந்து சாரை வழி அனுப் பிட்டு வந்த எம்.எல்.ஏவை ஆச்சரியத் துடன் நம்ப முடியாமல் பார்த்தார் தமிழ் மாறன்....

''என்னண்ணே.... எப்படியும்.... நீங்க தான்.....'' என்று தடுமாறினார்.

''சரிதான். இருபது ஆயிரத்தையும் கொண்டா! வேலை உன் ஆளுக்குத்தான். நம்பிக்கையோடு வச்சிட்டுப்போ'' என்று சொல்லி அலட்சியமாகச் சிரித்தபடி சிக ரெட்டை உருவி வாயில் பொருத்திக் கொண்டார் எம்.எல்.ஏ.

உடன் தீக்குச்சியைக் கிழித்து அவருக்கு சிகரெட்டைப் பற்ற வைக்க உதவிய தமிழ் மாறன்....

''அண்ணே... நீங்க கில்லாடிண்ணே'' என்றார்.

கவிதைக்குள் ஒரு கவிதை:


சொன்னதைச் செய்தவன்; செய்வதைச் சொன்னவன்!

"சொன்னதைச் செய்வேன் செய்வதைச் சொல்வேன்" என்று கூறி அதன்படி நடந்து காட்டியவன் ராமன். கம்பராமாயணத்தில், சுந்தரகாண்டத்தில், சூளாமணிப் படலத்தில் ஒரு பாடல். சீதை, அனுமன் மூலம், ராமனுக்கு, அவன் தன்னைப் பாணிக்கிரகணம் செய்துகொண்ட போது தந்த ஒரு வரத்தை, அல்லது உறுதிமொழியை, நினைவுபடுத்துகிறாள். பாடல் இதுதான்.

"வந்தெனைக் கரம் பற்றிய
வைகல்வாய்
இந்த இப்பிற விக்கிரு மாதரைச்
சிந்தை யாலுந் தொடேனென்ற
செவ்வரம்
தந்த வார்த்தை திருச்செவி
சாற்றுவாய்"

இதில் நான் கண்ட நயம்: ராமன் சத்தியசந்தன். ஒன்றைச் சொல்லி விட்டு, எதிர்டையாக நடந்து, அதை நியாயப்படுத்தும் அரசியல்வாதி இல்லை. ராமாவதாரத்தில், ராமருக்கு ஒரு மனைவிதான். இதனைத் தான் கைத்தலம் பற்றும் போது சீதைக்கு அவன் உறுதிமொழியாக அளித்தான். இடத்தில், கெட்டிக்காரரும், குறும்புக்காரருமான கவிச்சக்ரவர்த்தி, ஒரு பொடி வைத்து இந்தப் பாடலைப் பாடி இருக்கிறார்! பாடலின் இரண்டாவது அடியைப் படியுங்கள் தெரியும். "இந்த இப்பிறவிக்கிரு மாதரை.." என்று தொடங்கி மூன்றாவது அடியில் "சிந்தையாலும் தொடேன்" என்று முடிக்கிறார். "ஏ சீதே! நன்றாகக் கவனி! 'இந்த இப்பிறவி' அதாவது இந்த ராமாவதாரப் பிறவிக்கு மட்டும்தான் இந்த வாக்குறுதி அதாவது 'இரு மாதரைச் சிந்தையாலும் தொடேன்' — என்பது. வரப்போகும் பிறவி இருக்கிறதே — கிருஷ்ணாவதாரம் — அதற்கு இந்த வாக்குறுதி செல்லாது. ருக்மிணி, சத்தியபாமை — என்று இரண்டு மாதர்களை அப்போது மணம் புரிவேன். கண்டு கொள்ளக் கூடாது" என்பது போல இருக்கிறது. கம்பருக்குத் தன்னுடைய ராமன் நூற்றுக்கு நூறு சத்திய சந்தனாக இருக்க வேண்டும் என்ற ஆவல் அவர் வைத்துள்ள 'பொடி'யில் தெரிகிறதே! அதை நான் ரசித்தேன்.

— மகரம், சென்னை — 83.



பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/; விமானத் தபால் ரூ. 350/-.



மின்னலடிக்குது அதிவெண்மை
Registered as Newspaper in Sri Lanka
மிஞ்சிவெளுக்குது ஒரு துளி ரின்
SUPER POWER
RIN
STRIKES WHITER
WASHES MORE
மாபெரும் சக்தி ரின்
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு